# தொழிலாளர் பாதை

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

இலங்கையில் வெளியாகும் ஒரே சோசலிஸ்ட் தமிழ் பத்திரிகை

மாத இதழ் 502 | 2000 மே | ரூபா 10.00


UNIVERSITY OF JAFFNA LIBRARY 0 AUG 2000

உள்ளே


- இலங்கை கடற்படை ரோந்து படகு மோதி உடப்பு மீனவர் கொலை ........ 3
- தனியார்மயத்தின் பின் தோட்டத் தொழிலாளர்கள் சம்பளம், சேவை நிலைமை வீழ்ச்சிக்கு முகம் கொடுத்துள்ளனர் ........ 4
- தமிழ்க் கைதிகளைக் கொன்ற அதிகாரிகளைக் கண்டு பிடித்து ........ 5
- இலங்கையின் வரவு செலவுத் திட்டம்: பாதுகாப்புச் செலவுகளையும் சர்வதேச நாணய நிதியத்தின் சீர்திருத்தத்தையும் அதிகரித்துள்ளது ........ 6
- கிளின்டனின் இந்தியத் துணைக் கண்ட விஜயம்: ........ 7 – 9
- பூகோளமயமாக்கமும் அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கமும் 12 – 13
- முதலாளித்துவத்தின் எடுபிடிகளான தீவிரவாதிகளின் ... 14 – 15




இந்து தீவிரவாதிகளின் பிரச்சாரத்துக்கு எதிராக தீபா மேத்தா பேசுகிறார்

பக்கம் – 9

# ஆனையிறவில் இராணுவம் வீழ்ச்சி கண்டமை இலங்கையில் அரசியல் நெருக்கடியை தூண்டிவிடும்

நமது நிருபர்

வட இலங்கையில் இரண்டு விரகி முக்கியத்துவம் வாய்ந்த இராணுவ முகாம்களான ஆனையிறவும் இயக்கச்சியும் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் ஏப்பிரல் 22ம் திகதி வீழ்ச்சி கண்டுள்ளது. இது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அரசாங்கம் முகம் கொடுத்துள்ள அரசியல் நெருக்கடியை மேலும் உக்கிரமாக்குவது நிச்சயம்.

நாட்டின் ஏனைய பாகத்தை யாழ்ப்பாணக் குடாநாட்டுடன் இணைக்கும் இந்த ஆனையிறவில் அமைந்துள்ள முகாமைக் காக்க கடும் இராணுவப் பாதுகாப்பு ஏற்பாடுகளை பொதுஜன முன்னணி அரசாங்கம் செய்திருந்தது. கடந்த 4 வாரங்களாக இப்பகுதியில் கடும் சண்டை இடம் பெற்று வருவதோடு இரு தரப்பினரும் பீரங்கித் தாக்குதல்களிலும் ஷெல் அடிகளிலும் ஈடுபட்டு வந்தனர். தமிழீழ விடுதலைப் புலிகள் ஆனையிறவுக்கு தெற்கேயுள்ள இராணுவ பாதுகாப்பு நிலைகளை கைப்பற்றியதோடு கடல் மார்க்கத் தொடர்புகளையும் துண்டித்தனர். வெற்றிலைக்கேணியை சூழவுள்ள இடங்களைக் கைப்பற்றியதன் மூலமும் சமீபத்தில் பிரதான பெருந்தெரு விநியோக வழிகளை துண்டித்ததன் மூலமும் ஆனையிறவு முகாம் அடியோடு தனிமைப்படுத்தப்பட்டது.

யுத்தம் தொடர்பான செய்திகள் அரசின் கடும் தணிக்கைக்கு உட்பட்டு இருப்பதாலும் பத்திரிகையாளர்கள் யுத்த முனைக்கு செல்வது தடை செய்யப்பட்டுள்ளதாலும் ஏப்பிரல் 22 சனிக்கிழமை ஆனையிறவிலும் இயக்கச்சியிலும் இடம் பெற்ற சம்பவங்கள் தொடர்பான அறிக்கைகள் தெளிவற்றதாக உள்ளன. தமிழீழ விடுதலைப் புலிகளின் செய்திகளின்படி 1000 இலங்கை இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் 48 மணித்தியாலங்களாக இடம் பெற்ற உக்கிரமான சண்டையின் பின்னர் இராணுவத்தினர் ஆனையிறவையும் இயக்கச்சியையும் கைவிட்டு யாழ்ப்பாண நகரை நோக்கி பின்வாங்க நேரிட்டதாகவும் தெரிகிறது.

விடுதலைப் புலிகளின் அறிக்கை கூறியதாவது: "தமிழீழ விடுதலைப் புலிகளின் விசேட படையினரும் கொமாண்டோ பிரிவினரும் அதிகாலையில் [ஏப்பிரல் 22] இயக்கச்சி இராணுவ முகாமினுள் ஊடுருவி பல்முனைத் தாக்குதல்களில் ஈடுபட்டதோடு நன்கு பலப்படுத்தப்பட்ட முகாமை, பல மணிநேர உக்கிரமான போரின் பின்னர் கைப்பற்றினர். முகாமின் நடு மையத்தினுள் ஊடுருவிய விடுதலைப் புலிகளின் கொமாண்டோக்கள் பல இராணுவ கனரக வாகனங்களையும் தாங்கிகளையும், கவச வாகனங்கையும் ஆயுதக் குதங்களையும் நாசமாக்கினர்". அத்தோடு விடுதலைப் புலிகள் தாம் இலங்கை இராணுவத்தின் கவச வாகனங்களையும், பீரங்கிகளையும்

17ம் பக்கம் பார்க்க

## தமிழ் வெப் தளம் ஆரம்பம்

**http://www.wsws.org/tamil**

உலக சோசலிச வெப் தளத்தில் (இணையத்தில்) தமிழ் மொழியிலான கட்டுரைகளை மே தினத்தில் (மே1) வெளியிட உள்ளோம் என்பதை அறிவிப்பதில் சோசலிச சமத்துவக் கட்சி பெருமகிழ்ச்சியடைகின்றது.

தொழிலாளர் பாதையில் வெளிவரும் முக்கியமான கட்டுரைகள், செய்திகளையும், உலக சோசலிச வெப் தளத்தில் ஆங்கிலத்தில் வெளியாகும் கட்டுரைகளின் தமிழாக்கத்தையும் இதில் கண்டு கொள்ளலாம். சமூக, பொருளாதார, அரசியல், மற்றும் வரலாற்று தத்துவார்த்த பிரச்சினைகள் தொடர்பான ஆய்வு கட்டுரைகள் இதில் இடம் பெறும்.

## யுத்தத்துக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாணும் முயற்சி: அரசியல் ஸ்தம்பித நிலை தொடர்கிறது

விஜே டயஸ்

கடந்த இரண்டு வருடங்களாக இலங்கையின் பெரும் வர்த்தக, நிதி நிறுவனங்களின் முன்னணி பிரதிநிதிகள் 16 வருடங்களுக்கு மேலாக இலங்கையின் வடக்கு- கிழக்கு மாகாணங்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கு எதிராக இடம் பெற்று வரும் யுத்தம் தொடர்பாக பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு காணும் விடயத்தில், இலங்கையின் முக்கிய அரசியல் கட்சிகள் இணக்கத்துக்கு வருவது நாடு முகம் கொடுத்துள்ள முதலும் முக்கியமுமான விடயமென வலியுறுத்தி வந்துள்ளன.

அவர்களின் வாதத்தின்படி அத்தகைய ஒரு ஏற்பாடு இல்லாமல் இலங்கை பூகோளரீதியான பொருளாதாரத்தில் இருந்து மேலும் தள்ளிவைக்கப்பட்டு விடுவதோடு உலகளாவிய ரீதியிலான முதலீடு, நிதி மூலதனத்தை ஈர்க்கும் போராட்டத்தில் தோல்வி காணவும் நேரிடும்.

ஆனால் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பொதுஜன முன்னணி அரசாங்கமும் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான முக்கிய எதிர்க் கட்சியான யூ.என்.பி.யும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்காகத் தன்னும் ஒரு கூட்டு உடன்பாட்டுக்கு வரத் தவறிவிட்டன.

ஒரு "சமாதான திட்டம்" தொடர்பாக ஒரு உடன்பாட்டை எட்ட இக்கட்சிகள் தவறியமை வெறுமனே முன்னணி முதலாளித்துவ அரசியல்வாதிகளின் தனிப்பட்ட இலாயக்கற்ற நிலையின் வெளிப்பாடு மட்டும் அல்ல; சந்தேகத்துக்கு இடமற்ற விதத்தில் இவை இதில் ஒரு பாத்திரத்தை வகித்த போதிலும் இது ஒரு மிகவும் அடிப்படையான போக்கின் வெளிப்பாடாகும்.

பிராந்தியங்களுக்கு அல்லது மாகாணங்களுக்கு அதிகாரப் பகிர்வை வழங்கும் அரசியல் பொதியின் அடிப்படையில் பிரச்சினையை முடிவுக்குக் கொணரும் அரசியலமைப்பு தீர்வு எனப்படுவது இராணுவத்தின் ஒரு பகுதியினருடன் வலதுசாரி சிங்கள சோவினிச சக்திகளின் வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடுமோ என இந்த இரண்டு கட்சிகளும் அஞ்சுகின்றன. "ஒற்றையாட்சி சிங்கள அரசு"க்கு எதிராக அதைப் பலவீனப்படுத்திவிடுமோ என அஞ்சுகின்றனர்.

யூ.என்.பி.யும் சரி பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைமைப் பங்காளியான சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் சரி தமிழர் எதிர்ப்பு இனவாதத்துள் தலைமூழ்கிப் போன வரலாறு படைத்தவை. கடந்த காலத்தில் தாம் கைதூக்கி விட்டதும் அடிப்படையாகக் கொண்டிருந்ததுமான சக்திகளிடமிருந்து அத்தகைய ஒரு வன்முறைக்கு முகம் கொடுக்க வேண்டி நேரிடுமோ என எண்ணுகின்றனர்.

2ம் பக்கம் பார்க்க


அனைத்துலக சோசலிச சமத்துவத்துக்காகப் போராடுவோம்!

மே தினம் 2000



ஊர்வலம் : மாலை 1 மணிக்கு
நியூஹாம் சதுக்கம், கொச்சிக்கடை

பொதுக் கூட்டம் : மாலை 4 மணிக்கு
இரத்தினம் மைதானம், கொட்டாஞ்சேனை

சோசலிச சமத்துவக் கட்சி
இளம் சோஷலிஸ்டுகள்


**இனவாத யுத்தம் வேண்டாம் !**

**சிங்கள – தமிழ் தொழிலாளர் ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவோம் !**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிலாளர் பாதை

இலங்கையில் வெளியாகும் ஒரே சோசலிஸ்ட் தமிழ் பத்திரிகை

ஆசிரியர்: கே. ரத்னாயக்க

துணை ஆசிரியர்: எஸ்.இராசேந்திரன்

பதிப்பாளர்: தீபால் ஜயசேகர

சோசலிச சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளர்: விஜே டயஸ்

அலுவலகம்:

90. 1 வது மாளிகாகந்த
ஒழுங்கை,
கொழும்பு - 10
தொலைபேசி: 682220


# யுத்தத்துக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாணும் முயற்சி:...

முன் பக்கத் தொடர்ச்சி

இந்த அரசியல் நிலைமைகள் தான் யுத்தத்துக்கு ஒரு தீர்வு காணும் சமாதான பேச்சுவார்த்தைகளுக்கும் பேரம்பேசல்களுக்குமான அடிப்படையாகியுள்ளன. முதலாளி வர்க்கத்தின் நெருக்குவாரம் காரணமாக இந்த இரண்டு கட்சிகளும் ஒரு "சமாதான திட்டத்தை அபிவிருத்தி செய்யவும் யுத்தத்துக்கு நிதி வளங்களை திசைதிருப்புவதற்கு முடிவு கட்டவும்- குறைந்த பட்சம் இதற்கு முடிவுகட்டுபவர்களாகத் தன்னும் தம்மைக் காட்டிக் கொள்ள வேண்டும் என உணர்ந்துள்ளன. எவ்வாறெனினும் இவற்றில் எவை தன்னும் கடும் எதிர்ப்புக்கான சாத்தியங்களின் மத்தியில் இருந்து தோன்றக் கூடிய ஆபத்தின் மத்தியில் ஒரு திட்டவட்டமான திட்டத்தை நடைமுறைக்கிட விரும்பவில்லை.

இதன் பெறுபேறாக அரசியலமைப்புத் திட்டம் சம்பந்தமான பேச்சுவார்த்தைகள்- அரை தன்னாட்சி பிராந்தியங்களில் அல்லது மாகாணங்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் அதிகாரங்களைப் பெற்றுக் கொள்ளும் விதத்தில் ஒரு பேச்சுவார்த்தை மூலமான தீர்வை எட்டுவதன் அடிப்படையிலான அணுகுமுறை- கட்சித் தலைவர்கள் சூழ்ச்சிகளிலும் காலங்கடத்துவதிலும் முன்னொரு போதும் இல்லாத விதத்தில் ஈடுபட்டுள்ளதால் ஒரு கேலிக்கூத்தாக மாறும்.

இன்றைய இறுதி திருப்பங்களின் மத்தியில் இந்த இரண்டு கட்சிகளுக்கும் இடையேயான பேச்சுவார்த்தைகள் குறைந்த பட்சம் ஆகஸ்ட் வரைக்கும் தொடரும் என அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இந்தக் காலதாமதத்துக்கு விக்கிரமசிங்கவும் குமாரதுங்கவும் ஏப்பிரல் மாதத்தில் இருந்து தொடர்ந்து ஆஜராகாது இருந்து வருவதே முக்கிய காரணமாகச் சொல்லப்படுகின்றது. அவர்கள் வெளிநாடு செல்லாது நாட்டில் இருந்திருந்தாலும் கூட பெரிதாக ஒன்றும் நடந்திராது என்பதை நடந்து முடிந்த பேச்சுவார்த்தைகள் பற்றிய ஆய்வு எடுத்துக் காட்டுகின்றது.

இது சம்பந்தமாக கருத்துத் தெரிவிக்கையில் இலங்கையில் வெளியாகும் 'சன்டே லீடர்' பத்திரிகை கூறியதாவது: செவ்வாய்க்கிழமை[மார்ச் 21] இடம் பெற்ற கூட்டம் குறிப்புக்களை திருத்துவது சம்பந்தமாக ஒரு மணித்தியாலத்துக்கு மேலாக செலவிட்டது. மற்றொரு மணித்தியாலத்தை பொதுஜன முன்னணி அரசாங்கத்துக்கும் யூ.என்.பி.க்கும் இடையேயான அரசியல் பிணக்குகளை கலந்துரையாட ஒதுக்கியது. 30 நிமிடங்கள் மட்டுமே அரசியலமைப்பு சீர்திருத்தங்களின் பேரில் செலவிடப்பட்டது.

இறுதியாக ஒரு இருதரப்பு அரசியலமைப்பு பொதி உருவாகுமிடத்து அது ஆகஸ்ட் நடுப்பகுதிக்கு முன்னதாக- பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கு ஒரு கிழமைக்கு முன்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, பொதுத் தேர்தல் நடாத்தப்படும். இந்தப் பிரேரணைகள் அங்கீகரிக்கப்பட்டாலும் கூட அடுத்த தேர்தல் திகதி [அக்டோபர்] வரை தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகள் இடம்பெற மாட்டாது.

விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகளின் பேரில் ஒரு பொது அணுகுமுறையை ஆய்வு செய்யவென பொதுஜன முன்னணி அரசாங்கத்தையும் யூ.என்.பி. யையும் ஒருங்கிணைக்க எடுக்கப்பட்ட முதல் முயற்சி இது அல்ல. பிரித்தானிய வெளிநாட்டு அமைச்சின் இராஜாங்கச் செயலாளர் லியாம் பொக்ஸ் 1997 ஏப்பிரல் 03ம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்தது இதற்காகவே. எவ்வாறெனினும் அவை எல்லாம் அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நடாத்தும் பேச்சுவார்த்தைகளைப் பற்றி எதிர்க் கட்சித் தலைவருக்கும் யூ.என்.பி.க்கும் தொடர்ந்து அறிவிக்க வேண்டும் என்பதன் பேரிலான ஒரு உடன்படிக்கையாக விளங்கின.

கடந்த ஆண்டில் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் குமாரதுங்க லியாம் பொக்ஸ் உடன்படிக்கை பற்றி உச்சாடனம் செய்ததோடு விடுதலைப் புலிகளுடன் அந்தரங்கமானதும் . தனிப்பட்டதுமான அணுகுமுறைகளையும் கடைப்பிடித்தார். குமாரதுங்கவினால் நேரடிப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க முடியாது போனமையும் அதைத் தொடர்ந்து இடம்பெற்ற இராணுவப் பின்னடைவுகளும் பொதுஜன முன்னணி ஆட்சியாளர்களின் நிலைப்பாட்டில் மாற்றம் கொணர்ந்தது. சிங்கள சோவினிஸ்டுகளின் யுத்த வெறிக் கூச்சலைத் தணிக்கும் பொருட்டு குமாரதுங்க யூ.என்.பி. விடுதலைப் புலிகளுடன் இரகசியக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட்டுள்ளதாகக் குற்றம் சாட்டியது. இலங்கை இராணுவத்துக்கு தோல்வியை ஏற்படுத்தும் பொருட்டு இராணுவப் பெரும் புள்ளிகளுடன் சேர்ந்து யூ.என்.பி. சதி செய்வதாகவும் குற்றம் சாட்டியது. கடந்த ஆண்டு டிசம்பர் 21ம் திகதி இடம் பெற்ற ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரத்தில் பொதுஜன முன்னணியின் முக்கிய அங்கமாக விளங்கியது இதுவே.

எவ்வாறெனினும் தேர்தலில் வெற்றி கொண்டதைத் தொடர்ந்து அவரின் இசை நாதம் மாற்றம் கண்டது. குமாரதுங்கவின் பதவிப் பிரமாண உரையில் யுத்தத்துக்கு ஒரு முடிவு காணும் பொருட்டு யூ.என்.பி.யையும் விடுதலைப் புலிகளையும் ஆதரவு வழங்குமாறு அழைப்பு விடுத்தார். இருப்பினும் எந்த ஒரு முரண்பாடும் இல்லாத கொள்கையைக் கொண்டிராததாலும் தீவிரவாத வலதுசாரி சிங்கள சோவினிஸ்டுகளின் நெருக்குவாரங்களுக்கு உள்ளானதாலும் இந்த 'ஒலிவ்' (Olive) மரக் கிளையை நீட்டிய ஒரு சில நாட்களுக்குள்ளேயே குமாரதுங்க தன்னைக் கொலை செய்யும் நடவடிக்கையில் யூ.என்.பி. இறங்கியுள்ளதாகக் குற்றம் சாட்டினார்.

இந்தக் கட்டத்தில் பொதுஜன முன்னணிக்கும் யூ.என்.பி.க்கும் இடையே மட்டுமன்றி விடுதலைப் புலிகளுக்கும் பொதுஜன முன்னணிக்கும் இடையே பேச்சுவார்த்தைகளை ஒழுங்கு செய்வதில் இருந்து கொண்டுள்ள தடையை நீக்க ஒரு ஏற்பாட்டாளராக மாற நோர்வே அரசாங்கம் தலையிட்டது. மாஜி நோர்வே வெளிநாட்டு அமைச்சர் கூட் வொலிபெக் லண்டனுக்கு விஜயம் செய்ததோடு, விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரான அன்டன் பாலசிங்கத்துடனும் பேச்சுவார்த்தை நடாத்தினார். இலங்கைக்கு விஜயம் செய்து சந்திரிகா பண்டாரநாயக்காவுடனும் யூ.என்.பி. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடனும் ஒரு அரசியலமைப்பு கலந்துரையாடலை நடாத்துவதற்கு முன்னர் வொலிபெக் இப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார்.

யூ.என்.பி.க்கும் பொதுஜன முன்னணிக்கும் இடையேயான பேச்சுவார்த்தைகள் மார்ச் 09ம் திகதி ஆரம்பமாகின. இந்த நிலைப்பாட்டில் இருந்து இவ்விரு கட்சிகளும் தமது அந்தஸ்தை பூதாகரப்படுத்திக் காட்ட முயன்றன. 1994ம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் பெற்ற வாக்குகளை விட 11 சதவீத வாக்குகள் வீழ்ச்சி கண்ட நிலைமையிலும் தேர்தல் குழறுபடிகள் பற்றிய பெரும் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட நிலையிலும் இந்நடவடிக்கையில் குமாரதுங்க ஈடுபட்டார். பொதுஜன முன்னணி வேலைத் திட்டத்துக்கு பொதுமக்களின் அங்கீகாரத்தை பெற்றுவிட்டதாக குமாரதுங்க கூறி வந்தார்.

விக்கிரமசிங்க இந்த 'பொதுமக்களின் அங்கீகாரம்' பற்றிய பேச்சைக் கணக்கில் எடுக்காது அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான இரகசியப் பேச்சுவார்த்தைகள் பற்றிய விடயத்தைத் தூக்கிப் பிடித்ததோடு, அதைப் பற்றிய சிறு விளக்கத்தையும் வழங்கினார்.

இந்த வாக்குவாதங்கள் பேச்சுவார்த்தைகள் ஆரம்பித்ததுதான் தாமதம் அவை வீழ்ச்சி கண்டு போனதைச் சுட்டிக் காட்டின. இருப்பினும் ஆளும் வட்டாரத்திலான கருத்து, இப் பேச்சுவார்த்தைகள் தொடரவேண்டும் என்பதாக விளங்கியது. குறைந்த பட்சம் யுத்தத்தை ஒரு முடிவுக்கு கொணர ஏதோ இடம் பெற்று வருவதாகக் காட்ட வேண்டும் என்பதே ஆளும் வட்டாரங்களின் நிலைப்பாடாக விளங்கியது.

டைம்ஸ் குறூப் பத்திரிகை நிறுவனத்தைச் சேர்ந்த 'டெயிலி மிறர்' [மார்ச்11] பத்திரிகை இதையிட்டு எச்சரிக்கை செய்கையில் கூறியதாவது: "ஆபத்தில் இருந்து மீட்கும் வேலைத்திட்டத்தைக் கெடுக்க அனாவசியமான நடவடிக்கைகளிலும் கூப்பாடுகளிலும் மாட்டிக் கொள்ளாது இருக்க வேண்டும். இன்றைய முயற்சியை ஆதரிப்பவர்கள் சகலருக்கும் அந்தப் பெரும் அவசியம் இருந்து கொண்டுள்ளது. சில காலத்துக்கு நீண்டு செல்லவுள்ள பேச்சுவார்த்தைகளுக்கு முட்டுக்கட்டை போடும் எந்த ஒரு நடவடிக்கையில் இருந்தும் விலகிக்கொள்ளும் பெரும் அவசியம் சிறப்பாக வெகுஜனத் தொடர்புச் சாதனங்களுக்கு இருந்து கொண்டுள்ளது" என்றது.

முதல் மூன்று சுற்றுப் பேச்சுவார்த்தைகளிலும் அதிகாரப் பகிர்வு பொதி தொடர்பான இரண்டு விடயங்கள் மட்டுமே கலந்துரையாடப்பட்டன. முதலாவது, ஜனாதிபதியால் நியமனம் செய்யப்படும் பிராந்திய ஆளுனர்கள் பாராளுமன்றத்துக்கு பொறுப்புச் சொல்ல வேண்டியவர்களாக இருப்பர். இரண்டாவது, அரசு பிராந்தியங்களின் ஒன்றியம் என்ற பேரால் அழைக்கப்படும். இங்கு யூ.என்.பி. இன்று இருந்து கொண்டுள்ள மாகாணப் பெயரையே பிரேரித்தது. தமிழ் கட்சிகளின் கோரிக்கையின் பேரிலேயே பிராந்தியங்கள் என்ற பெயர் உபயோகிக்கப்பட்டதாக பொதுஜன முன்னணித் தூதுக்குழு விளக்கியது. இறுதியில் யூ.என்.பி. கோரிக்கைக்கு இணங்கிப் போயிற்று.

இந்தப் பேச்சுவார்த்தைகள் மாதக் கணக்கில் இழுபட்டுச் செல்ல உள்ள அதே வேளையில் சிங்கள சோவினிஸ்டுகள் தமிழர் எதிர்ப்பு இனவாதத்தைத் தூண்டிவிட முயற்சிக்கின்றனர். இங்கு பௌத்த பிக்குகள் முன்னணியில் நின்று கொண்டுள்ளனர். நான்கு பௌத்த பீடங்களதும் மகாநாயக்க தேரர்களின் கையொப்பங்களுடன் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: "உத்தேச சமாதான பேச்சுவார்த்தைகள் நாட்டுக்கும் தங்களுக்கும் கெடுதியை ஏற்படுத்துமேயொழிய எந்தவொரு நன்மையையும் ஏற்படுத்தாது என நாம் நம்புகின்றோம். ஒரு தேசப்பற்றுள்ள ஒரு நாட்டுத் தலைவி என்ற ரீதியில் சகல பேச்சுவார்த்தைகளையும் நிறுத்தும்படியும் அரச சக்தியை கையாண்டு தாமதியாது கொடிய பயங்கரவாதத்தை நசுக்கும்படியும் நாட்டைப் பிளவுபடுத்தும் பிரேரணைகளை கைவிடும்படியும் நாம் தங்களுக்கு இப்போது ஆலோசனை கூறுகின்றோம். இந்த இலக்கில் தங்களுக்கு எமது ஆசீர்வாதங்கள் கிட்டும்."

இந்தப் பிரகடனத்தின் மூலம் பலமூட்டப்பட்ட பயங்கரவாதத்துக்கு எதிரான தேசிய இயக்கமும் ஜே.வி.பி.யும் பொலிஸ் விதிகளையும் மீறி வீதியில் இறங்கியதோடு அதன் நூற்றுக்கணக்கான ஆதரவாளர்கள் நோர்வே தூதரகத்துக்கு ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் சென்றனர். கொழும்பு ஆட்சியாளர்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான பேச்சுவார்த்தையில் ஏற்பாட்டாளராக நோர்வே செயற்படுவதை எதிர்ப்பதாக இவை கூறிக்கொண்டன. தூதுவரை சந்திக்க இவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டதைத் தொடர்ந்து பயங்கரவாதத்துக்கு எதிரான தேசிய இயக்கத்தின் ஆதரவாளர்கள் தூதரக

15ம் பக்கம் பார்க்க


அனைத்துலக குழுவின் பகுதிகளின் இன்டர்நெட்

World Socialist Web Site
http://www.wsws.org
அமெரிக்கா:
http://www.socialequality.com
அவுஸ்திரேலியா:
http://www.workersnews.flex.com.au
பிரித்தானியா:
http://www.socialequality.org.uk
கனடா:
http://www.egalitesociale.com
ஜேர்மன்:
http://gleichheit.de


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை கடற்படை ரோந்து படகு மோதி உடப்பு மீனவர் கொலை

*ஜனவரி 24ம் திகதி கடற்படை ரோந்து படகு மோதியதால் ஒரு தமிழ் மீனவர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து உலக சோசலிச வெப் தள பத்திரிகையாளர்கள் மீனவர்க் கிராமமான உடப்புக்கு விஜயம் செய்தனர். கிராமவாசிகள் இக்கொலைச் சம்பவத்தின் சூழ்நிலைகளைப் பற்றியும் வாழ்க்கை நிலைமைகள் பற்றியும் கலந்துரையாடினர். கிராமவாசிகள் பொலிஸ்– இராணுவ ஒடுக்குமுறைகள் காரணமாக தாம் எவ்வளவு மோசமான நிலைக்கு முகம் கொடுக்க நேரிட்டுள்ளது என்பதை விளக்கினர்.*



*அடிப்படை வசதிகளின்றி தண்ணீரையும் விலை கொடுத்து வாங்கும் உடப்பு மக்கள்*

**ஆர்.எம்.தயாரத்ன. உலக சோசலிச வெப் தளம்**

இலங்கை கடற்படை படகு மீன்பிடிப் படகுடன் மோதியதால் நான்கு பிள்ளைகளின் தந்தையான கந்தையா சிவகூத்தர் (54 வயது) கொல்லப்பட்டார். இந்த மரணம் பல மீனவ கிராமங்கள் முகம் கொடுத்துள்ள பயங்கரமான நிலைமையை காட்டிக் கொண்டுள்ளது. மீனவர்கள் கஷ்டமானதும் சில வேளைகளில் பெரிதும் ஆபத்தானதுமான நிலைமைகளின் கீழ் மீன்பிடி தொழிலில் ஈடுபடுவதன் மூலம் வாழ்க்கை நடாத்த வேண்டியுள்ளது. பிரிவினைவாத தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான நீண்ட யுத்தத்தில் ஈடுபட்டுள்ள பாதுகாப்புப் படையினரின் திட்டமிடப்பட்ட தொல்லைகளுக்கும் சங்கடங்களுக்கும் இவர்கள் முகம் கொடுக்க நேரிட்டுள்ளது. 39 வயதான செல்வாராச படகின் சொந்தக்காரர். சிவகூத்தர் அவரின் உதவியாளர்.

கந்தையா சிவகூத்தர் கொல்லப்பட்ட சமயம் அவருடன் படகில் இருந்த அரிவீரன் செல்வராசா இத்தாக்குதலைப் பற்றிக் கூறியதாவது: "ஜனவரி 24ம் திகதி நானும் சிவகூத்தரும் ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபட்டு இருந்தோம். இது உடப்பு கிராமத்துக்கு சமீபமாக உள்ளது. திடீரென ஒரு பெரிய அதிவேக கடற்படை படகு இருட்டில் எமது "பைபர் கிளாஸ்" மீன்பிடி படகுடன் மோதியது. இதனால் எமது படகு தவிடுபொடியானதோடு நாம் இருவரும் கடலில் துாக்கி வீசப்பட்டோம்.

"நானும் சிவகூத்தரும் நொருங்கிப் போன படகின் மிச்ச சொச்சங்களில் பிடித்துக் கொண்டு உதவிக்காக குரல் கொடுத்தோம். கடற்படை படையாட்கள் எம்மை ஒரு சில நிமிடங்கள் நோட்டம் விட்டுவிட்டு அங்கிருந்து வெளியேறினர்." ஒரு மணித்தியாலம் நீச்சல் அடித்ததன் மூலம் செல்வராஜாவால் மற்றொரு படகை அண்மிக்க முடிந்தது. ஆனால் சிவகூத்தரால் நீந்த முடியாது போனதால் அவர் நீரில் மூழ்க நேரிட்டது. அவர் நான்கு குழந்தைகளின் தந்தை. அத்தோடு முழுக் குடும்பத்தின் வாழ்க்கையோட்டத்துக்கான வருமானத்தை உழைப்பவராகவும் விளங்கினார்.

ஜனவரி 25ம் திகதி செல்வராசா வேறு சில மீனவர்களுடன் சேர்ந்து இச்சம்பவம் பற்றி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். ஆனால் பொலிசார் இதைக் கணக்கில் எடுக்காததோடு கடலில் காணாமல் போன மீனவரை தேடும் பணியிலும் ஈடுபடத் தவறினர். இதனால் இக்கிராமத்தைச் சேர்ந்த மீனவர்கள் சுமார் 40 மீன்பிடி படகுகளின் உதவியோடு சிவகூத்தரின் உடலைத் தேடும் பணியில் ஈடுபட்டனர். இரண்டு நாட்களின் பின்னர் அவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது. மரண விசாரணை இடம் பெற்ற போதிலும் மரணத்துக்கான காரணத்தை வெளிக் கொணரும் எந்தவிதமான உத்தியோகபூர்வ தீர்ப்பும் வழங்கப்படவில்லை.

ஜனவரி 26ம் திகதி உடப்பு கிராமத்துக்கு விஜயம் செய்த மூன்று கடற்படை அதிகாரிகள் இச்சம்பவம் பற்றி விசாரணை நடாத்த வந்ததாக கூறினர். அவர்கள் செல்வராசாவை குறுக்கு விசாரணை செய்தனர். மறுநாள் வேறு இரண்டு கடற்படை அதிகாரிகள் செல்வராஜாவை சந்தித்து, படகில் வெளிச்சம் இருந்ததா எனக் கேட்டனர். ஏனைய மீனவர்களைப் போலவே செல்வராஜாவும் சிவகூத்தரும் ஒரு மண்ணெண்ணை லாம்பை வைத்திருந்தனர். மீன்பிடி படகில் ஒழுங்குமுறையான வெளிச்சம் இல்லாததன் காரணமாக ஏற்பட்ட ஒரு விபத்தாக இச்சம்பவத்தை சித்தரித்துக் காட்டும் நடவடிக்கையில் கடற்படையினர் ஈடுபட்டனர். கடற்படை படகு "கண்காணிப்பு" தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததால் அது வெளிச்சத்தைக் கொண்டிருக்கவில்லை என கடற்பட்டை தெரிவித்தது. ஆனால் உடப்பு கிராம மீனவர்கள் இந்தக் கடற்படை படகின் மோதுதல் நடவடிக்கை திட்டமிடப்பட்டது எனவும் மீனவரை கடலுக்கு செல்லாமல் தடுக்கும் விதத்தில் இடம் பெற்ற தாக்குதல் எனவும் தெரிவித்தனர். கடற்படையினர் இது தவறானது எனவும் இதனை ஆய்வு செய்வதாகவும் தெரிவித்தனர். கடற்படை ஒரு படகையும் இயந்திரத்தையும் அத்தோடு சிவகூத்தர் குடும்பத்துக்கு நஷ்டஈடும் வழங்குவது குறித்து ஆலோசிப்பதாக வாக்குறுதி வழங்கினர். பிரதி மீன்பிடி அமைச்சர் ஸ்தலத்துக்கு விஜயம் செய்ததோடு ஒரு தீர்வு வழங்குவதாகவும் வாக்குறுதியளித்தார். எவ்வாறெனினும் இன்னமும் எதுவும் இடம் பெறவில்லை" என கிராம மக்கள் தெரிவித்தனர். "நாம் மீன்பிடிப் படகையிட்டு கவலைப்படவில்லை. இழந்துவிட்ட எஞ்சினைப் பற்றியும் கவலைப்படவில்லை. ஏன் கடற்படையினர் உதவி கேட்டு விடுக்கப்பட்ட கூக்குரலை கணக்கில் எடுக்கவில்லை? மீனவர்களைக் கண்டதன் பின்னரும் அவர்கள் சும்மா விலகிச் சென்றது ஏன்?"

வேறு சிலர் கூறியதாவது: "நாம் மீன்பிடிக்கச் செல்ல அஞ்சுகின்றோம். கடற்படை படகுகள் தினமும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுகின்றன. நாம் ஒரு கடற்படைப் படகைக் கண்டால் எமது படகுகளை நிறுத்த வேண்டியுள்ளது. அவர்கள் எம்மை வயர்களால் அடிக்காமல் விட்டாலும் நாம் இதைச் செய்ய வேண்டியுள்ளது. ஒரு மீனவரான செல்வநாயகம் கூறியதாவது: "இந்தச் சம்பவத்தின் பின்னர் மக்கள் கிலியடைந்துள்ளனர். ஒரு தடவை அவர்கள் தமது சொந்தப் படகின் சத்தத்தைக் கேட்டதுதான் தாமதம் அவர்கள் மீன்பிடி வலைகளையும் கைவிட்டுவிட்டுக் கரைக்குத் திரும்பினர்."

இலங்கை இராணுவத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான யுத்தத்தின் பெறுபேறாக வடக்கு– கிழக்கில் உள்ள மீனவர்கள் கடும் நிபந்தனைகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் முகம் கொடுக்க நேரிட்டது. விடுதலைப் புலிகள் நாட்டினுள் ஆயதங்களைக் கடத்தி வருவதை தடை செய்வதாகக் கூறி கடற்படையினர் வடக்கிலும் கிழக்கிலும் பாதுகாப்பு கட்டுப்பாட்டு விதிகளை இறுக்கமாக்கியுள்ளனர். சில பகுதிகளில் மீன்பிடி அடியோடு தடை செய்யப்பட்டுள்ளது அல்லது அரை குறையாக தடை செய்யப்பட்டுள்ளது. இதனால் ஏற்கனவே வறுமைக் கோட்டின் கீழ் வாழும் ஏழை மீனவர்களை அவஸ்த்தை நிலைமைக்குள் தள்ளியுள்ளது.

**உடப்பு கிராம பிரச்சினைகள்**

சுத்தமான குடிதண்ணீர் ஒரு பெரும் பிரச்சினை. உடப்புக்கான வீதி கல்லும் மண்ணும் போட்ட ஒரு கிரவல் பாதையாக உள்ளது. கொழும்பு– புத்தளம் பஸ் பாதையில் இருந்து சுமார் 100 கிலோ மீட்டர் நீண்டு செல்கின்றது. புத்தளமும் கூட வட மேற்கு மாகாணத்தில் உள்ள ஒரு ஒதுக்குப் புறமான நகரம். இதில் ஒரு குறுகிய நிலத்துண்டே உடப்பு. இது மூன்று புறத்திலும் கடலால் சூழப்பட்டுள்ளது. இந்த உடப்புவில் உடப்பு, ஆண்டிமுனை, செல்வபுரம் என்ற மூன்று கிராமங்கள் உள்ளன. இங்கு 400 க்கும் அதிகமான மீனவக் குடும்பங்கள் வாழ்க்கையை ஓட்டிச் செல்ல முயல்கின்றன.

இந்தக் கிராமவாசிகள் தமது அன்றாடைய வாழ்க்கையை ஓட்டிச் செல்ல நடாத்தும் போராட்டம் பெரிதும் பரிதாபமானது. அவர்கள் மீன் பிடிக்கக் கையாளும் கருவிகள் பழைய நிலமானித்துவ காலத்துக்குரியவை. நீண்ட வலையும் பழைய பாணியிலான மீன்பிடிப் படகுமே பாவனையில் உள்ளன. ஒரு சிலர் மட்டும் இயந்திரம் பொருத்தப்பட்ட 'பைபர் கிளாஸ்,' படகுகளைக் கொண்டுள்ளனர். அவ்வாறே இந்த உடப்பு கிராமத்தில் உள்ள வீடுகளில் ஒரு சிலவற்றைத் தவிர ஏனையவை யாவும் தென்னோலை கிடுகினால் வேயப்பட்டவை. இவை இந்த மக்களுக்கு மழை, வெய்யிலில் இருந்து போதிய பாதுகாப்பு வழங்குவதாக இல்லை. பொதுவில் இந்தக் கிராமம் மழைகாலங்களில் வெள்ளக் காடாகி விடுகின்றது. 45 சத வீதமான வீடுகளுக்கு மலசல கூட வசதி கிடையாது.

இக்கிராமத்தில் உள்ள ஒரு பெரும் பிரச்சினை சுத்தமான குடிநீரைத் தேடிக் கொள்வதாகும். இந்தக் கிராமத்தில் இரண்டே இரண்டு கிண்றுகளே உள்ளன. இதனால் பெரும்பான்மையான குடும்பப் பெண்கள் தண்ணீரைத் தேடி மைல் கணக்கில் நடக்க வேண்டியுள்ளது. இந்த இரண்டு கிணறுகளும் ஆஸ்பத்திரி பகுதியிலும் பொலிஸ் நிலைய வளவிலும் இருந்து கொண்டுள்ளன.

இந்தப் பிரச்சினை பற்றி உடப்பு கிராமவாசிகள் கூறியதாவது: "1984ல் குடி நீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதாகக் கூறி ஒரு இஸ்ரேலியக் கம்பனி ஒரு 4.3 மில்லியன் ரூபா திட்டத்தை வரைந்தது. 1993ல் மீன்பிடி அமைச்சு ஒரு 9.3 மில்லியன் ரூபா தண்ணீர் விநியோகத் திட்டத்தை ஆரம்பிக்கப் போவதாக பெரிதாகப் பேசிக் கொண்டது. அதுவும் கூடக் கை விடப்பட்டு விட்டது. இன்றைய பொதுஜன முன்னணி அரசாங்கம் குழாய் நீர் விநியோகத் திட்டத்தை ஆரம்பித்த போதிலும் அதுவும் மக்களை ஏமாற்றும் ஒரு கண்கட்டு வித்தையாகியுள்ளது. அந்தத் தண்ணீர் குடிப்பதற்கு இலாயக்கானதாக இல்லை. இந்த இலட்சணத்தில் தான் எமது தண்ணீர் பிரச்சினை அரசாங்கங்களால் தீர்த்து வைக்கப்பட்டன.

இன்னமும் கிராம வாசிகள் தண்ணீர் அள்ள மைல் கணக்காக நடக்க வேண்டியுள்ளதோடு தண்ணிர் விநியோகம் ஒரு சின்ன வியாபாரமாகவும் மாறியுள்ளது. தண்ணீரை பவுசர்களில் (Bowsors) கொணரும் ஒரு வர்த்தகர் ஒரு பானை தண்ணீரை இரண்டு ரூபாவுக்கு விற்பனை செய்கின்றார். இதனால் கிராமவாசிகள் ஒரு கணிசமான அளவு பணத்தை பச்சைத் தண்ணீருக்காக செலவிட நேரிட்டுள்ளது. மக்கள் நீராடுவதற்கு தண்ணீர் தேடுவது ஒரு பெரும் சங்கடமான பிரச்சினை. பள்ளங்களிலும் குழிகளிலும் பிடித்து வைக்கப்பட்ட நீரையே– அவை காய்ந்து போகும் வரை– மக்கள் குளிக்க பாவிக்க நேரிட்டுள்ளது. ஆனால் இது பெரிதும் அசுத்தமானது. கொலரா போன்ற தொற்று நோய்களை ஏற்படுத்துகின்றது.

உடப்பு கிராமவாசிகளில் (முதியோர்) பெரும்பான்மையினரால் எழுதவோ வாசிக்கவோ முடியாது. மக்களில் பெரும்பான்மையினர் பெரிதும் ஏழைகளாக இருப்பதால் அவர்களின் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்ப முடியாது உள்ளது. அத்தோடு அங்கு தரமான பாடசாலைகளும் கிடையாது. 1960 பதுகளில் அங்கு இரண்டு பாடசாலைகள் அமைக்கப்பட்டன. ஒன்று ஆண்டிமுனையிலும் மற்றையது உடப்புவிலும் அமைக்கப்பட்டது. இந்தப் பாடசாலைகளைக் கட்டியெழுப்பத் தாமே ஒரு கணிசமான அளவு தொகை பணத்தைத் திரட்டியதாக கிராமவாசிகள் தெரிவித்தனர்.

ஆனால் ஆண்டிமுனை பாடசாலை அதிபர் விளக்கியது போல்: "இன்று இந்த இரண்டு பாடசாலைகளும் சரிந்து கொட்டும் நிலையில் உள்ளன. இங்கு ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது. இங்கு ஆய்வுக் கூடங்கள் கிடையாது. போதிய மேசை, கதிரை இல்லை. விளையாட்டு உபகரணங்கள் எதுவுமே கிடையாது. இந்த இரண்டு பாடசாலைகளிலும் சுமார் 4200 மாணவர்கள் படிக்கின்றார்கள். இங்குள்ள ஆசிரியர்களில் அரைப் பங்கினர் தொண்டர் ஆசிரியர்கள். மாணவர்களிடம் இருந்து கிடைக்கும் பணத்தில் இவர்களுக்கு மாதாந்தம் ரூபா. 1200 சம்பளமாக வழங்கப்படுகின்றது. இந்தத் தொண்டர் ஆசிரியர்களுக்கு அரசாங்கம் சம்பளம் வழங்குவது கிடையாது. இத்தகைய ஒரு நிலையின் கீழ் உயர் கல்வியைப் பெறுவதற்கு எந்தவிதமான வாய்ப்புமே கிடையாது" என்றார்.

பெரும் கஷ்டத்துடன் பாடசாலையில் ஏழாம் எட்டாம் வகுப்பு வரை படிப்பதுடன் மாணவர்கள் பாடசாலை செல்வதை நிறுத்திக் கொள்ளத் தள்ளப்பட்டுள்ளனர். அவர்கள் வாழ்க்கை ஓட்டத்திற்காக கடல் நீரோட்டத்துடன் போராடி மீன்பிடிக்கத் தள்ளப்படுகின்றனர். இளம் சிறுவர்கள் தமது தந்தையர்களுடனோ அல்லது வாடிகளில் உள்ள அயலவர்களுடனோ சேர்ந்து தொழில் செய்ய வேண்டியுள்ளது. கடற்கரைகளில் மீன்களை விற்பனை செய்யும் கொட்டில்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த முழுப் பகுதிக்குமென ஆண்டிமுனையில் ஒரு சிறிய ஆஸ்பத்திரி உள்ளது. இங்கு ஒரு வாட்டும், ஒரு பிரசவ விடுதியும் உள்ளன. இங்கு ஒரு டாக்டரும் இரண்டு அட்டெடன்களும் உள்ளனர். இந்த ஆஸ்பத்திரி பற்றி விபரிக்கையில் டாக்டர் கூறியதாவது: "நான் இங்கு கடந்த 12 வருடங்களாக தொழில் செய்கின்றேன். அப்போது இங்கு ஒரு கட்டிடம் மட்டுமே இருந்தது. பல வேண்டுகோள்களின் பின்னர் நாம் மற்றொரு கட்டிடத்தையும், அலுவலர் வசிப்பிடங்களையும், ஒரு அம்புலன்சையும் பெற்றோம். இங்கு இரண்டு 'அட்டென்டன்கள்' மட்டுமே உள்ளனர். இத்தகைய கிராமப்புற ஆஸ்பத்திரிகளுக்கு அரசாங்கம் தாதிமார்களை நியமிப்பது கிடையாது".

பொதுவாக இந்த ஆஸ்பத்திரிக்கு சுமார் 40 நோயாளிகள் தினசரி வருகின்றனர். மூடி மறைக்கப்பட்ட குடிசைகளாலும் கழிவறை வசதிகள் இன்மையாலும் தண்ணீர் பிரச்சினையாலும் இக்கிராமத்தில் தொற்று நோய் பரவுவது ஒரு சாதாரண நிகழ்வாக உள்ளது. கடந்த சில வாரங்களில் இங்கு சின்னமுத்து நோய் பெருமளவில் பரவியது. 1985ல் இங்கு 89 கொலரா நோயாளிகள் இருந்தனர். ஆனால் 1999ல் இந்த எண்ணிக்கை 389 ஆக அதிகரித்தது. கடந்த ஆண்டில் இரண்டு கொலரா நோயாளிகள் இறந்தனர்.

இந்த ஆஸ்பத்திரியில் இருந்து நோயாளிகளில் பலர் 24 கி.மீ. அப்பால் உள்ள சிலாபம் ஆஸ்பத்திரிக்கு மாற்றப்படுவது வழமை. ஆனால் சிலாபம் செல்ல இரண்டு பஸ்களே சேவையில் ஈடுபட்டுள்ளன. இவை ஒரு நாளைக்கு மூன்று அல்லது நான்கு தடவைகளே சேவையில் ஈடுபடுகின்றன. அவையும் ஒரு கால நேரத்தின்படி இயங்குவது கிடையாது. மாலை 6 மணிக்கு பிறகு இங்கு பஸ் போக்குவரத்து கிடையாது.

15ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார்மயத்தின் பின் தோட்டத் தொழிலாளர்கள் சம்பளம், சேவை நிலைமை வீழ்ச்சிக்கு முகம் கொடுத்துள்ளனர்

டபிள்யு.ஏ.சுனில்

ஐந்து வருடங்களின் பின்னர், சம்பளம் மற்றும் வாழ்க்கை நிலைமைகள் மீது தொடுத்து வந்த தொடர்ச்சியான தாக்குதலின் காரணமாக, பொதுஜன முன்னணி அரசாங்கம் இலங்கையின் முழுத் தொழிலாளர் வர்க்கத்தினதும் ஏழைகளதும் பரந்த எதிர்ப்புக்கு முகம் கொடுத்துள்ளது. ஆனால் கடந்த டிசம்பர் தேர்தலின் போது மாத்திரம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அரசாங்கத்துக்கு "இடதுசாரி" வேஷம் போடும் நடவடிக்கையில் அதன் அமைச்சர்களும் ஈடுபட்டிருந்தனர்.

இப்போது அவரின் ஆட்சி தொழிலாளர் வர்க்கத்தின் மிகவும் ஒடுக்கப்படும் பகுதியினரான தமிழ் பேசும் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் கந்தலாகியுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட தோட்டத் தனியார்மயமாக்கத்தை குமாரத்துங்க அரசாங்கம் நிறைவு செய்து வைத்துள்ளது. அத்தோடு அதிருப்தி ஏற்படும் போது தோட்டப்புறத்தில் பிரிவினைவாத விடுதலைப் புலிகளின் ஊடுருவலை சாட்டாகக் கொண்டு பயங்கரவாதிகள் இருப்பதாக கூறும் பிரச்சாரத்தை தூண்டிவிட்டு, பாதுகாப்பு படைகளைப் பயன்படுத்தி பயமுறுத்தி வருகிறது.

தோட்டத் தொழிலாளர்களை பிரதிநிதித்துவம் செய்யும் இரண்டு பிரதான தொழிற்சங்கங்களான இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் மலையக மக்கள் முன்னணியும் பொதுஜன முன்னணியுடன் கூட்டாக செயற்பட்டு வந்துள்ளன. அண்மையில் காலமான இ.தொ.கா. தலைவர் எஸ்.தொண்டமான் நீண்டகாலமாக அமைச்சர் பதவியில் இருந்து வந்ததோடு, ம.ம.மு. தலைவர் பி.சந்திரசேகரன் பிரதியமைச்சராகவும் இருந்து வந்துள்ளார்.

அண்மைய தேர்தலின் போது, மலையக மக்கள் முன்னணி குமாரதுங்கவுக்கு வழங்கிய ஆதரவை விலக்கிக் கொண்டு ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளிப்பதாக டிசம்பர் 5ம் திகதி அறிவித்தது. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மூன்று குழுக்களாக பிரிந்துள்ளதோடு ஒரு குழு மாத்திரமே பொதுஜன முன்னணிக்கு ஆதரவளித்து வருகிறது.

பொது நிர்வாக, பெருந்தோட்டக் கைத்தொழில், வீடமைப்பு அமைச்சர் ரட்ணசிரி விக்கிரமநாயக்க ஒரு கூட்டத்தில் பேசுகையில், தான் "எப்பொழுதும் தோட்டத் தனியார்மயத்துக்கு எதிராக இருந்ததாகவும் காரணம் அவர்களால் இலாபம் பெற முடியவில்லை" என்றும் குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது: "பெரும்பாலான தோட்டங்கள் தொடர்ந்தும் நஷ்டத்தில் இயங்குகின்றன, மேலும் சில கம்பனிகள் ஊழியர் சேமலாப நிதியைக் கூட வழங்காமல் மோசடி செய்து வருகின்றன".

அவரின் கருத்துக்கள் பொதுஜன முன்னணி அரசாங்கம் தொடர்பான தோட்டத் தொழிலாளர்களின் அபிப்பிராயத்தில் இருந்து அதைக் காப்பாற்றிக் கொள்வதற்கான பாசாங்கு வாய்வீச்சை வெளிக் கொணர்ந்துள்ளது. தோட்டத் தனியார்மயத்தின் இறுதிக் கட்டம் வரை அதற்கு தலைமை தாங்கிய இந்த அமைச்சர், தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிரான உடல் ரீதியான தாக்குதல்களுக்கு தனிப்பட்டமுறையில் தலைமை தாங்கிய பேர் போன இனவாதியாவார். மேலும் இவரின் 'நட்டம்' தொடர்பான ஆலோசனைகளும் கூட தோட்டப் புறத்தில் இலாபத்தைப் பெருக்குவதற்காக கடுமையான விதிகளை அறிமுகப்படுத்த துதிபாடுகிறது.

கடந்த ஐந்து வருடங்கள் தொடர்பாக ஆய்வு ஒன்றை செய்தால் குமாரதுங்கவின் பொதுஜன முன்னணி தொடர்பாக தோட்டத் தொழிலாளர்களின் மத்தியில் நிலவிவரும் ஆழமான அதிருப்திக்கு அது சாட்சி சொல்லும் என்பதில் சந்தேகம் கிடையாது. பொஜன முன்னணி 1994 ல் ஆட்சிக்கு வந்தபோது தனியார்மயத்திற்கு எதிராக தோட்டத் தொழிலாளர்களின் நிலைமைகளை புனரமைப்பு செய்வதாக குறிப்பிட்டது. 1975ல் குமாரதுங்கவின் தாயாரான ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் 'இடது' கூட்டரசாங்கம் பெருந்தோட்டத்துறையை தேசியமயமாக்கியது.

ஆனால் சில வாரங்களில் பொதுஜன முன்னணி அரசாங்கம் தனது வாக்குறுதிகளை தூக்கி வீசி 1977ல் யூ.என்.பி. அரசாங்கத்தால் ஆரம்பித்து வைக்கப்பட்ட தோட்டத் தனியார்மயத்தை நிறைவேற்றி வைக்க முடிவு செய்தது. அதன் முதலாவது வரவு செலவுத் திட்ட அறிக்கை குறிப்பிட்டதாவது: "பெருந்தோட்டங்களை நிர்வகிப்பதற்கு நிதி உதவி செய்வதில் அரசையும் மக்களையும் நெருக்கடியிலிருந்து மீட்டெடுப்பதற்காக, அவற்றை இலாபகரமாக இட்டுச் செல்வதற்கான பொறுப்பை தனியார் கம்பனிகளிடம் ஒப்படைக்க வேண்டும். அரச வருமானத்துக்கு தொடர்ந்து நெருக்கடி தரும் உற்பத்தி அதிகரிக்காத பெருந்தோட்டங்களை முழுமையாக விற்றுத் தள்ளவேண்டும்".

முன்னைய யூ.என்.பி. அரசாங்கம் பெருந்தோட்ட நிர்வாகங்களை 9– 12 தனிப்பிரிவுகளாக பிரித்தது. 1992ல் இந்த நிர்வாகங்கள் தோட்ட முகாமைத்துவத்தை தனியார் கம்பனிகளிடம் குத்தகைக்கு கொடுத்தன. தோட்டங்கள் 23 கம்பனிகளிடம் ஏக்கருக்கு 500 ரூபா வீதம் நீண்ட காலக் (99 வருடங்களுக்கு) குத்தகைக்கு கொடுக்கப்பட்டுள்ளதோடு, குத்தகை ஒப்பந்தங்கள் ஒவ்வொரு 5 வருடத்திற்கு ஒருதடவை புதுப்பிக்கப்படும்.

பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் கீழ், கம்பனிகளின் குத்தகை ஒப்பந்தங்களை 5 வருடத்திற்கு பதிலாக 50 வருடத்திற்கு ஒரு தடவை புதுப்பிக்க முடியும். வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுக் கம்பனிகள் 51 வீதத்துக்கு மேற்பட்ட பெருந்தோட்டப் பங்குகளை வாங்குவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளன. தோட்டப் பங்குகளில் 19 வீதத்தை அரசாங்கம் தன்வசம் வைத்துள்ளது, 20 வீத பங்குகள் திறந்த சந்தையில் மிதக்கவிடப்பட்டுள்ளதோடு எஞ்சிய 10 பங்குகளை தோட்டத் தொழிலாளர்களுக்கு வினியோகித்துள்ளது. ஆனால் எல்லாப் பங்குகளும் கை மாற்றக்கூடியதாக உள்ளதால் அவை தவிர்க்க முடியாத விதத்தில் பெரும் வியாபாரிகளின் கைகளைச் சென்றடையும். இந்தக் கொள்கை உலக வங்கியினதும் சர்வதேச நாணய நிதியத்தினதும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

தற்போது தொழில் நிலைமைகளின் தீவிர வீழ்ச்சி தனியார்மயத்தின் பெறுபேறாகவுள்ளது. இதில் முதலாவதாக 1989ல் நீண்ட போராட்டத்தின் விளைவாக வெற்றிகொள்ளப்பட்ட ஆண்டொன்றுக்கு 300 நாள் வேலை (மாதம் 25 நாட்கள்) பெறும் நிலைமை வெட்டித் தள்ளப்பட உள்ளது. இது வரையும் அவர்கள் மாதச் சம்பளம் இன்றி நாட் சம்பளத்திற்கே வேலை செய்து வருகிறார்கள் அதுவும் வேலை வழங்கப்படும் போது மட்டுமே. இதன் ஒரு பெறுபேறாக பொதுவாக மாதம் ஒன்றிற்கான வேலை நாட்கள் 15 தொடக்கம் 18 ஆக உள்ளதோடு இந்த எண்ணிக்கை தோட்டத்திற்குத் தோட்டம் வேறுபடுகிறது. சில இடங்களில 10 நாட்கள் வேலை வழங்கப்படுவதுண்டு.

மேலும் 1993 ன் கூட்டு ஒப்பந்தத்தின் மூலம் பெறப்பட்ட வாழ்க்கைச் செலவு கொடுப்பனவான 8ரூபாயும் தொழிலாளர்களின் நாள் சம்பளத்திலிருந்து வெட்டப்பட்டுள்ளது. அதே வேளை கம்பனிகள் வேலை சுமையை அதிகரிப்பதில் கவனமாக உள்ளன. ஒரு பெண் தொழிலாளி ஒரு நாளைக்கு 13 தொடக்கம் 15 கிலோ வரை கொழுந்து பறிக்க வேண்டும். இந்த அளவு 18 கிலோவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. ஞாயிற்றுக் கிழமைகளில் வேலை வழங்கும் போது தொழிலாளர்களுக்கு அரைநாள் சம்பளம் அதிகமாக வழங்கப்படுகிறது, ஆனால் அந்த மேலதிக கொடுப்பனவுக்காக 24 கிலோ கொழுந்து பறிக்க வேண்டும்.

உழைப்பு படையை குறைக்கும் அதே வேளை உற்பத்தியை அதிகரிப்பதற்காக புதிய தொழில் முறைகளும் தொழில் நுட்பமும் பாவிக்கப்பட்டு வருகிறது. களை கட்டுப்படுத்தலுக்கும், கொழுந்து அறுவடைக்கும் 'கவாத்து' வெட்டுவதற்கும் உபகரணங்களும் விவசாய இரசாயனங்களும் பாவிக்கப்படுகின்றன. பெருந்தோட்டத் தொழிற்சாலைகளிலும் இயந்திரமயமாக்கல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர் செலவை குறைப்பதன் மூலம் பிரமாண்டமான பெருந்தொகை இலாபத்தை அடைய முடிந்துள்ளது. 1993, 1994ல் தேயிலைக் கைத்தொழிலில் முறையே 1.4 பில்லியன் ரூபாய்களும் 974 மில்லியன் ரூபாய்களும் நட்டம் ஏற்பட்டது. ஆனால் 1996ல் மீண்டும் 500 மில்லியன் ரூபாய்களை இலாபமாகப் பெற்றது. உற்பத்தி மட்டமானது 1995க்கும் 1998க்கும் இடைப்பட்ட காலத்தில் ஆண்டொன்றுக்கு 246 மில்லியன் கிலோ கிராமிலிருந்து 280 மில்லியன் கிலோகிராம் வரை அதிகரித்ததோடு ஏற்றுமதி எண்ணிக்கையின் வளர்ச்சி 241–272 மில்லியன் கிலோகிராமாக காணப்பட்டது. 1997ல் 480 மில்லியன் அமெரிக்க டொலர்களாகவிருந்த ஏற்றுமதி வருமானம் அடுத்து வந்த ஆண்டுகளில் 750 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை அதிகரித்தது. இந்த அதிகரிப்புக்கு இலங்கை மத்திய வங்கி "தனியார்மயப்படுத்தப்பட்ட தோட்டக் கம்பனிகளின் தரமான முகாமைத்துவத்தைக்" காரணமாகக் காட்டியுள்ளது.

## தனியார்மயத்துக்கு எதிரான தொழிலாளர்களின் போராட்டம்

தனியார்மயமும் அத்துடன் இணைந்த சம்பளம் மற்றும் சேவை நிலைமைகள் மீதான தாக்குதலும் தோட்டத் தொழிலாளர் மத்தியில் பரந்த எதிர்ப்பைத் தூண்டிவிட்டுள்ளது. பொதுஜன முன்னணி அரசாங்கத்துடன் தொங்கிக் கொண்டுள்ள தொழிற்சங்கத் தலைமைகளுக்கு எதிரான வெறுப்பை வெளிக்காட்டும் வகையிலான பல பெரும் போராட்டங்கள் ஆரம்பித்துள்ளன.

1995 செப்டம்பர், அக்டோபர் மாதங்களில், ஊவா வெஸ்ட் பிளான்டேசனை சேர்ந்த 17,000 தொழிலாளர்கள் ஆண்டொன்றுக்கு 300 நாள் வேலையும், எதிர்காலத் தொழிலாளர்களாக காத்திருக்கும் தோட்ட இளைஞர்களை வேலைக்குப் பதியும்படி கோரியும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இப்போராட்டம் ஏனைய தோட்டங்களுக்கும் பரவும் நிலை உருவானது. தொழிற்சங்கத் தலைமைகள் இப்போராட்டத்தை வன்மையாக எதிர்த்ததோடு, சர்ச்சையையும் தூண்டிவிட்டன.

1996 ஏப்ரலில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தோட்ட உறுப்பினர்கள் தனியார்மயமாக்கத்தின் விளைவாக 5 நாட்கள் சிறை வைக்கப்பட்டிருந்தனர். இதற்கு முன்னரும் தோட்டத் தொழிலாளர்களின் அதிருப்தி, வேலை நிறுத்தங்களாக வெளிப்படுவதைத் தவிர்ப்பதற்காக இ.தொ.கா, அதை வேறு திசைகளில் திருப்ப நடவடிக்கை எடுத்தது. (உதாரணமாக கோயிலுக்கு சென்று பூஜை செய்தல் போன்றவை). அப்போது அரசாங்க அமைச்சராக விளங்கிய இ.தொ.கா. தலைவர் தொண்டமான் "தொழிலாளர்கள் மத்தியில் நிலவும் அதிருப்தியை சிதைப்பதே தொழிற்சங்கத்தின் நோக்கமாக உள்ளது" என வெளிப்படையாகவே தெரிவித்திருந்தார்.

தற்போது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தோட்டத் தொழிலாளர்களில் ஒரு சிறிய தொகையினரான 60,000 பேரையே அங்கத்தவர்களாகக் கொண்டுள்ளது. வேலை நிறுத்தப் போராட்டங்கள் ஏனைய தோட்டங்களுக்கு மட்டுமல்லாமல், தனியார்மயத்தால் ஒடுக்கப்பட்டுவரும் நகர்ப்புறத் தொழிலாளர்களிடையேயும் பரவுவது தொடர்பாக பீதி கொண்டிருந்ததால், அரசாங்கம் ஏப்ரல் 4ம் திகதி வேலை நிறுத்தங்களை தவிர்ப்பதற்காக நாடு பூராவும் அவசரகாலச் சட்டத்தை பிறப்பித்தது. ஆனாலும் நாட்டின் சகல பகுதிகளிலும் உள்ள ஆறு லட்சம் தொழிலாளர்கள் இந்தப் போராட்டத்தில் இணைந்து கொண்டனர். உடனடியாக இ.தொ.கா.வும் யூ.என்.பி.யின் தொழிற்சங்கமான லங்கா தோட்டத் தொழிலாளர் சங்கமும் அரசாங்கத்துடன் சேர்ந்து போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்தனர்.

மீண்டும் 1995 பெப்பிரவரி 5ம் திகதி, தோட்டத் தனியார்மயத்தை எதிர்த்து ஆறு லட்சம் தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இ.தொ.கா.வும் ஏனைய தோட்டத்துறை தொழிற்சங்கங்களும் அரசாங்கத்தின் தலையீட்டுடன் இப்போராட்டத்தை சம்பள உயர்வுப் போராட்டமாக தரம் குறைத்தன. அரச பயங்கரவாதிகளதும் குண்டர்களதும் பிரச்சாரத்திற்கு மத்தியில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் அட்டன், மஸ்கெலியா போன்ற பிரதேசங்களில் தங்கள் சுயாதீனமான போராட்டத்தை வீதி ஆர்ப்பாட்டங்கள் மூலம் மேற்கொண்டனர்.

பெப்பிரவரி 13ம் திகதி ஜனாதிபதி சந்திரிகா குமாரத்துங்கவுடனான இரகசியப் பேச்சுவார்த்தையின் பின்னர் தொழிலாளர்களின் கோரிக்கைகள் எதுவும் நிறைவேற்றப்படாத நிலையில் இ.தொ.கா. தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்தது. ஆயிரக்காணக்கான தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தை இரண்டு நாட்களுக்கு மேலாக தொடர்ந்து முன்னெடுத்த போதும் தீர்க்கமான முன்னோக்கு இல்லாத காரணத்தால் தொழிலாளர்கள் மீண்டும் வேலைக்குத் திரும்பத் தள்ளப்பட்டார்கள். அட்டன், மஸ்கெலியா, தலவாக்கலை போன்ற பிரதேசங்களின் தொழிலாளர்கள் தொழிற்சங்கங்களின் காட்டிக் கொடுப்பை எதிர்த்து சங்கத் தலைவர்களின் கொடும்பாவிகளை நகரங்களில் எரித்ததோடு கண்டனச் சுவரொட்டிகளையும் ஒட்டியிருந்தனர்.

பொதுஜன முன்னணி அரசாங்கத்தை எதிர்ப்பதற்கு தொழிற்சங்கங்கள் தயங்கக் காரணம் அவர்கள் அதன் வேலைத் திட்டத்திற்கு ஆதரவளிப்பதாகும். 1994 பெப்ரவரி 22ம் திகதி இ.தொ.கா. பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சுக்கு அனுப்பிய கடிதம் ஒன்றில்: "பெருந்தோட்டங்களை தேசியமயத்திலிருந்து தனியார்மயத்துக்கு மாற்றுவதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம். ஆனால் மீளமைப்புகளும், தொழிலாளர்களின் சேவை நிலைமைகளும் பல கம்பனிகளுக்கும் முக்கிய தொழிற்சங்கங்களுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட கூட்டு ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே இடம்பெற வேண்டும்"... எனக் குறிப்பிட்டிருந்தது.

பெருந்தோட்டச் சொந்தக்காரர்களின் "நிர்வாக முறைமையின் காரணமாக" "வரையறையற்றதும் கட்டுப்படுத்த முடியாததுமான தொழிலாளர் போராட்டங்களைப் பற்றியும்" இக்கடிதம் எச்சரிகை செய்திருந்தது. தோட்டத் தொழிலாளர் மத்தியில் பரவலாக நிலவும் விரக்தியும் பாதுகாப்பற்ற நிலையும் தவறான எண்ணங்களும் புதிய முறையிலான போராட்டங்களை தொழிலாளர்கள் மத்தியில் உருவாக்கிவிடும் எனவும் இக்கடிதம் எச்சரித்திருந்தது.

இந்த ஸ்தாபனங்கள் தொழிலாளர்களின் தேவைகளை கணக்கெடுப்பதில்லை. ஆனால் தனியார்மயமாக்கல் முறையினை உத்தரவாதம் செய்வதில் மும்முரமாய் உள்ளன. உண்மையில் இ.தொ.கா. மற்றும் ல.தோ.தொ.ச. ஆகிய தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களின் சேவை நிலைமைகளை சிதைப்பதில் மத்தியஸ்தம் வகித்து வருகின்றன. இதன் பிரதிபலிப்பாக 1997ல் இ.தொ.கா.வின் அங்கத்துவம் 325,000 ல் இருந்து 60,000 வரை வீழ்ச்சி கண்டுள்ளது.

## கைத்தொழில் நெருக்கடி

எப்பொழுது யார் ஆட்சிக்கு வந்தாலும் சேவை நிலைமைகள் மீதான புதிய முறையிலான தாக்குதல்களை தொழிலாளர்கள் எதிர்நோக்க வேண்டியுள்ளது. குறிப்பிட்ட சில வருடங்களில் பெற்றுக் கொண்ட பெருமளவிலான இலாபத்தின் பின்னர், உலக தேயிலை விலையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைத் தொடர்ந்து தேயிலைக் கைத்தொழில் மீண்டும் மாபெரும் நெருக்கடியில் மூழ்கியது. 1998 ம் ஆண்டின் 12 மாதங்களில் ஒரு கிலோ கிராம் தேயிலையின் விலை ரூ.191.53 சதத்திலிருந்து ரூ.156.4 சதம் வரை வீழ்ச்சியடைந்தது. இதே காலத்தில் ஏற்றுமதி 133.07 மில்லியன் கிலோ கிராமிலிருந்து 131.8 கிலோகிராம் வரை வீழ்ச்சி கண்டதோடு, ஏற்றுமதி வருமானம் 25.6 பில்லியன்

15ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ்க் கைதிகளைக் கொன்ற அதிகாரிகளைக் கண்டு பிடித்து தண்டிக்கும் விசாரணை தோல்வி

விலானி பீரிஸ்

கடந்த ஜனவரியில் களுத்துறைச் சிறைச்சாலையில் சிறைக் காவலர்களுடனான மோதுதலில் கொல்லப்பட்ட இரண்டு தமிழ் கைதிகளின் மரணம் தொடர்பான விசாரணை அதைக் கொலையெனத் தீர்மானிக்கவோ அல்லது கொலைக்குப் பொறுப்பானவர்களைக் கண்டுபிடிக்கவோ தவறிவிட்டது. இந்த இரு கொலைகள் பற்றியும் மேலும் விசாரணை நடாத்தும்படி பொலிசார் பணிக்கப்பட்ட போதிலும் விசாரணை பல கிழமைகளுக்கு இழுபட்டுச் சென்றதே தவிர எவரும் கைது செய்யப்படவோ அல்லது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவோ இல்லை.

ஜனவரி 6ம் திகதி அந்தனிப்பிள்ளை ஜேசுதாசன் கொல்லப்பட்டார். மறு நாள் சிவரத்தினம் ஸ்ரீகுமார் கொல்லப்பட்டார். களுத்துறைச் சிறைச்சாலையில் தள்ளப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளின் எதிர்ப்பையும் உண்ணாவிரதப் போராட்டத்தையும் படுகொடூரமான முறையில் உடைத்து எறியும் பொருட்டு சிறை அதிகாரிகள் கலகங்களில் ஈடுபட்டனர். இந்தச் சிறைச் சாலையில் நூற்றுக் கணக்கான தமிழ்க் கைதிகள், பிரிவினைவாத தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் எனக் கூறி இலங்கையின் படுமோசமான பாதுகாப்புச் சட்டங்களின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கொலைகள், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு எதிரான டிசம்பர் 18ம் திகதிய கொலை முயற்சியைத் தொடர்ந்து; அரசாங்கமும் வெகுஜனத் தொடர்புச் சாதனங்களும் தூண்டிவிட்ட ஒரு இனக்கலவர சூழ்நிலையின் பின்னணியில் இடம் பெற்றது. பொலிசாரும் இராணுவத்தினரும் கொழும்பிலும் மற்றும் நகரங்களிலும் ஒரு தொடர்ச்சியான தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டதோடு ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டனர். ஜனவரி முதல் வாரத்தில் ஒரு பிரபல வழக்கறிஞரும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளருமான குமார் பொன்னம்பலம் 'இனங்காணப்படாத' துப்பாக்கிக் கொலைகாரர்களால் படுகொலை செய்யப்பட்டார். இந்த விதத்தில் பார்க்கும் போது களுத்துறைச் சிறைச்சாலைக் கொலை விசாரணைகளை உத்தியோகபூர்வமான முறையில் பூசி மெழுகும் போக்குகள் தொழிற்பட்டுள்ளன. இந்தக் கொலையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை தம்மால் அடையாளம் காட்ட முடியும் என்ற சக கைதிகளின் கண்கண்ட சாட்சியங்கள் இத்தீர்ப்பில் புறக்கணிக்கப்பட்டுள்ளன. பல சிறைக் காவலர்கள் ஏற்கனவே அடையாளங் காணப்பட்டனர். ஆனால் பொலிசார் கொலையுண்டவர்களின் வழக்கறிஞர்களுக்கு தெரிவித்ததாவது: "கண்கண்ட சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த விடயம் சட்ட மா அதிபருக்கு சமர்ப்பிக்கப்படும்."

விசாரணை நடாத்திய மஜிஸ்திரேட்டுகள் மரணத்துக்கான காரணத்தை ஸ்தாபிதம் செய்வதுடன் விடயத்தை நிறுத்திக் கொண்டனர். ஜனவரி 17ம் திகதி முடிவடைந்த முதலாவது விசாரணை, சிறை அதிகாரிகள் பாவித்த ஒரு துப்பாக்கிச் சூட்டினால் ஏற்பட்ட காயங்களால் ஸ்ரீகுமார் மரணமடைந்ததாக தெரிவித்தது. பெப்பிரவரி 17ம் திகதி முடிவடைந்த இரண்டாவது மஜிஸ்திரேட் விசாரணை, ஜேசுதாசன் ஒரு மொட்டையான ஆயுதத்தினால் முதுகெலும்பில் ஏற்பட்ட கடும் காயத்தினாலும், முறிவினாலும் இறந்ததாக குறிப்பிட்டது. ஸ்ரீகுமாரின் மரண விசாரணை தீர்ப்பை ஏற்றுக்கொள்ள முடியாது என அவரின் சார்பில் ஆஜராகும் வழக்கறிஞர் கே.எஸ்.இரத்தினவேல் நீதி மன்றத்தில் தெரிவித்தார். "அரசின் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த ஒரு நபர் இறந்தது தொடர்பான ஒரு விசாரணையில் மஜிஸ்திரேட்டுக்கு பிரமாண்டமான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன இந்த நீதி மன்றத்தில் இதுகாறும் முன்வைக்கப்பட்ட சாட்சியங்களில் இருந்து மரணத்துக்கான காரணத்தைக் கண்டறிவதோடு மட்டுமன்றி, மரணம் ஒரு கொலை எனவும் கூட பிரகடனம் செய்ய வேண்டும்".

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் மனித உரிமைகள் கமிட்டியின் ஒருங்கிணைப்பாளரான கே.எஸ்.இரத்தினவேல் இந்த மரண விசாரணை அந்தரங்கமாக (in camera) இடம்பெறச் செய்யப்பட்ட முயற்சியையும் எதிர்த்திருந்தார். இரத்தினவேல் சுட்டிக் காட்டியதாவது, இந்த இரண்டு சிறைக் கைதிகளும் அரசின் தடுப்புக் காவலில் இருந்த போது இறந்துள்ளனர். ஆதலால் இந்த விசாரணை எவரும் தகவல்களை வழங்கக் கூடிய விதத்திலான ஒரு திறந்த இடத்தில் நடாத்தப்பட வேண்டும் எனவும் சுட்டிக் காட்டியிருந்தார்.

மார்ச் 7ம் திகதி பொலிசார் ஜேசுதாசனின் மரணம் தொடர்பாக ஒரு அடையாள அணிவகுப்பு நடாத்த ஏற்பாடு செய்திருந்த போதிலும் இது ஏப்ரில் 6ம் திகதி வரை தாமதம் செய்யப்பட்டது. இந்தக் கொலை இடம் பெற்ற நாளில் கடமையில் ஈடுபட்டிருந்த சகல சிறை அதிகாரிகள் உட்பட 157 பேரை உள்ளடக்கிய ஒரு அசாதாரணமான அணிவகுப்பை நடாத்த பொலிஸ் திட்டமிட்டதால் இந்நிலை ஏற்பட்டது. எவ்வளவுக்கு எவ்வளவு இந்த அடையாள அணிவகுப்பை நடாத்துவதில் தாமதம் ஏற்படுகின்றதோ அவ்வளவுக்கு அவ்வளவு சிறைக்கைதிகள் அச்சுறுத்தல்களுக்கும் பயமுறுத்தல்களுக்கும் பலியாக நேரிடுகிறது. வவுனியாவைச் சேர்ந்த இளைஞரான ஜேசுதாசன் சிறை வைக்கப்பட்டிருந்த களுத்துறைச் சிறையின் 'எப்' சிறைக் கூடத்தில், கைதிகள் தாம் முகம் கொடுத்த படுமோசமான அடக்குமுறை நிலைமைகளுக்கு எதிரான எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். 'எப்' வாட்டுக்கும் ஏனைய வாட்டுகளுக்கும் இடையே மேலதிக நுழை வாசல்கள் செய்து தரப்பட வேண்டும் என்பது கைதிகளின் கோரிக்கைகளில் ஒன்றாகும். இப்போது கைதிகள் கோவிலுக்கும் நூல் நிலையத்திற்கும் வைத்திய நிலையத்துக்கும் விலங்கிடப்பட்ட நிலையிலேயே கூட்டிச் செல்லப்படுகின்றனர். கைதிகள் ஒரு இராணுவச் சோதனை முகாமைத் தாண்டிச் செல்ல வேண்டியுள்ளது. இதனால் தமது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

## ஆரம்ப பேச்சுவார்த்தை

கைதிகளுக்கும் சிறை அதிகாரிகளுக்கும் இடையே இடம் பெற்ற ஆரம்ப பேச்சுவார்த்தைகள் தோல்வி கண்டன. ஜனவரி 6ம் திகதி சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்துடன் இடம் பெற்ற ஒரு கலந்துரையாடலில் ஒரு தனி நூல் நிலையம், கோவில், வைத்திய நிலையத்தை ஏற்படுத்த அவர் இணங்கினார் ஆனால் இந்த மேலதிக நுழைவாசல் ஏற்படுத்தும் கோரிக்கைக்கு இணங்க மறுத்து விட்டார். சிறைச்சாலை ஆணையாளர் இந்த சலுகைகளை வழங்கிய அதே சமயம் சிறைக் கூடங்களை சோதனையிட வேண்டும் எனவும் கோரினார். கைதிகள் ஆயுதங்களை மறைத்து வைத்திருப்பதாகவும் ஒரு கலகத்துக்கு தயார் செய்வதாகவும் தெரிவித்தார். கைதிகள் இந்தக் குற்றச்சாட்டுக்களை நிராகரித்த போதிலும் சிறைக் கூடங்களை சோதனையிட இணக்கம் தெரிவித்தனர்.

இறுதிச் சுற்றுப் பேச்சுவார்த்தைகள், சிறை அதிகாரிகளை குண்டாந்தடிகளுடனும் மற்றும் ஆயுதங்களுடனும் கைதிகளின் வார்ட்டுக்குள் ஊடுருவச் செய்வதற்கான ஒரு சூழ்ச்சியாகவே இடம் பெற்றது என்பது இப்போது நன்கு தெளிவாகியுள்ளது.

'எப்' சிறைக்கூடக் கைதியான ரமேஷ் மோகன் நீதிமன்றத்துக்கு வழங்கிய வாக்கு மூலத்தில் இந்தப் பேச்சுவார்த்தைகளின் பின்னர் உணவு உண்ணும் இடத்தில் 'பேக்குகளுடனும்' (Bags) பொதிகளுடனும் ஒன்று கூடும்படி வேண்டப்பட்டனர் எனத் தெரிவித்தார். ஆயுதம் தாங்கிய அதிகாரிகள் வார்ட்டுக்குள் நுழைந்து கைதிகளின் ஒரு பிரதிநிதியான தமிழ்செல்வத்தை கைதிகளை ஒரு வரிசையில் நிறுத்த உதவுமாறு கேட்டனர். அவர் முன்னால் வந்ததும் ஒரு அதிகாரி எதிர்ப்பைத் தூண்டிவிட்டு அவரை ஒரு குண்டாந்தடியால் தாக்கினார்.

சிறைச்சாலைக்கு மேலாக பெரும் கல்லுகள் எம்மீது வீசப்பட்டன. நாம் சகல திக்கிலும் ஓடினோம். அதைத் தொடர்ந்து கண்ணீர் புகை தாக்குதல் இடம் பெற்றது. எனது கண்கள் பற்றி எரிவது போல் உணர்ந்தேன். தண்ணீர் தொட்டி பக்கம் ஓட்டம் பிடித்தேன். அங்கு நாம் சிறைக் காவலர்களால் மீண்டும் தாக்கப்பட்டோம்." என ரமேஷ் தெரிவித்தார்.

ஜேசுதாசனுக்கு எதிராக இடம் பெற்ற தாக்குதலை விபரிக்கையில் ரமேஷ் கூறியதாவது: ஜேசுதாசன் தாக்குதல் இடம் பெறுவதைக் கண்டு மறுபுறத்துக்கு ஓட முயற்சித்தார். அவரும் கூட தாக்குதலுக்கு இலக்கானார். அவர்களது பெயர்களை நான் அறிந்திராத போதிலும் அவரைத் தாக்குவதில் ஈடுபட்டவர்களை எனக்குத் தெரியும்; அடையாளம் காட்ட முடியும். நான் சம்பவத்தை ஒரு 20 அடி தூரத்தில் இருந்து கவனித்துக் கொண்டிருந்தேன்.

"சம்பவம் நடந்த இடத்தில் [சிறைச்சாலை] ஆணையாளர் நாயகத்தையும் அவருடன் வந்த ஆட்களையும் மிகவும் தெளிவாகக் கண்டேன். எனது இந்த வாக்குமூலத்தின் பின்னர் எனக்கு ஏதேனும் ஒரு தீங்கு ஏற்படுமானால் அது நான் இன்று இங்கு இதைக் கூறுவதன் காரணமாகவே ஏற்பட்டதாக இருக்கும்." இலங்கையின் சிறைச்சாலை உயர் அதிகாரியான ஆணையாளர் நாயகம் இந்த விசாரணையில் ஆஜராக வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை. ஆனால் களுத்துறைச்சாலை "சுப்பிரின்டென்ட்" (superintendent) கே.எம்.ஆர்.குலதுங்க அளித்த வாக்குமூலம் கைதிகளுக்கு எதிரான தாக்குதல் முன் கூட்டியே திட்டமிடப்பட்டது என்பதைக் காட்டிக் கொண்டுள்ளது.

குலதுங்க கூறியதாவது: "எனது வேண்டுகோளின் பேரில் சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்துடனும் அவரின் உதவியாளர்களுடனும் ஒரு கோஷ்டி சிறைக் காவலர்களும் கொழும்பில் இருந்து வந்தனர். ஒரு சாத்தியமான கலகத்தை கட்டுப்படுத்தவே இங்ஙனம் செய்யப்பட்டது. களுத்துறை சிறைச்சாலை அதிகாரிகள் சிறைச்சாலை வார்ட்டுக்குள் செல்ல அஞ்சினர். சில வேளைகளில் கைதிகள் எமது அதிகாரிகளின் கட்டுப்பாட்டையும் மீறி விடுவதுண்டு. ஆதலால் வார்ட்டுக்களில் தேடுதல் நடாத்த வேண்டி இருந்தது. ஆதலால் உதவி ஆணையாளர் ஹேர்பட், தேடுதல் நடவடிக்கைகளில் களுத்துறை சிறைச்சாலை அதிகாரிகளை பயன்படுத்த வேண்டாம் என எனக்கு உத்தரவிட்டார். கொழும்பில் இருந்து வந்த 12 ஆட்களை அந்த பணியை செய்யும்படி வேண்டினார்".

மறுநாள் 'சீ' வார்ட்டில் ஸ்ரீகுமார் கொல்லப்பட்டார். அவர் கணனி பாடநெறியை பயிலும் பொருட்டு யாழ்ப்பணத்தில் இருந்து கொழும்புக்கு வருகை தந்த போது கைது செய்யப்பட்டார். அவர் கல்யாணம் செய்தவர். ஒரு குழந்தைக்கு தந்தை.

வார்ட் 'சீ' யைச் சேர்ந்த ஒரு கைதியான பசுபதி தர்மராஜா என்ன நடைபெற்றது என்பதை விசாரணையில் விளக்குகையில் கூறியதாவது: ஜனவரி 7 காலை கதவைத் திறக்க வந்த அதிகாரிகளிடம் முதல் நாள் வார்ட் 'எப்'ல் என்ன நடந்தது என விசாரித்தோம். ஆனால் அவர்கள் அசம்பாவிதத்தைப் பற்றி எதுவும் கூற மறுத்துவிட்டனர். அதைத் தொடர்ந்து சிறைச்சாலை 'சுப்பிரென்டனுடன்' ஒரு சந்திப்புக்கு ஏற்பாடு செய்யும்படி கேட்டோம். அதற்கும் மறுப்பு தெரிவிக்கப்பட்டது. அதற்குப் பதிலாக அவர்கள் பிரதான வாசல் கதவைப் பூட்டியதோடு ஒரு அதிகாரி எச்சரிக்கை விசிலும் ஊதினார். விளைவுகளை எம்மால் புரிந்து கொள்ள முடிந்தது. 1997ல் இதே களுத்துறை சிறைச்சாலையில் எப்படி இரண்டு சிறைக் கைதிகள் வெட்டிக் கொல்லப்பட்டனர் என்பதை நாம் ஏற்கனவே தெரிந்து கொண்டிருந்தோம்.

"இதைத் தொடர்ந்து ஒரு கும்பல் சிறைக் காவலாளிகள் குண்டாந்தடிகளுடனும் பாதுகாப்பு கேடயங்களுடனும் எம்மை நோக்கி வருவதைக் கண்டோம். நாம் அவர்கள் உள்ளே வருவதை அனுமதிக்கவில்லை. உள்ளிருந்து பிரதான வாசல் கதவைத் தள்ளிப் பிடித்துக் கொண்டோம். அப்போது முன்னால் வந்த அதிகாரி ஒருவர் சுப்பிரிண்டனைச் சந்திக்க நாம் வாய்ப்பளிக்க வேண்டும் என்றார். சுப்ரின்டன்ட் மூடப்பட்ட அறைக்குள் வந்தார். அவர் வந்தது தான் தாமதம் அதிகாரிகளைத் தாக்குதலை ஆரம்பிக்குமாறு வேண்டினார். ஒரு அதிகாரி வெளியே பார்க்கும் [கதவு] துவாரத்தின் ஊடாகச் சுட்டார்". மற்றொரு கைதியான அப்துல் ஹமீட், ஸ்ரீகுமார் எப்படி இறந்தார் என்பதை நீதி மன்றத்தில் விபரித்தார்: "களஞ்சிய அறையில் வேலை செய்துகொண்டிருந்த ஒரு அதிகாரி ஸ்ரீகுமாரை சுட்டார். இச்சமயத்தில் வார்ட் 'சீ' யின் பிரதான வாசல் கதவு உடைத்துத் திறக்கப்பட்டது. இந்த மரணத்துக்கு காரணமான துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்டவரை எனக்குத் தெரியும். என்னால் அவரை அடையாளங் காட்ட முடியும். இத்துப்பாக்கிப் பிரயோகம் காரணமாக பலர் காயமடைந்தனர். ஸ்ரீகுமார் சுடப்பட்ட தினத்தன்று உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். நான் அவருக்கு சமீபமாக நின்று கொண்டிருந்தேன்".

சற்குணநாதன் சந்திரநாதன் என்ற கைதி சாட்சியமளிக்கையில் ஸ்ரீகுமார் இரண்டு கைகளையும் உயர்த்தியபடி பிரதான வாசல் கதவை நோக்கியபடி சென்றதாகவும் இரண்டு அதிகாரிகள் அவரை கூட்டிச் சென்றதாகவும் தெரிவித்தார். ஒரு சில நிமிடங்களின் பின்னர் துப்பாக்கிச் சூட்டு சத்தங்களைக் கேட்டதாகவும் ஸ்ரீகுமார் நிலத்தில் இரத்த வெள்ளத்தில் கிடந்ததைக் கண்டதாகவும் தெரிவித்தார். களுத்துறை சிறை சுப்பிரின்டென்ட் குலதுங்கவும் ஸ்ரீகுமாரின் இந்த மரண விசாரணையில் சாட்சியமளித்தார். கலகத்தில் ஈடுபட்ட கைதிகளை அடக்கக் கண்ணீர் புகையும் இறப்பர் ரவைகளையும் பாவிக்கும்படி உத்தரவிட்டதாகவும், துப்பாக்கியை பயன்படுத்த கட்டளையிடவில்லை எனவும் குறிப்பிட்டார். பின்னர் தனது அறிக்கைக்கு முரணான விதத்தில் குலதுங்க கூறியதாவது: "முதல் நாள் தாக்குதலில் காயமடைந்த கைதிகளை காவல் செய்யும் பணியில் களுத்துறை ஆஸ்பத்திரியில் ஈடுபட்டிருந்த ஒரு அதிகாரி ஆயுதக் களஞ்சியத்தில் ஆயுதத்தை திருப்பி ஒப்படைக்க சென்ற போது அவர் ஒரு தொடர் இயக்க

15ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் வரவு செலவுத் திட்டம்: பாதுகாப்புச் செலவுகளையும் சர்வதேச நாணய நிதியத்தின் சீர்திருத்தத்தையும் அதிகரித்துள்ளது

**கே.ரத்னாயக்க**

பொதுஜன முன்னணி அரசாங்கம் கடந்த பெப்பிரவரி 14 ம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த 6வது வரவு செலவு திட்டம், யுத்தத்துக்கான செலவை மேலும் அதிகரித்துள்ளதோடு சர்வதேச நாணய நிதியத்தின் சீர்திருத்தத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்லவும், பெரும் வியாபாரிகளுக்கு –விசேடமாக வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு – மேலும் சலுகைகளை வழங்கவும் உள்ளது.

கடந்த நவம்பர் மாதம் முன்வைக்கப்படவிருந்த வரவு செலவுத் திட்டம் திடீர் ஜனாதிபதி தேர்தலின் காரணமாக ஒத்தி வைக்கப்பட்டிருந்தது. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நிதியமைச்சர் என்ற முறையில் இம்முறை வரவு செலவு திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் பொறுப்பை அவரே ஏற்றுக் கொண்டார். பாராளுமன்றத்தில் உள்ள அமைச்சர் ஒருவர் மூலம் சமர்ப்பிக்கும் 'சம்பிரதாயத்தை' குழப்பி குமாரதுங்க அவரே பாராளுமன்றத்தில் தோன்றுவதற்கு தீர்மானித்தது திட்டமிட்ட ஒன்றாகும். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்க பெரிதும் நெருக்குவாரம் ஏற்படும் ஒரு நிலையில், பாராளுமன்றத்திற்கு தான் வருகை தந்தது "நிறைவேற்று ஜனாதிபதி முறையை மேலும் ஜனநாயகமயப்படுத்தி இறுதியில் அதை தூக்கி வீசுவதை நோக்கி செல்லும்" ஒரு திட்டமாகும் என குமாரதுங்க குறிப்பிட்டார்.

எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்தில் பொதுத் தேர்தல் நடாத்த வேண்டியுள்ள ஒரு நிலையில் தொடர்புச்சாதனங்கள் இந்த வரவு செலவை ஒரு 'தேர்தல் வரவு செலவுத் திட்டமாக' காட்டியுள்ளன. வரவு செலவுத் திட்ட நிதியில் பெரும்பகுதி இராணுவச் செலவுகளுக்கும் பெரும் அரசாங்கக் கடன்களை திருப்பி செலுத்துவதற்குமே ஒதுக்கப்பட்டுள்ளன. இந்த முழுச் சுமையும் தொழிலாளர் வர்க்கத்தின் தோள்களிலேயே சுமத்தப்பட உள்ளது. அரச ஊழியர்கள் வரவு செலவுத் திட்டத்தில் சம்பள அதிகரிப்பை எதிர்பார்த்தனர். எனினும் இப்பிரச்சினை தொடர்பாக ஆராய்வதற்கு சம்பள ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படும் என மேலோட்டமாகச் சொல்லப்பட்டது.

வரவு செலவுத் திட்டத்தில் பொருட்களுக்கு நேரடியாக எந்தவிதமான விலை அதிகரிப்போ அல்லது வரி விதிப்போ இடம் பெறாவிட்டாலும் அரசாங்கம் ஒரு கிழமைக்கு முன்னரே டீசல், மண்எண்ணெய் மற்றும் எரிவாயு ஆகியவற்றின் விலையை முறையே நூற்றுக்கு 23,48,9 என்ற வீதத்தில் திட்டவட்டமாக அதிகரித்துள்ளது. எரிபொருள் விலை அதிகரிப்பானது போக்குவரத்து கட்டணங்களின் அதிகரிப்புக்கு வாய்ப்பளித்தது. இலங்கைப் போக்குவரத்து சபையின் கட்டணம் நூற்றுக்கு 15–25 வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. அதே வேளை ஏற்கனவே நூற்றுக்கு 15 வீதம் அதிகரிக்கப்பட்ட கட்டணத்தை மேலும் நூற்றுக்கு 15 வீதத்தால் அதிகரிக்க தனியார் பஸ் சொந்தக்காரர்கள் அனுமதி கோருகின்றனர். மண்ணெண்ணெய் விலை அதிகரிப்பு கிராமங்களிலும் நகரங்களிலும் உள்ள ஏழைகளுக்கும், தோட்டத் தொழிலாளர்களுக்கும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

அரசாங்கம் பாதுகாப்பு செலவை 5240 கோடி வரை அதிகரித்துக் கொண்டுள்ளது. இந்த தொகை கல்வி, சுகாதாரம் ஆகிய இரண்டுக்கும் அரசாங்கம் செலவிடும் தொகையை விட 1810 கோடி ரூபாய்கள் அதிகமாகும். கடந்து சென்ற வருடங்களில் குறைநிரப்பு பிரேரணைகள் மூலம் வேகமாக அதிகரித்த யுத்த செலவை நிவர்த்தி செய்து கொண்ட ஒரு நிலையில் இம்முறையும் இது தொடர்பான ஒரு குறைத்து மதிப்பிடலை காணக் கூடியதாகவுள்ளது.

நோர்வேயின் தலையீட்டின் கீழ் விடுதலைப் புலிகளுடனான ஒரு பேச்சுவார்த்தைக்கு குமாரதுங்க தயாராகிவரும் நிலைமையிலேயே இராணுவ செலவு அதிகரிப்பு இடம்பெற்றுள்ளது. திறைசேரி செயலாளர் கடந்த 18ம் திகதி 'டெய்லி மிரர்' பத்திரிகைக்கு குறிப்பிடுகையில் "பெரும் பாதுகாப்பு செலவானது" "சமாதான நடவடிக்கைகளை முன்கொண்டு செல்வதற்கான அழுத்தத்தை ஏற்படுத்துவதற்கான (இராணுவம்) நடவடிக்கையில் ஈடுபடுவதை பராமரிக்க செய்யப்படும் ஒன்று" எனக் குறிப்பிட்டிருந்தார். புலிகளுடனான பேச்சுவார்த்தைக்காக தமது கையை பலப்படுத்திக் கொள்ளும் அவசியம் அரசாங்கத்திற்கு இருந்து கொண்டுள்ளது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் யுத்தத்தை நவீனமயமாக்குவதற்கு மட்டுமன்றி வாழ்க்கை நிலைமைகளின் வீழ்ச்சி காரணமாக வளர்ச்சி கண்டு வரும் சமூக அமைதியின்மையை ஒடுக்குவதற்கும் அரசாங்கம் தயாராகி வருகிறது. திறைசேரி செயலாளர் "இம்முறை பாதுகாப்பு செலவுகள் பொலிசை பலப்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டுள்ளது" என மேலும் குறிப்பிட்டுள்ளார்.

### 17 வருட யுத்தம்

பதினேழு வருட யுத்தம் பொருளாதாரத்தை துடைத்துக் கட்டும் ஒன்றாக விளங்கும் நிலையில் பெரும் வியாபாரிகளில் ஒரு பகுதியினர் யுத்தத்தை முடிவுக்கு கொணரும்படி கோருகின்றனர். இராணுவச் செலவானது அரச வருமானத்தில் கிட்டத்தட்ட நூற்றுக்கு 25 வீதத்தை விழுங்கிக்கொள்ளும் ஒரு நிலையில் வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையை குறைக்க சர்வதேச நாணய நிதியம் முன்வைத்த திட்டங்களுக்கு குழிபறிக்கப்பட்டுள்ளது. பொதுஜன முன்னணி அரசாங்கம் 1995ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்கும் போது 1999ல் வரவு செலவுத்திட்ட பற்றாகுறையை நூற்றுக்கு 6 வீதமாக குறைப்பதாக குறிப்பிட்டிருந்தது. கல்வி, சுகாதாரம் மற்றும் ஏனைய அரச சேவைகளுக்கான செலவுகள் வெட்டித் தள்ளப்பட்ட போதிலும் இராணுவச் செலவுகளின் அதிகரிப்பினால் வரவு செலவு பற்றாகுறை கடந்த வருடம் நூற்றுக்கு 8 வீதமாகியது.

அரச செலவீனங்களில் பெரும் பகுதியான 9361 கோடி ரூபாய்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்களை தீர்ப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. செலவுகள் வேறுபடுத்திக் காட்டப்படாவிட்டாலும் அதில் மூன்றில் ஒரு பங்கு வெளிநாட்டுக் கடன் வட்டியையும், கடனில் ஒரு பகுதியையும் செலுத்துவதற்கே செலவாகிறது என்பதை கடந்த கால நடவடிக்கைகளின் அடிப்படையில் குறிப்பிட முடியும். அரசாங்கம் அரச தொழிற்சாலைகளை விற்று திரட்டிய 3000 கோடி ரூபாய் நிதியையும் கடனில் ஒரு பகுதியை திருப்பி செலுத்துவதற்கு ஒதுக்குவதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தனியார்மயமாக்கமானது, சர்வதேச நாணய நிதியத்தின் வேண்டுகோளுக்கு இணங்க நடைமுறைக்கிட உள்ள பொருளாதார சீர்திருத்தத்தின் முழு நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதி மாத்திரமே. குமாரதுங்க



வரவு செலவுத்திட்ட உரை நிகழ்த்த ஆயத்தமாகும் ஜனாதிபதி குமாரதுங்க

"வெளிநாட்டு முதலீடுகளுக்கு இலங்கையில் இருந்து கொண்டுள்ள வரையறுக்கப்பட்ட நிலைமையை – விசேடமாக நிதித் துறையில் – மேலும் திறந்து விடுவதாக" அவர் வாக்குறுதியளித்துள்ளார்.

காப்புறுதித் துறையில் வெளிநாட்டவர்களின் பங்களிப்பை நூற்றுக்கு 90 வீதமாக உயர்த்த தீர்மானித்துள்ள அரசாங்கம், தேசியக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தை முழுமையாக விற்றுத்தள்ள தீர்மானித்துள்ளது. வெளிநாட்டு தரகுக் கம்பனிகளுக்கு இருந்த கட்டுப்பாடும் முழுமையாக நீக்கப்பட்டுள்ளது. வங்கித் துறையில் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு பங்கு உரிமையை வழங்குவது தொடர்பாக இருந்துவந்த நூற்றுக்கு 49 வீத உச்சவரம்பை அகற்றி நூற்றுக்கு 60 வீதம் வரை உரிமையாக்கிக் கொள்வதற்கு வசதி ஏற்படுத்திக் கொடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அரச வங்கி, இலங்கை மின்சார சபை மற்றும் துறைமுக அதிகார சபை போன்றவற்றை மீளமைப்பு செய்வதற்கும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. தற்போதைக்கு அரசாங்கத்தின் கீழ் இயங்கி வரும் இந்த நிறுவனங்களை தனியார்மயமாக்க முடியாமல் போயிற்று. காரணம் அதன் ஊழியர்கள் நிரந்தரமாக எதிர்ப்பைக் காட்டி வந்ததேயாகும். 1996ல் வேலை நிறுத்தத்தில் குதித்த மின்சார சபை ஊழியர்கள் தொடர்ந்து மூன்று நாட்கள் நாடு முழுவதிலும் மின்சார விநியோகத்தை இடைநிறுத்தியிருந்தனர். அரச வங்கி ஊழியர்கள் தனியார்மயத்துக்கு எதிராக இடைவிடாத பிரச்சாரத்தில் ஈடுபட்டு வந்தனர்.

### சர்வதேச நாணய நிதியம்

50 கோடி டாலர் கடன் கொடுப்பதற்காக வங்கித் துறையிலும் சிவில் சேவையிலும், உழைப்புச் சந்தையிலும் சீர்திருத்த வேலைத்திட்டத்தை நடைமுறைக்கிட வேண்டும் என சர்வதேச நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் வதிவு பிரதிநிதியான நஸீம ஹூல் ஹக் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்: "உதவி நிதியின் அளவானது சீர்திருத்தத்தின் மட்டத்திலேயே தங்கியுள்ளது. வேலைத் திட்டத்தை நிறுத்தாது முன்னெடுக்க வேண்டும். இரண்டாவது தலைமுறையின் சீர்திருத்தத்தை நடைமுறைக்கிட அரசாங்கம் ஆவல் கொண்டிருந்ததை நான் அறிவேன்".

இலங்கை தேசிய வர்த்தக சபையும் இலங்கை ஏற்றுமதியாளர் சங்கமும் வரவு செலவுத் திட்டத்தை வரவேற்றுள்ளன. "பொருத்தமான அனைத்து குழுக்களுடனும் இணக்கப்பாடொன்றை ஏற்படுத்துவதன் மூலம் வடக்கு – கிழக்கு யுத்தத்துக்கு அரசியல் தீர்வொன்றினை முன்வைக்கவேண்டியதன் அவசியத்தை" ஜனாதிபதி சுட்டிக் காட்டியதையிட்டு மகிழ்ச்சியடைவதாக இலங்கை வர்த்தக சபை குறிப்பிட்டுள்ளது. வரவு செலவுத் திட்டத்தில் பெரும்பாலானவை சாதகமானவை எனவும் வர்த்தக சபை மேலும் குறிப்பிட்டுள்ளது.

தீர்வை வரியை குறைப்பதையிட்டு வியாபாரிகளில் ஒரு பகுதியினர் கவலை தெரிவித்துள்ளனர். உச்ச தீர்வை வரி வீதம் நூற்றுக்கு 30% ல் இருந்து 25% வரை குறைக்கப்படவுள்ளதாக வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. இறக்குமதி இலாபத்துடன் போட்டியிடுவதற்கு இலங்கைக் கம்பனிகளால் முடியாமல் போகுமா என்ற பீதி சமீபத்தில் அமுல் செய்யப்பட்ட இந்திய – இலங்கை வர்த்தக ஒப்பந்தம் காரணமாக மேலும் உக்கிரம் கண்டது.

### பெருமை

ஆசிய பொருளாதார நெருக்கடியின் அழுத்தத்தில் இருந்து இலங்கையை காப்பாற்றிக் கொண்டதாக வரவு செலவுத்திட்ட உரையின் போது குமாரதுங்க பெருமைப்பட்டுக் கொண்டார். ஆனால் வரவு செலவுத் திட்டம் சமர்ப்பதற்கு இரண்டு தினங்களுக்கு முன்னர் மத்திய வங்கி வெளியிட்ட பத்திரிகை அறிக்கையொன்றில் இருள்படிந்த சித்திரம் ஒன்று காட்டப்பட்டது. "பூகோளரீதியாக கேள்வி வீழ்ச்சியடைவதன் பிரதிபலிப்பாக உலக விற்பனைப் பொருட்களின் விலை வீழ்ச்சி காரணமாக 1999 ல் ஏற்றுமதி வருமானம் நூற்றுக்கு 4 வீதத்தால் வீழ்ச்சி கண்டது. ஆடை, தேயிலை, இறப்பர் மற்றும் இறப்பர் சம்பந்தப்பட்ட உற்பத்திகளின் விலை வீழ்ச்சியை காரணமாக கொண்டு முழு ஏற்றுமதியின் விலைச் சுட்டெண் நூற்றுக்கு 10 வீதத்தால் வீழ்ச்சி கண்டது." அதன் பிரதிபலிப்பாக, 1998ல் 1092 மில்லியன் டாலர்களாக இருந்த வர்த்தக பற்றாகுறை 1999ல் 1294 மில்லியன் டாலர்கள் வரை உயர்ந்துள்ளது.

சர்வதேச நாணய நிதியமும், உலக வங்கியும் ரூபாவின் பெறுமதியை "படிப்படியாக குறைக்கும்" அரசாங்கத்தின் திட்டத்தை ஆதரித்துள்ளன. 1995 தொடக்கம் இன்று வரை ரூபாவின் பெறுமதி நூற்றுக்கு 46 வீதத்தால் வீழ்ச்சி கண்டுள்ளது. உலகச் சந்தையில் எண்ணெய் விலையின் அதிகரிப்பானது தமது பொருளாதார இலக்கை நெருக்கடிக்குள் தள்ளியுள்ளதாக திறைசேரி அதிகாரிகள் இப்போது கவலை தெரிவித்துள்ளனர். குமாரதுங்கவின் "21ம் நூற்றாண்டுக்கான நோக்கு" என அவர் கூறிக் கொள்ளும் "செழிப்பு" மலரவில்லை. அது செல்வந்தர்களுக்கும் வறியவர்களுக்கும் இடையிலான இடைவெளியை மேலும் விரிவுபடுத்தி, விலை அதிகரிப்பு, தொழில் வெட்டுக்களின் மூலம் வாழ்க்கை நிலைமைகளை மேலும் சீரழிவுக்கு இட்டுச் செல்ல மட்டுமே வழி வகுத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளின்டனின் இந்தியத் துணைக் கண்ட விஜயம்:

## புதிய மூலோபாய தயாரிப்புக்கான ஆயத்தம்

பீட்டர் சைமண்ட்ஸ்

ஒரு அமெரிக்க ஜனாதிபதி என்ற முறையில் 1978ல் ஜிம்மி கார்ட்டர் முதற் தடவையாக இந்தியத் துணைக் கண்டத்துக்கு விஜயம் மேற்கொண்டதன் பின்னர் இன்று இடம்பெறும் பில் கிளின்டனின் விஜயம், பாகிஸ்தானுடன் கொண்டிருந்த குளிர்யுத்த காலக் கூட்டாளி என்ற வாஷிங்டனின் முன்னைய நிலைப்பாட்டில் இருந்து விலகிச் செல்வதாக அமைந்துள்ளது. அத்தோடு இந்தியாவுடன் இன்னமும் தற்காலிகமானதாக இருந்து கொண்டுள்ள ஒரு புதிய மூலோபாய, பொருளாதார உறவை நோக்கி காலடி வைப்பதாகும்.

ஒரு விதத்தில் பார்க்குமிடத்து கிளின்டனின் சுற்றுப் பயணம்- பங்களாதேஷ் ஒரு நாள் பயணம் தவிர- ஐந்து நாட்கள் இந்தியாவில் கழிந்துள்ளது. இந்தியாவில் ஒரு மென்க, (Software) கணனி கைத்தொழில்களின் மையமாகத் துரித வளர்ச்சி கண்டுவரும் ஹைதராபாத் உட்பட ஐந்து நகரங்களுக்கு கிளின்டன் விஜயம் செய்தார். சனிக்கிழமை பாகிஸ்தானில் சும்மா ஒரு ஐந்து மணித்தியாலங்கள் தரித்துச் செல்வார். இந்தப் பயண ஏற்பாடுகளின் ஏற்றத்தாழ்வுகள் பாகிஸ்தானுக்கும், இந்தியாவுக்கும் வாஷிங்டன் விடுத்துக்கொண்டுள்ள அரசியல் செய்திகளின் வேறுபட்ட தன்மையோடு பெரிதும் ஒத்து, இணைந்து செல்கின்றது.

அமெரிக்க ஜனாதிபதி இந்தியாவில் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயுடன் ஒரு கூட்டு "சொப்பன தரிசன" அறிக்கையில் கைச்சாத்திட்டார். அது "உலகின் இரு பெரும் ஜனநாயக நாடுகளுக்கு" இடையேயான "ஒரு நெருக்கமானதும் பண்புரீதியானதுமான புதிய உறவைத்" துளிர்விடச் செய்யும் என உத்தரவாதமளித்தது. இந்தப் பத்திரம் "பல விதத்தில்" "இந்த 21ம் நூற்றாண்டின் உலக சமாதானம், செழிப்பு, ஜனநாயகம், சுதந்திரத்தின் பேரிலான எமது ஒத்துழைப்பின் வெற்றியில் தங்கியுள்ளதாக" பிரகடனம் செய்கின்றது.

### புதிய பங்குடமை


ஒரு தீவிர வலதுசாரி கூட்டான பாரதீய ஜனதா கட்சியின் தலைமையிலான ஒரு கூட்டரசாங்கத்துடனான வாஷிங்டனின் புதிய பங்குடமை, இந்து சோவினிச நிகழ்ச்சித் திட்டத்தை மேலும் உக்கிரமாக்கும் நோக்குடன் உருவானது. இதைக் கிளின்டனோ அல்லது அமெரிக்க வெகுஜனத் தொடர்புச் சாதனங்களோ குறிப்பிடவும் இல்லை; விமர்சனம் செய்யவும் இல்லை.

கிளின்டனின் இந்த இந்திய விஜயம் மேலும் முன்னேற்றம் காணும் விதத்தில் வாஷிங்டன் இந்தியாவுக்கு கணிசமான சலுகைகளை வழங்கியுள்ளது. இந்த விஜயம் பல வருடங்களுக்கு முன்னரே தீர்மானிக்கப்பட்டது. ஆனால் 1998 மே மாதத்தில் புதுடில்லி ஐந்து அணுவாயுதக் குண்டு வெடிப்புக்களில் ஈடுபட்டதன் காரணமாக திடீரென ஒத்திவைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து ஒரு சொற்ப காலத்தினுள் பாகிஸ்தானும் அத்தகைய அணுவாயுதப் பரிசோதனைகளில் இறங்கியது. அமெரிக்கா இந்த இரண்டு நாடுகளுக்கும் எதிராக பொருளாதார, தொழில்நுட்பத் தடைகளை விதித்ததோடு, இவ்விரு நாடுகளையும் ஒரு அணுவாயுத பரிசோதனை தடை ஒப்பந்தத்தில் (CTBT) கைச்சாத்திடும்படியும் நெருக்கியது. கடந்த ஒரு சில மாதங்களுள் கிளின்டன் ஆட்சியாளர்கள் இந்தியாவுக்கு எதிராக விதிக்கப்பட்ட தடைகள் சிலவற்றைத் தளர்த்தியதோடு மட்டுமன்றி இந்த அணுவாயுத பரிசோதனை தடை ஒப்பந்தத்தில் கையொப்பமிடும் உடன்பாட்டை வாஜ்பாய் அரசாங்கத்திடம் இருந்து பெற்றுக்கொள்வது அமெரிக்க ஜனாதிபதியின் இந்திய விஜயத்தின் ஒரு முன்நிபந்தனை அல்ல என்பதையும் எடுத்துக் காட்டியது.

கிளின்டன் இஸ்லாமாபாத்தில் ஒரு சொற்ப காலம் தரித்துச் சென்றாலும் கூட பாகிஸ்தானைப் பொறுத்தமட்டில் இது அமெரிக்க ஆளும் வட்டாரங்களில் ஒரு ஆய்வுக்குரிய விடயமாக இருந்து வந்துள்ளது. பாகிஸ்தானுடனான நீண்டகாலப் பிணைப்புக்களைத் தொடர்ந்தும் பராமரிக்க பாகிஸ்தானுக்கு கிளின்டன் விஜயம் செய்வது அவசியம் என சீ.ஐ.ஏ, பென்டகன் (Pentagon) அதிகாரிகள் வலியுறுத்தினர். இதைத் தொடர்ந்தே இந்த மாத ஆரம்பத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டது. கிளின்டன் இஸ்லாமாபாத்தில் தங்கியிருக்கும் போது கடந்த அக்டோபரில் ஒரு இராணுவச் சதியின் மூலம் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்ட பாகிஸ்தானியத் தலைவர் ஜெனரால் முஷாராப்பினை பாராளுமன்ற ஜனநாயகத்துக்கு திரும்புமாறும், இஸ்லாமிய அடிப்படைவாதக் குழுக்களை குறிப்பாக பாகிஸ்தானிய பிராந்தியத்தில் இருந்து செயற்படும் காஷ்மீர் தீவிரவாதிகளை- அடக்கும் ஒரு நேரசூசியை தயார் செய்யும்படியும் பகிரங்கமாகவே நெருக்கும் சாத்தியம் இருந்து கொண்டுள்ளது.

கிளின்டன் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்வதை எதிர்த்த ஆளும் கும்பலைச் சேர்ந்தவர்கள் இந்த விஜயம் பாகிஸ்தான் இராணுவ ஜுன்டாவை அங்கீகரிப்பதாக நோக்கப்படும் எனச் சுட்டிக்காட்டினார்கள். முஷாராப் ஆட்சியாளர்கள் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டதில் இருந்து சகல வேலை நிறுத்தங்களையும் தடை செய்தது. அரசியல் கூட்டங்களுக்கு தடை விதித்தது. அத்தோடு பதவி நீக்கம் செய்யப்பட்ட பிரதமர் நவாஷ் ஷரீப்புக்கும் அவரது பல உயர் மட்ட ஆதரவாளர்களுக்கும் எதிராக பயங்கரவாதம், விமானக் கடத்தல், கொலை முயற்சி போன்ற போலிக் குற்றச்சாட்டுக்களின் பேரில் விசாரணைக்கு நிறுத்தியது. ஷெரீப் குற்றவாளியாகக் காணப்பட்டால் அவர் தூக்கிலிடப்பட வேண்டும் என அரசு தரப்பு வாதிட்டுக் கொண்டுள்ளது.

இரு முக்கிய தரப்பினையும் காஷ்மீர் பிரச்சினைக்கு ஒரு தீர்வினைக் காணும்படி ஊக்குவிக்கும் பொருட்டே கிளின்டனின் இஸ்லாமாபாத் விஜயம் இடம் பெறுவதாகக் காட்ட


பில் கிளின்டன்

கிளின்டனின் உதவியாளர்கள் முயற்சிக்கின்றார்கள். கடந்த ஆண்டு பாகிஸ்தானிய ஆதரவு பிரிவினைவாதிகள் இந்திய மாநிலமான ஜம்மு காஷ்மீரில் கார்கில் பிராந்தியத்தில் விரகி முக்கியத்துவம் வாய்ந்த நிலைகளைக் கைப்பற்றியதோடு, இந்தியாவும் பாகிஸ்தானும் யுத்தத்தின் விளிம்புக்குத் தள்ளப்பட்டன. வேறு சிலர் முஷாராப் இஸ்லாமிய அடிப்படைவாதிகளின் மேலாதிக்கம் கொண்ட ஒரு ஆட்சிக்கு எதிரானவர்களில் ஒரு முக்கியஸ்தர் என வாதிட்டனர்.

உண்மையில். அமெரிக்க ஆட்சியாளர்கள் பாகிஸ்தானில் மட்டும் அல்ல வேறு எங்கும் சரி இராணுவ சர்வாதிகாரம் அமெரிக்க நலன்களுடன் ஒத்துப் போகுமிடத்து அதை ஒரு போதும் வெறுத்து ஒதுக்கியது கிடையாது. வேறுபட்ட சூழ்நிலைகளின் கீழ் கிளின்டனின் கயிறுதிரிப்பு பாகிஸ்தானுடன் ஒரு "சொப்பன தரிசன" அறிக்கையில் கையொப்பமிடுவதை நியாயப்படுத்துவதோடு இந்து அடிப்படைவாதத்தினை இந்தியாவில் வாந்தியெடுப்பதன் மூலம் கலகத் தடுப்பு சட்டத்தை பாரதீய ஜனதா கட்சி கட்சியை கொண்டு இயற்றுவதிலும் பெரிதும் வல்லவர்கள். இந்தியாவுக்கு இராஜதந்திர பூச்செண்டும் பாகிஸ்தானுக்கு அரசியல் செங்கட்டித் துண்டும் வழங்கும் இன்றைய நிலைப்பாடு, ஜனநாயகம் அல்லது பிராந்திய சமாதானம் மீதான அக்கறையினால் அல்லது மிகவும் அடிப்படையான பொருளாதார, மூலோபாய நலன்களால் நிர்ணயம் செய்யப்பட்டதாகும்.

### பொருளாதாரக் கணிப்பீடுகள்

கிளின்டனின் விஜயத்துக்கான முக்கிய காரணி, அமெரிக்கக் கூட்டுத்தாபனங்களுக்கு இந்தியத் துணைக் கண்டத்தின்- குறிப்பாக இந்தியா- வளர்ச்சிகாணும் பொருளாதார முக்கியத்துவமேயாகும். ஒரு அமெரிக்க ஜனாதிபதி முதற் தடவையாக பங்களாதேசுக்கு ஒரு குறுகிய கால விஜயத்தை மேற்கொண்டதன் முக்கிய காரணம், அந்நாட்டில் இருந்துகொண்டுள்ள கணிசமான எரிவாயு துறையில் அமெரிக்க முதலீடுகளைப் பற்றிக் கலந்துரையாடுவதேயாகும். கிளின்டன் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பங்களாதேசுக்கான அமெரிக்க உதவித் திட்டத்தை அதிகரிக்கப் போவதாக அறிவித்தார். இது மிகவும் கேவலமான 97 மில்லியன் டாலர் உணவுப் பொருள் உதவியையும் உள்ளடக்கிக் கொண்டுள்ளது. உலகின் வறிய நாடுகளில் ஒன்றான பங்களாதேசுக்கு இத்தொகை தலைக்கு 1 டாலருக்கும் குறைவானதாகும். இவற்றுக்கு பின்னணியில் இயற்கை வாயுவை ஏற்றுமதி செய்வதை அனுமதிக்க பங்களாதேஷ் அரசாங்கத்தை ஊக்குவிக்கும் நடவடிக்கைகள் இடம் பெற்றன. அமெரிக்க வலுவள செயலாளர் பில் றிச்சாட்சன் உட்பட்ட அமெரிக்க அதிகாரிகள் இதற்கான சம்மட்டி அடிப்பில் ஈடுபட்டிருந்தனர். அமெரிக்க எண்ணெய் கம்பனிகள் தமது முதலீட்டை பங்களாதேஷில் ஏற்கனவே அதிகரித்துள்ளனர். 1996ல் 20 மில்லியன் அமெரிக்க டாலர்களாக விளங்கிய இந்த முதலீடு இன்று 700 மில்லியன் டாலர்களாக அதிகரித்துள்ளது

'டைம்' சஞ்சிகையின் தகவல்களின்படி அமெரிக்க வலுத் திணைக்களம் 15 பில்லியன் டாலர்களுக்கும் 20 பில்லியன் டாலர்களுக்கும் இடையேயான முதலீட்டுத் திட்டங்களுக்கான வாய்ப்புகள் தென் ஆசியாவில்- முக்கியமாக இந்தியாவில்- இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளது. ஐந்து தொடக்கம் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் சீனா தொடர்பாகக் காட்டப்பட்ட அக்கறைக்கு சமமான விடயங்கள் இன்று இந்தியா சம்பந்தமாக அனைத்துலக நிதி வட்டாரங்களில் கலந்துரையாடப்பட்டு வருகின்றது. 1990 களில் வருடாந்த பொருளாதார வளர்ச்சி வீதம் சுமார் 6 வீதம் ஆகும் என விமர்சகர்கள் சுட்டிக் காட்டி வந்துள்ளனர். விரிவடைந்து வரும் மத்தியதர வர்க்கத்தின் எண்ணிக்கை 30 மில்லியனுக்கும் 180 மில்லியனுக்கும் இடைப்பட்டதாக இருக்கும் என மதிப்பீடு செய்யப்பட்டது. ஏற்றுமதிக் கைத்தொழிலும் வளர்ச்சி கண்டு வந்தது. இந்தியாவுக்கான மாஜி அமெரிக்கத் தூதுவர் பிராங் வைஸ்னர் 'நியூயோர்க் டைம்ஸ்' பத்திரிகையில் பெரும் ஆர்வத்துடன் எழுதிய கட்டுரையில் எதிர்வரும் ஆண்டில் இந்தியாவில் மின் வலு உற்பத்திச் சாதனங்களுக்காக 250 பில்லியன் டாலர்களும் தொலைத் தொடர்பு சாதனங்களுக்கென 100 பில்லியன் டாலர்களும் செலவழிக்கப்படும் எனக் குறிப்பிட்டிருந்தார். "நாம் முன்னேறிச் செல்லுகையில் ஒரு வசதி வாய்ப்பான அந்தஸ்த்தை சிருஷ்டித்துக் கொள்ளும் விடயங்களில் முன்னெடுத்துச் செல்லும் சில சக்தியைப் பெறுவதற்கு அமெரிக்கா அந்தப் பிராந்தியத்தில் வேரூன்றுவதற்கு இந்த விஜயம் ஓர் பயங்கரமான சந்தர்ப்பமாகும்" என அவர் குறிப்பிட்டார். அத்தோடு அமெரிக்கக் கூட்டுத்தாபனங்கள் முதலீட்டுக்கு சாத்தியமான பிராந்தியங்களாக மருந்து வகைகள், விமானத்தள கருவிகள், உணவு தயாரிப்பு எரிவாயு, எண்ணெய் உட்பட்ட சுரங்கத் தொழில், பொறியியல் கருவிகள், விளையாட்டுப் பொருட்களில் கண்வைத்துள்ளன. ஆனால் இந்தியாவில் வளர்ச்சி

8ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளின்டனின் இந்தியத் துணைக் கண்ட விஜயம்:


## புதிய மூலோபாய தயாரிப்புக்கான ஆயத்தம்

7ம் பக்கத் தொடர்ச்சி

கண்டுவரும் கணனி மென்கல தொழில்நுட்பக் கைத்தொழில்களுக்கென பெரும் விளம்பரம் வழங்கப்பட்டுள்ளது. இந்தியாவை அடிப்படையாகக் கொண்டுள்ள உயர் தொழில் நுட்பக் கம்பனிகள் நாட்டின் பிரமாண்டமான பட்டதாரித் தடாகத்தினைச் சுரண்டிக் கொள்ளக் கூடியதாக உள்ளது. கணனி நிகழ்ச்சித் திட்டத்தின் உக்கிரமான வேலையின் உழைப்பை வழங்குவதற்காக இவர்களுக்கு ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் இவர்களின் சகாக்களுக்கு கிடைக்கும் சம்பளத்தில் ஒரு துளியே வழங்கப்படுகிறது. மக்கின்சி அன்ட் கம்பனியின்- ஒரு முகாமையியல் ஆலோசனை நிறுவனம்- அறிக்கையின் படி இந்தத் தசாப்தத்தின் முடிவில் இந்திய மென்கலக் கைத்தொழில் 87 பில்லியன் டாலர்களை சம்பாதிக்கக் கூடியதாக உள்ளதோடு 2 மில்லியன் மக்களுக்கும் அதிகமானோருக்கும் வேலை வாய்ப்பு வழங்கக் கூடியதாக உள்ளது.

பிரித்தானியாவில் வெளியிடப்படும் எக்கோனமிஸ்ட் (Economist) சஞ்சிகையில் வெளியான "யானையும் சப்பை மூஞ்சி நாயும்" என்ற தலைப்பிலான ஒரு கட்டுரையில் குறிப்பிட்டதாவது: "பூஜ்யம் கண்டு பிடிக்கப்பட்டதன் பின்னர் முதற்தடவையாக இந்தியா உடனடியாக விற்பனை செய்யக் கூடிய ஒரு உற்பத்திப் பொருளையும் அதனை விற்பனை செய்வதன் மூலம் இலாபத்தை ஈட்டிக் கொள்ளவும் முடிந்துள்ளது. இவை எல்லாம் இந்தியாவை உலகின் ஏனைய பாகத்துடன்- சிறப்பாக புதிய முறையில் அமெரிக்காவுடன் இணைந்து கொள்ளவும் செய்துள்ளது. மென் கல (Soft ware) ஏற்றுமதிகள் ஒரு ஆண்டுக்கு 50 சத வீதம் வளர்ச்சி கண்டு வருவதோடு அவற்றில் கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பாகம் அமெரிக்காவுக்குச் செல்கின்றது. இவற்றில் பெரும் பகுதி தற்காலிக வேலை வீசா (Visa)வின் அடிப்படையில் இந்தியர்களால் பழுது பார்க்கப்படுகிறது. இந்தியா இதில் மூன்றில் ஒரு பங்கைப் பெறுகின்றது. அத்தோடு திரு.கிளின்டன் அதனை அதிகரிப்பார் எனவும் எதிர்பார்க்கின்றது. இந்திய கம்பனிகள் அமெரிக்க பங்குமுதல் சந்தைப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன. அதிகரித்த முறையில் செல்வந்த சமூகமாகிவரும் இந்திய அமெரிக்கர்கள் இந்தியாவின் சார்பில் தாம் சுவீகரித்துக் கொண்ட நாட்டில் ஆதரவு திரட்டி வருவதோடு தமது தேசிய நிலத்தில் முதலீடும் செய்து கொண்டுள்ளார்கள். இந்திய மூளைக்காக ஒரு பூகோளரீதியான ஏலமிடும் யுத்தமும் வெடித்துள்ளது."

அமெரிக்க நிர்வாகம் வாஜ்பாய் அரசாங்கத்தை இந்தியாவில் தழுவிக் கொண்டமையானது அமெரிக்க கூட்டுத்தாபனங்களுக்கான முதலீட்டு வாய்ப்புகளைப் பற்றிய பிரச்சாரம் நீண்ட தூரம் சென்றுள்ளதைக் காட்டுகின்றது. இந்தியாவிலும் அனைத்துலக ரீதியிலும் ஆளும் வர்க்கத்தின் சக்திவாய்ந்த பகுதியினர்



அடல் பிஹாரி வாஜ்பாய்



ஜெனரல் முஷாராப்

கம்பனி முதலீட்டாளர்கள் கோரிவரும் பொருளாதார மறுசீரமைப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கான சிறந்த சாதனம் இந்து சோவினிச பாரதீய ஜனதா கட்சியினரே எனக் கணக்குப் போட்டுக் கொண்டுள்ளனர். இது அரசுடமைக் கைத்தொழில்களை தனியுடமையாக்குதல், நாட்டின் வரையறுக்கப்பட்ட சமூக சேவைகளையும் உதவி மானியங்களையும் வெட்டித் தள்ளுதல், வர்த்தக, முதலீட்டுத் தடைகளை அகற்றுதல் என்பவற்றை உள்ளடக்கிக் கொண்டுள்ளது. 1990களில் நடைமுறைக்கிடப்பட்ட நடவடிக்கைகளை வரவேற்றுள்ள சர்வதேச நாணய நிதியமும் மற்றும் நிதி நிறுவனங்களும் பாரதீய ஜனதா கட்சி அரசாங்கம் இந்தப் போக்கினை தொடர்ந்தும் உக்கிரமாக்க வேண்டும் என வலியுறுத்தி வருகின்றது.

'எக்கோனமிஸ்ட்' (Economist) சஞ்சிகை அமெரிக்காவும் ஏனைய சக்திகளும் பாரதீய ஜனதா கட்சியின் இந்து தீவிரவாதத்தையிட்டு சட்டை செய்யாமல் விடுவதன் பின்னணியில் உள்ள காரணிகளையிட்டு ஜாடை காட்டின. இது குறிப்பிட்டதாவது; 1991ல் இருந்து இந்தியா "தனது பொருளாதாரத்தை உலக வர்த்தகத்துக்கு திறந்து விட்டுள்ளதோடு, தனியார்மயமாக்கத்தையும் ஆரம்பித்தது. ஆயினும் இந்த இரு அம்சமும் பெரிதும் மெதுவாக இடம்பெற்றது. இரண்டு வருடங்களுக்கு முன்னர் பாரதீய ஜனதா கட்சியின் அடல் பிஹாரி வாஜ்பாய் தலைமையிலான கூட்டரசாங்கம். உண்மையில் இந்தப் போக்கை விரைவுபடுத்தியது. இந்து தேசியவாதக் கட்சி ஒரு அன்நியர் எதிர்ப்பு கோடுகளைக் கொண்டிருந்த போதிலும் சுதந்திரத்துக்கு பின்னைய 50 வருட காலத்தில் இந்திய அரசியலில் மேலாதிக்கம் கொண்டிருந்த எதிர்க் கட்சியான காங்கிரசைக் காட்டிலும் வர்த்தகர்களுடன் நட்புறவு கொண்டிருந்ததோடு கம்யூனிசத்துக்குப் பெரிதும் எதிர்ப்புக் காட்டியது. இந்நாட்களில் இந்தியா பொருளாதார சபைகளில் அதிகரித்த அளவில் பெரிதும் மதிப்புடன் கணிக்கப்படுகின்றது. உலக வர்த்தக அமைப்பில் (WTO) புதிய பொருளாதார, வர்த்தகப் பிரச்சினைகள் முன்வைக்கப்பட்ட போதெல்லாம் இந்தியாவும் அமெரிக்காவும் தாம் ஒரே புறத்தில் நின்று கொண்டதைக் கண்டன."

கிளின்டன் இந்தியாவின் சமீபத்திய வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட சர்வதேச நாணய நிதிய பொருளாதார மறு சீரமைப்பு வேலைத்திட்டத்தைக் காட்டிலும் மேலும் அதிக அளவில் முன் செல்ல வேண்டும் என நெருக்குவார் என்பதில் சந்தேகம் இல்லை. மும்பாயில் கடந்த நவம்பரில் இடம் பெற்ற ஒரு அமெரிக்க முதலீட்டு உச்சி மாநாட்டில் சுப் (Chubb) கூட்டுத்தாபனத்தின் அதிபரும் அமெரிக்க- இந்திய வர்த்தக சபைத் தலைவருமான டீன் ஓ ஹரே, மேலாய முதலீட்டு உறவுகளுக்கு இரு முக்கிய தடைகள் இருந்து கொண்டுள்ளதாக மிகவும் அவதானத்துடன் குறிப்பிட்டார்: உடன்படிக்கைகளின் புனிதத்துக்கு மரியாதை காட்டாமையும் "பொருளாதார சீர்திருத்தங்களின் மெதுவான பயணமும்".

'இக்னோமிஸ்ட்' சஞ்சிகை மேலும் குறிப்பிட்டதாவது: "...இந்தியப் பொருளாதாரம் அதனது இன்றைய சாதனைகளைக் காட்டிலும் பெரிதும் அதிர்ச்சி தரும் இயலளவைக் கொண்டுள்ளது. கொள்வனவு சக்தியின் அடிப்படையில் இது உலகின் ஐந்தாவது பெரும் பொருளாதாரமாக இருந்த போதிலும் இது உலக வர்த்தகத்தில் 1 வீதத்துக்கு குறைவாகவே கொண்டுள்ளது. 1998ல் வெளிநாட்டு முதலீட்டில் 2.5 பில்லியன் டாலர்களுக்கு குறைவான தொகையையே ஈர்த்துக் கொண்டுள்ளது. இது சீனாவின் இருபதில் ஒரு பங்காகும். எந்த ஒரு வேறு தனி ஒரு நாட்டைக் காட்டிலும் அமெரிக்கா இந்தியாவில் ஒரு பெரிய பொருளாதாரக் கழு மரத்தைக் கொண்டுள்ளது. ஆனால் அந்த வர்த்தகம் காய்ந்து போகும் நிலையில் பற்றாக் குறையானதாகவே கணக்கில் கொள்ளப்படும்."

### மூலோபாய மறு தகவமைவு

கிளின்டன் இந்தியாவில் இருப்பது சும்மா வெறுமனே பொருளாதார வாய்ப்புக்களை அதிகரிப்பதற்காக மட்டும் அல்ல. எவ்வாறெனினும் இந்தியாவுடன் மிகவும் நெருக்கமான மூலோபாய உறவுகளுக்கான சாத்தியங்களைத் தெரிந்து கொள்ளவே இருந்து கொண்டுள்ளார். கடந்த சனிக்கிழமை வெளியான "இன்டர்நஷனல் ஹெரால்ட் றிபியூன்" (International Herald tribune) "அடிக்கடி சச்சரவிட்டுக் கொண்ட அமெரிக்காவும் இந்தியாவும் ஒரே பக்கத்துக்கு வந்துள்ளன." என்ற தலைப்பில் அமெரிக்க இராஜாங்க செயலாளர் மடலின் ஆல்பிரைட் சுட்டிக்காட்டிய விடயங்கள் வெளியாகிருந்தன. அதில் கிளின்டனின் இந்திய விஜயத்துக்கு பின்னணியில் இருந்துகொண்டுள்ள அமெரிக்கக் கணிப்புக்களில் சில மறைமுகமான விதத்தில் வெளியிடப்பட்டிருந்தது. குளிர் யுத்த காலத்தில் பெரும் பகுதியில் இந்தியாவுடன் இருந்து வந்து பகைமையான உறவுகளைச் சுற்றிவளைத்துக் குறிப்பிட்டதன் பின்னர் மடலின் ஆல்பிரைட் தெரிவித்துள்ளதாவது: "எவ்வாறெனினும் இன்று பரஸ்பரம் நம்பிக்கையீனம் மாற்றமடையத் தொடங்கியுள்ளது. அமெரிக்காவும் இந்தியாவும் எமது இரண்டு ஜனநாயக நாடுகளுக்கும் இடையே எப்போதும் ஒரு விதமான இயற்கையற்றதும் வருந்தத்தக்கதுமான உறவுகள் இருந்து வந்ததையிட்டு உணரத் தொடங்கியுள்ளன."

இந்தக் குளிர் யுத்த காலப் பகுதியில் இந்தப் பிராந்தியம் தொடர்பான அமெரிக்கக் கொள்கை பாகிஸ்தான் பக்கம் 'சாய்ந்து' போய்க் கிடந்தது. பாகிஸ்தானில் பெரிதும் நிலவி வந்த இராணுவ சர்வாதிகாரத்துக்கு வாஷிங்டன் இந்தியாவுக்கு எதிராக இராஜதந்திர, இராணுவ, நிதி உதவிகளை வழங்கி வந்தது. இந்தியா கூட்டுச்சேரா நாடுகளின் அணி எனப்படுவதன் ஒரு பாகமாக இருந்த போதிலும் மாஜி சோவியத் யூனியனுடன் நெருக்கமான உறவுகளைக் கொண்டிருந்தது. 1980 களில் அமெரிக்கா பாகிஸ்தானுடன் கொண்டிருந்த உறவுகள் மேலும் பலம் கண்டன. ஆப்கானிஸ்தானில் இருந்து வந்த சோவியத் ஆட்சியாளர்களுக்கு எதிரான. தமது யுத்தத்தில் சீ.ஐ.ஏ (CIA) இந்நாட்டினை இஸ்லாமிய அடிப்படைவாதக் குழுக்கழுக்கு நிதியீட்டம் செய்வதற்கும் பயிற்சியளிப்பதற்குமான ஒரு தளமாக்கிக் கொண்டது.

ஆனால் சோவியத்யூனியனின் வீழ்ச்சியைத் தொடர்ந்து இந்தப் பிராந்தியம் தொடர்பான அமெரிக்க மூலோபாயம் மாற்றம் கண்டது. பிரமாண்டமான அளவில் எண்ணெய், இயற்கை வாயு, கனிப் பொருள் வளங்களை சுரண்டிக் கொள்வதற்கு அமெரிக்க கூட்டுத்தாபனங்கள் ஐரோப்பாவுடனும் மற்றும் போட்டியாளர்களுடனும் போட்டியில் ஈடுபட்டுள்ள நிலையில் தானே ஆதரவு வழங்கி அணிதிரட்டிய இஸ்லாமிய அடிப்படைவாதிகள் மத்திய கிழக்கிலும் மத்திய ஆசியாவிலும் தனது நலன்களுக்கு ஒரு ஆபத்தாக இருந்து கொண்டுள்ளதாக இன்று அமெரிக்கா கணித்துக் கொண்டுள்ளது.

அமெரிக்கா சவூதி அரேபியாவின் கோடீஸ்வரரான ஒஸாமா பின் லேடனுக்குத் தொடர்ந்தும் புகலிடம் கொடுத்து வருவதற்கு எதிராக ஆப்கானிஸ்தானின் தலிபான் ஆட்சியாளர்களுக்கு எதிராகப் பொருளாதாரத் தடைகளை விதித்தது. இந்த ஒஸாமா பின் லேடன் கென்யாவிலும் தன்சானியாவிலும் உள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்கத் தூதரகங்கள் மீது குண்டு வீச்சு நடாத்த ஏற்பாடு செய்தவராக குற்றம் சாட்டப்பட்டுள்ளார். ஆனால் அமெரிக்கா ஆப்கானிஸ்தானத்தில் தளங்களைக் கொண்டுள்ள- ஈடாட்டம் கண்ட மத்திய ஆசிய குடியரசுகளின் பல ஆயுதம் தாங்கிய எதிர்ப்புக் குழுக்களின் நடவடிக்கைகளையிட்டும் கவலை கொண்டுள்ளது.

கடந்த ஆண்டில் கார்கில் தகராறின் போது கிளின்டன் இந்தியாவுக்கு ஒரு அப்பட்டமான பூர்வாங்க அரசியல் ஆதரவை வழங்கினார். இந்தியப் பிராந்தியத்தில் இருந்து கொண்டுள்ள காஷ்மீர் பிரிவினைவாதிகளுக்கு ஆதரவு வழங்குவதை வாபஸ் பெறும்படி நவாஷ் ஷெரிபின் பாகிஸ்தானிய அரசாங்கத்தை நெருக்கினார். எவ்வாறெனினும் அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் மீதான திரைமறைவு பேச்சுவார்த்தைகள் சில காலமாக இடம் பெற்று வந்துள்ளன. 1998ம் ஆண்டின் அணுவாயுத பரிசோதனை நடவடிக்கைளைத் தொடர்ந்து இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையேயான பதட்ட நிலைமையைத் தணிக்கும் போர்வையில் அமெரிக்க பிரதி இராஜாங்க செயலாளர் ஸ்ரொப் டல்பொட்டுக்கும் இந்திய வெளிநாட்டு அமைச்சர் ஜஸ்வந் சிங்குக்கும், இந்திய- அமெரிக்க அதிகாரிகளுக்கு இடையேயும் முன்னொருபோதும் இல்லாத அளவிலான நீண்ட எட்டுச் சுற்று "மூலோபாய பேச்சுவார்த்தைகள்" இடம் பெற்றுள்ளன. கார்கில் மோதுதல்களின் பின்னர் அமெரிக்க, இந்திய உளவுச் சேவையினர் "பயங்கரவாதத்தை எதிர்க்கும்" பேரில் மிகவும் நெருக்கமாக சேர்ந்து செயற்படத் தொடங்கினர். கிளின்டனின் இந்திய விஜயத்தின் மூலோபாய விவகாரங்களை மூடி மறைப்பதில் அமெரிக்கா கவனமாக இருந்து கொண்டுள்ளது. அது இந்திய பக்கம் 'சாய்ந்து' கொண்டுள்ளதாக காட்டிக் கொள்வதை சுட்டிக் காட்டுகின்றது. ஆல்பிரைட் தனது கட்டுரையில் அமெரிக்காவின் "முதலாவது பாதுகாப்பு விவகாரமாக" இந்தியாவின் அணுவாயுத உற்பத்திக் குதம் இருந்து கொண்டுள்ளதாக குறிப்பிட்டிருந்தார். ஆனால் பெரிதும் சிரமத்துடன் "அமெரிக்கா இந்தியாவின் ஏவுகணைகளையோ அல்லது அணுவாயுதங்களையோ ஒரு நேரடி அச்சுறுத்தலாக கருதவில்லை எனச் சுட்டிக் காட்டுவதோடு முடிந்த மட்டும் சாத்தியமான அளவில் இந்தியா தனது பாதுகாப்பு அவசியங்களை பெரிதும் பெருக்கிக் கொள்ளக் கூடாது என்பதையிட்டே அக்கறை காட்டுகின்றோம்" என்றுள்ளார். கிளின்டனின் இந்திய விஜயத்தின் போது இந்தியா அணுவாயுத உற்பத்தித் தடை ஒப்பந்தத்தில் (CTBT) கைச்சாத்திட வேண்டும் என அமெரிக்கா வலியுறுத்தவில்லை என்ற உண்மையும் சேர்ந்து கொண்டுள்ளது. இந்திய ஆளும் வட்டாரங்களில் இச் செய்தி அணுவாயுதங்களைக் கொண்ட இந்தியாவுக்கான ஒரு மறைமுகமான அங்கீகாரமாக அர்த்தம் செய்யப்பட்டுள்ளது. கார்கிலில் இராணுவத்தின் நடவடிக்கைகளை ஆய்வு செய்யும் இந்தியக் கமிட்டியின் தலைவரான எல்.சுப்பிரமணியம் அப்பட்டமாகத் தெரிவித்ததாவது: "அணுவாயுத சோதனைகளின் இரண்டு வருடங்களின் பின்னர் இடம் பெறும் இந்த விடயம் ஒரு விடயத்தை குறித்து நிற்கின்றது. அணுவாயுத மேலாதிக்கம் கொண்டவர்களின் கூப்பாட்டுக் கோரிக்கைகளுக்கு பணிந்து போக இந்தியா எதுவும் செய்யாததோடு அமெரிக்க ஜனாதிபதியும் இந்தியாவுக்கு விஜயம் செய்கின்றார். சகலவிதமான கவர்ச்சிகரமான பேச்சுக்களுக்குப் பதிலாக அமெரிக்கா யதார்த்தத்தை அங்கீகரிக்கின்றது."

காஷ்மீர் சம்பந்தப்பட்ட முக்கிய விவகாரத்திலும் கூட அமெரிக்கத் தடியை இந்தியாவின் திசையில் நீட்டிக் கொண்டுள்ளது. காஷ்மீர் பிரச்சினை ஒரு உள்நாட்டுப் பிரச்சினை. ஆதலால் இந்தியா அனைத்துலக மத்தியஸ்தத்தை ஏற்றுக் கொள்ளாது என்ற இந்திய அரசாங்கத்தின் நீண்டகால வலியுறுத்தலுக்கு இணங்கிப் போகும் விதத்தில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் - இடையேயான சச்சரவில் தனிப்பட்ட ரீதியில் மத்தியஸ்தம் வகிக்க வேண்டும் என்ற வேண்டுகோள்களையும் கிளின்டன் தள்ளிவிட்டுள்ளார்.

மேலும் 1971ம் ஆண்டு யுத்தத்தை முடிவுக்குக் கொணர பாகிஸ்தானுக்கும் இந்தியாவின் கட்டுப்பாட்டில் உள்ளதுமான காஷ்மீருக்கும் இடையே ஸ்தாபிதம் செய்யப்பட்ட கட்டுப்பாட்டுக் கோட்டை (Line of control- LOC) மதித்து நடக்க வேண்டும் எனவும் ஆல்பிரைட் வேண்டுகோள் விடுத்துள்ளார். ஆல்பிரைட்டின் அறிக்கையை இராஜதந்திர பாஷையில் மொழி பெயர்க்குமிடத்து பாகிஸ்தானில் இருந்து ஜம்மு காஷ்மீருக்குள் ஊடுருவிக் கொண்டுள்ள காஷ்மீர் பிரிவினைவாத போராளிகளுக்கு எதிராக விடுக்கப்பட்டதாகும். கிளின்டன் தனது இந்திய விஜயத்துக்கு முன்னர் இந்தியத் துணைக் கண்டத்தை "உலகின் மிகவும் பயங்கரமான இடமாக" வருணித்திருந்தார். பிராந்தியத்தில் பதட்ட நிலைமை தணிப்பதையும் ஒரு நீண்ட சமாதானத்தை- குறிப்பாக இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே- ஸ்தாபிதம் செய்வதையும் இலக்காகக் கொண்ட சாதனமாக தமது பயணத்தை கிளின்டன் காட்டிக் கொண்டார். பாரதீய ஜனதா கட்சியின் தீவிரவாதிகளின் ஆட்சி இடம்பெறும் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே நெருக்கமான உறவு இருந்து கொண்டுள்ளதை நம்புவதற்கு பல காரணங்கள் உள்ளன. இவை சமாதானத்துக்கு இட்டுச் செல்வதற்கு மாறாக ஏற்கனவே உலகின் ஈடாட்டம் கண்ட பிராந்தியத்தின் ஸ்திரப்பாட்டை மேலும் குழப்பியடிப்பதாக விளங்கும். இந்தியா பாகிஸ்தான் தொடர்பாகவும் அப்பிராந்தியம் பூராவும் பெரிதும் உக்கிரமான நிலைப்பாட்டை வகிக்க வேண்டும் என்பது தொடர்பாக புதுடில்லியில் இடம் பெறும் பேச்சுவார்த்தையின் அறிகுறிகளை சுப்பிரமணியத்தின் கருத்துக் காட்டிக் கொண்டுள்ளது. உண்மையில் பாரதீய ஜனதா கட்சி தலைமையிலான அரசாங்கம் பாதுகாப்புச் செலவீனங்களை 28 சதவீதத்தினால் அதிகரிக்கும் ஒரு வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்துள்ளது. இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னான்டஸ் "வரையறுக்கப்பட்ட யுத்த" சித்தாந்தத்தை விற்பனைக்கு விடப் புதிய முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார். இந்தியாவும் பாகிஸ்தானும் காஷ்மீரில் யுத்தத்தில் ஈடுபடும் அல்லது அணுவாயுதங்களைக் கையாளாமல் முழு அளவிலான பாரம்பரிய யுத்தத்தில் ஈடுபடும் ஆபத்தை இக்கருத்துக் கொண்டுள்ளது.

பாகிஸ்தானுக்குத் தொடர்ந்து ஆதரவளித்து வருவதும் இந்தியாவுடன் நீண்டகால எல்லைப் பிரச்சினையைக் கொண்டுள்ளதுமான சீனாவுக்கு எதிராக ஒரு அணுவாயுத பாணியான இந்தியாவை பயன்படுத்துவது பயனுள்ளதாக இருக்கும் என்ற பெரிதும் ஆபத்தான கருத்துக்கும் வாஷிங்டனில் வரவேற்புக் கிடைத்துள்ளது. 'இக்கனோமிஸ்ட்' சஞ்சிகையில் வெளியான ஒரு கட்டுரை மேற்சொன்ன கருத்தைச் சுட்டிக் காட்டிக் கூறியதாவது: இந்திய, அமெரிக்க நலன்களுக்கு இடையேயான இடைவெளி குறுகிக் கொண்டு போவது இரண்டாவது முக்கிய விடயமாகும். அது இந்த விஜயத்தில் அப்பட்டமாகக் குறிப்பிடப்படாது போகலாம் அது இதுதான்: "சில மூலோபாயவாதிகள் இந்தியாவை சீனாவுக்கு சமபலமானதாக சிந்திக்கத் தொடங்கியுள்ளனர். உலகம் இந்தியா கிட்டத்தட்ட சீனாவுக்கு சமமான சனத்தொகையை கொண்டுள்ளதை நோக்கி வருகின்றது. அத்தோடு பெரிதும் தீவிரம் இல்லாத அரசாங்க முறைகளையும் கொண்டுள்ளது. தனது அயலவரைப் பற்றி திட்டமும் இல்லாதுள்ளது. இந்தியாவிலும் அமெரிக்காவிலும் உள்ள சீன இராசாளிகள் இரு பெரும் ஜனநாயகங்களுக்கும் இடையேயான ஒரு "மூலோபாய பங்குடமை" பற்றி கனவு காண்கின்றன."

அமெரிக்காவோ அல்லது இந்தியாவோ "தமது நட்புக்கள் ஒரு சீன எதிர்ப்பு அச்சிலான ஒரு தொடக்கமாக நோக்கப்படுவதை" விரும்பவில்லை என இக்கட்டுரை குறிப்பிட்ட போதிலும் "புரூங்கிங்ஸ் இன்ஸ்ரிரியூட்டின்" றிச்சாட் ஹாஸ், 'வாஷிங்டன் திங் டாங்' (Washington think- Tank) போன்றவை அமெரிக்காவும் இந்தியாவும்; ஆசியா அத்தோடு சீனா சம்பந்தமான ஒரு அணுகுமுறைக்கு இணக்கம் காணுமா என்பதையிட்டு ஆச்சரியம் தெரிவித்துள்ளன. சிலவேளை இணக்கம் காணாது போகலாம். இருப்பினும் சீனா எதிர்ப்புக் காட்டுமானால் இன்றைய உறவுகள் நாளைய கூட்டுக்களாக மாறலாம். கிளின்டனுக்கும் வாஜ்பாய்க்கும் இடையேயான பேச்சுவார்த்தைகளின் சரியான தன்மையை கணக்கில் எடுக்காது போனாலும் அமெரிக்காவுடனான ஒரு நெருங்கிய உறவானது அமெரிக்காவை பிராந்தியத்தினுள் ஒரு பெரிதும் உக்கிரமான நிலைப்பாட்டைக் கடைப்பிடிக்கத் தள்ளும். கிளின்டன் இஸ்லாமாபாத்திலும் தரித்துச் சென்றமை அமெரிக்கா கட்டவிழ்த்து விடும் எதையும் எந்தவிதத்திலும் கட்டுப்படுத்த முடியாது என்பதற்கு ஒரு பின்னணியாக இருந்து கொண்டுள்ளது. இந்தக் கணிப்பில் சந்தேகம் கிடையாது. உத்தரவாதம் இல்லாததும் பெரிதும் ஈடாட்டம் கண்டதுமான காலப்பகுதியில் முடிவுக்கு வந்த குளிர் யுத்தத்தைக் கடைப்பிடிப்பதை தொடர்ந்தது. அமெரிக்கா தனது சகல முட்டைகளையும் ஒரே பொதியில் போட்டு வைக்க விரும்பவில்லை. இந்தியன் பாகிஸ்தானிய முகாம்களில் ஒரு கால் வைப்பதன் மூலம் ஒன்றை மற்றறொன்றுக்கு எதிராக தூண்டி விட்டு விளையாட முடிந்துள்ளது. இந்த விளையாட்டு பேராபத்து நிறைந்ததாகும்.



வறுமையில் வாடும் இந்திய மக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியத் திரைப்பட இயக்குனர் தீபா மேத்தாவிற்கு எ
# இந்து தீவிரவாதிகளின் தாக்குதலை எதிர்ப்போம்!

## உலக சோசலிச வெப் தளத்தின் வேண்டுகோள்

**உலக சோசலிச வெப் தளத்தின் ஆசிரியர் குழு அறிக்கை**

தீபா மேத்தாவின் சமீபத்திய 'வோட்டர்' (தண்ணீர்) திரைப்படத்துக்கான தயாரிப்பு நடவடிக்கைகளை நிறுத்தும்படி இந்து அடிப்படைவாதிகள் இந்தியாவில் நடாத்திவரும் பிரச்சார இயக்கத்தை உலக சோசலிச வெப் தளம் கண்டனம் செய்வதோடு இந்த ஜனநாயக உரிமைகளுக்கு எதிரான தாக்குதலுக்கு எதிராக ஒரு நிலையான நிலைப்பாட்டை வகிக்கும்படி திரைப்பட இயக்குனர்களையும் கலைஞர்களையும், புத்திஜீவிகளையும் தொழிலாளர்களையும் அனைத்துலக ரீதியில் வேண்டுகின்றது.

பாரதீய ஜனதா கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து ஒரு இந்து தீவிரவாதக் கும்பல் இந்தப் படத் தயாரிப்புக்கு எதிராக நடாத்திவரும் வன்முறைத் தாக்குதல்கள், அதிகாரத்துவ ஆத்திரமூட்டல்கள், உடல் ரீதியான பயமுறுத்தல்கள் காரணமாக மேத்தா 'வோட்டர்' (WATER) திரைப்படத் தயாரிப்பை இடைநிறுத்தத் தள்ளப்பட்டுள்ளார். பாரதீய ஜனதா கட்சி இந்திய கூட்டரசாங்கத்தில் முக்கிய கட்சியாக இருப்பதோடு பல இந்திய மாநிலங்களிலும் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டுள்ளது.


இந்த 'வோட்டர்' திரைப்படம் 1930களில் ஒரு இந்து கோவிலின் அயலில் வறுமையால் பீடிக்கப்பட்ட விதவைகளின் வாழ்க்கைப் போராட்டத்தை சித்தரிப்பதாக அமைந்துள்ளது. கடந்த ஜனவரி 30ம் திகதி உத்தரப் பிரதேசத்தில் உள்ள வர்ணாசியில் இத்திரைப்படத்துக்கான படப்பிடிப்பு ஆரம்பமாக இருந்தது. அன்று உள்ளூர் பா.ஜ.க. அரசியல்வாதிகளின் தலைமையில் இந்து தீவிரவாதிகள் நடாத்திய கலகத்தினால் திரைப்பட 'செட்' தவிடு பொடியாக்கப்பட்டது. 650,000 டாலர்களுக்கும் அதிகமான சேதம் ஏற்பட்டது. அவர்களின் வாதத்தின்படி இத்திரைப்படம் இந்து விதவைகளை தரம் குறைப்பதாகவும் இது இந்து மதத்துக்கு எதிரான கிறீஸ்தவ சதியின் ஒரு பாகமாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திரைப்படம் சிவில் ஒழுங்கீனங்களை தூண்டிவிடுவதாகக் கூறி பாரதீய ஜனதா கட்சியின் மாநில அரசாங்கம் ஏழு நாட்களில் இரண்டு தடவைகள் இப்படப்பிடிப்பை தடை செய்தது. இதைத் தொடர்ந்து மேத்தா பெப்பிரவரி 6ம் திகதி உத்தரப் பிரதேசத்தில் இருந்து வெளியேறினார். இந்திய பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் இப்படப்பிடிப்பில் ஈடுபடுவதற்கு மேத்தாவிற்கு உள்ள உரிமைக்கு ஆதரவளிப்பதாகக் கூறிக் கொண்ட போதிலும் இந்தத் தாக்குதல்களை நிறுத்த எதுவும் செய்யவில்லை. மாநில அரசாங்கம் இனவாத சக்திகளுடன் ஒன்றிணைந்து இத்தாக்குதலை முன்னெடுக்கத் தொழிற்பட்டு வருகின்றது.

வாஜ்பாயும் உள்துறை அமைச்சர் எல்.கே. அத்வானியும் ஒரு தீவிர வலதுசாரி இயக்கமான ஆர்.எஸ்.எஸ்.சின் ஆயுள்கால அங்கத்தவர்கள். இந்த அமைப்பு 1948ல் மகாத்மா காந்தியின் படுகொலையுடன் தொடர்புபட்டது. கனரக கைத்தொழில் அமைச்சர் மனோஹர் ஜோசி சிவசேனை தலைவர்களில் ஒருவர். இது ஒரு பாசிச அமைப்பு. இது பாரதீய ஜனதா கட்சியின் கூட்டரசாங்க பங்காளியாகவும் சகாவாகவும் இருந்து கொண்டுள்ளது. 1992 ல் அத்வானி தலைமையில் இடம் பெற்ற பிரச்சார இயக்கம் காரணமாக அயோத்தி பாபர் மசூதி தரைமட்டமாக்கப்பட்டது. 1947ல் இந்திய பிரிவினையின் பின்னர் படு மோசமான இனவாதக் கலவரங்களை இது உருவாக்கியது. இந்த மசூதி விவகாரத்தை மீண்டும் கிளறிவிட்டு 1993 ஜனவரியில் பம்பாயில் ஒரு இனக்கலவரத்தை தூண்டிவிட ஜே.எஸ்.எஸ். முயன்றது என ஒரு நீதி விசாரணை ஆணைக் குழு தெரிவித்தது. இதன் விளைவாக பல நூற்றுக் கணக்கான முஸ்லீம்கள் கொல்லப்பட்டனர். சிவசேனையும், விஸ்வ ஹிந்து பர்ஷாத்தும் (World Hindu Forum) மேத்தாவை இந்தியாவில் இருந்து வெளியேற்ற அடம்பிடித்ததோடு, மேத்தாவின் 'வோட்டர்' படப்பிடிப்பு இடம் பெறுவதைத் தடுக்க அவரை கொல்வதற்கு அல்லது கொலை செய்விப்பதற்கு சில இனவாதக் குழுக்கள் அச்சுறுத்தியுள்ளன.

மேத்தாவின் முன்னைய திரைப் படங்களான 'பயர்'(Fire-1996 ) 'ஏர்த்' (Earth- 1998) தும் அவரை இந்திய தீவிரவாதிகளுடன் மோதிக் கொள்ளச் செய்தன. எனினும் "இந்தப் பயமுறுத்தல்களால் தான் அடிபணிந்து போய்விடப் போவதில்லை" எனத் தெரிவித்த அவர் இந்த பிரச்சார இயக்கத்தை "குண்டர்களால் திணிக்கப்பட்ட தயாரிப்புக்கு முந்திய தணிக்கை" என வருணித்துள்ளார். இந்தப் படம் தடுக்கப்படுமேயானால் அது "இந்தியாவில் ஜனநாயகத்தின் முடிவை" பிரதிநிதித்துவம் செய்யும் என ஒரு பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் மேத்தா தெரிவித்துள்ளார்.

இந்த எச்சரிக்கைகளை பாரதூரமான ஒன்றாகக் கொள்ள வேண்டும். மேத்தாவின் படத்துக்கான படப்பிடிப்பு இடம் பெறாதிருக்க இந்து தீவிரவாதிகள் நடாத்திவரும் இயக்கம் ஒரு அன்னியப்பட்ட ஒன்றல்ல. ஆனால் இந்து மத நெறிமுறைகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு வலதுசாரி தேசியவாத அரச சித்தாந்தத்தை இந்தியாவில் திணிக்கச் செய்யப்படும் முயற்சிகளின் ஒரு பாகமாகும். பெரும்பான்மை மக்களின் வாழ்க்கை நிலைமைகள் சீரழிந்தும் செல்வந்தர்களுக்கும் ஏழைகளுக்கும் இடையேயான ஆதாளபாதாளம் மேலும் ஆழமாகிக் கொண்டுள்ள ஒரு நிலையிலும் இந்திய வெகுஜனங்களை சாதி, மத ரீதியில் பிளவுபடுத்த இனவாத உணர்வுகளை தூண்டி விடுவதில் பாரதீய ஜனதா கட்சி முன்னணியில் நின்று கொண்டுள்ளது. இந்தியாவில் சினிமா ஒரு பிரமாண்டமான பாத்திரத்தை வகிக்கின்றது. இந்திய சமூகத்தின் நிலைமைகளை ஒரு விமர்சன நோக்கில் அணுகும் படத் தயாரிப்பாளர்கள் பாரதீய ஜனதா கட்சியினதும் இந்து தீவிரவாதிகளதும் இலக்காகியுள்ளனர்.



ஷபானா அஸ்மியும் நந்திதாதாசும் படப்பிடிப்புக்கு தயாராகின்றனர்

இந்தியாவில் இருந்து கொண்டுள்ள சட்ட விதிகளின்படி வெளிநாட்டு நிதியீட்டம் செய்யப்படும் படத் தயாரிப்பாளர்கள் இந்தியாவில் படம் தயாரிக்க வேண்டின் இந்திய மத்திய அரசாங்கத்தின் அங்கீகாரத்துக்காக திரைக்கதை பிரதியை சமர்ப்பிக்க வேண்டும். அந்தப் படம் அனுமதிக்கப்படுமிடத்து ஒரு விசேட தொடர்பு அதிகாரியை அரசு நியமனம் செய்யும். இவருக்கு இந்த படத் தயாரிப்பின் பல்வேறு அம்சங்களையும் இடைமறிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட திரைக் கதையில் இருந்து திரைப்பட இயக்குனர் விலகிச் செல்லுமிடத்து அதிகாரி படத்தயாரிப்பை நிறுத்திவிட உத்தரவிட முடியும்.

கலைத்துறை வெளிப்பாடுகள் மீதான இந்த அடாவடித்தனங்கள் வெளிநாட்டு பட இயக்குனர்களுக்கு மட்டும் உரிய ஒன்றல்ல. மணிரத்னம், மீரா நாயர், ஷேகர் கபூர் ஆகியோரும் கூட அரசாங்கத்தின் தணிக்கைகளுக்கு இலக்கானதோடு படத் தயாரிப்பின் போதோ அல்லது படம் திரையிடப்படும் போதோ தீவிரவாதிகளின் கலவரங்களுக்கு இலக்காக நேரிட்டது. இந்த தாக்குதல்கள் திரைப்பட இயக்குனர்களுடன் மட்டும் நின்று விடவில்லை. மேத்தாவிற்கு எதிரான எதிர்ப்பு நடவடிக்கைகள் கடந்த தசாப்தத்தில் பாரதீய ஜனதா கட்சியின் எழுச்சியோடு உக்கிரம் கண்ட படைப்பாளிகளதும், புத்திஜீவிகளதும் ஜனநாயக உரிமைகள் மீதான தொடர்ச்சியான தாக்குதல்களில் ஒன்றாகும்.

இந்தியாவின் முன்னணி ஓவியரான எம்.எப்.ஹுசேனுக்கு எதிராக சமீப காலத்தில் இடம் பெற்றவை கலைஞர்களுக்கு எதிரான மிகவும் படு மோசமான வன்முறை நடவடிக்கை வகையறாவை சேர்ந்ததாகும். ஹுசேன் இந்து தெய்வங்களான சரஸ்வதியையும் திரௌபதையையும் நிர்வாணச் சித்திரங்களாக வரைந்ததாக கூறி தண்டிக்கப்பட்டார். அதே சமயம் மாநில அரசாங்கங்களிலும் மத்திய அரசாங்கத்திலும் உள்ள பா.ஜ.க. சக்திகள் கல்வி முறை "இந்துமயமாக்கப்பட" வேண்டும் எனவும் பாடசாலை பாடவிதானத்திலும் பாடப் புத்தகங்களிலும் மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் எனவும் கோரி நெருக்கி வந்தன.

பெப்பிரவரி நடுப்பகுதியில் இனவாதிகள் மேத்தாவை உத்தர பிரதேசத்தில் இருந்து வெளியேற்றிய ஒரு சில நாட்களுக்குள் இந்திய வரலாற்று ஆராய்ச்சி நிறுவனத்தில் மேலாதிக்கம் கொண்டுள்ள பா.ஜ.க.–ஆர்.எஸ்.எஸ். சக்திகள், இந்தியாவை பற்றிய வரலாற்றுப் பத்திரங்களின் தொகுதிகளின் ஒரு பாகமாக 'சுதந்திரத்தை நோக்கி' என்ற நூலின் இரண்டு தொகுப்புகளின் வெளியீடு நிறுத்தப்பட வேண்டும் என உத்தரவிட்டது. இந்தப் பிரச்சினைக்குரிய தொகுதிகளும் முறையே இந்தியாவின் முன்னணி வரலாற்று நிபுணர்களான பேராசிரியர் சுமித் சர்க்காராலும் பேராசிரியர். கே.என்.பனிக்காராலும் எழுதப்பட்டவையாகும்.

'நவீன இந்தியா' (Modern India) வினதும் இன்னும் பல வரலாற்று ஆய்வுகளதும், கட்டுரைகளதும் ஆசிரியரான சர்க்கார் இந்தியாவின் முன்னணி வரலாற்று ஆசிரியரும் அனைத்துலக அந்தஸ்தும் புகழும் பெற்ற ஒரு புத்திஜீவி ஆவார். வெகுஜனத் தொடர்புச் சாதனங்களுக்கு வழங்கிய பேட்டியில் சர்க்கார் பா.ஜ.க. கடந்த காலத்தை "தனது பாசிச நிகழ்ச்சி நிரலுக்கு பொருத்தமான முறையில்" மாற்றியமைக்க முயற்சிப்பதாகவும் இது "இந்தியாவில் ஜனநாயகத்தை ஒழித்துக் கட்டும் இலக்கிலான நடவடிக்கை". ஆகும் எனவும் தெரிவித்துள்ளார்.

ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழக வரலாற்று சுவடிகள் காப்பகத்தின் தலைவரான பனிக்கார், பா.ஜ.க. இந்தியாவின் கல்வி முறையை அடியோடு மாற்றி அமைக்கவும் அவற்றின் பாடவிதானத்தை கட்டுப்படுத்தவும் முயற்சிப்பதாக எச்சரிக்கை செய்துள்ளார்.

கலைஞர்களுக்கும் புத்திஜீவிகளுக்கும் எதிரான அரசாங்கங்களதும் தீவிரவாத சக்திகளதும் அரசியல் பயமுறுத்தல்கள் இந்தியாவிற்கு மட்டும் உரிய ஒன்றல்ல. அரசியல் எதிர்ப்பாளர்களின் வாய்களை மூடச் செய்ய இனவாதச் சக்திகளை தூண்டிவிடுவது இந்தியத் துணைக் கண்டம் பூராவும் வெளிப்பாடாகியுள்ளதைக் காணக் கூடியதாகியுள்ளது.

பங்களாதேஷ் எழுத்தாளரான தஸ்லிமா நஸ்ரின், அந்நாட்டில் ஒரு "இஸ்லாமிய எதிரியாக" பேர் சூட்டப்பட்டுள்ளார். அங்கு அவரின் நூல்களுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. நாட்டில் இருந்து வெளியேறிய இந்தப் படைப்பாளி, ஒரு மத நிந்தனை குற்றச்சாட்டுக்கு உள்ளாகி உள்ளதோடு இஸ்லாமிய சோவினிஸ்டுகள் அவரை படுகொலை செய்வதாகவும் மிரட்டியுள்ளனர். கடந்த ஆண்டில் இஸ்லாமிய தீவிரவாதிகள் பங்களாதேஷின் முன்னணி கவிஞரான ஷம்சூர் ரஹுமானை படுகொலை செய்வதில் பெரிதும் வெற்றி கண்டனர். ரஹுமான் கோடரியால் தாக்கப்பட்டார்.

இந்தியாவில் பிறந்தவரும் அனைத்துலக புகழ் பெற்றவருமான சல்மான் ருஷ்டி, அவரின் படைப்பான "சாத்தானிக் வேர்சஸ்" (Satanic Verses ) என்ற நூலின் பேரில்11 ஆண்டுகளுக்கு முன்னர் ஈரானின் மதத் தலைவரான அயதுல்லா கொமெய்னி அவரை கொலை செய்யும்படி முஸ்லீம்களை வேண்டினார். கொர்டாட்–15 என்ற ஒரு ஈரானிய அடிப்படைவாதக் குழு ருஷ்டியை படுகொலை செய்பவருக்கு 2.5 மில்லியன் டாலர்களை சன்மானமாக வழங்க முன்வந்தது.

இலங்கையில் அரசாங்கம் எந்த ஒரு விமர்சனத்தையும் சகித்துக் கொள்ள முடியாத ஒன்றாகிப் போயுள்ளது. ஆளும் பொதுஜன முன்னணி அரசாங்கத்தை எதிர்க்கும், பாடகர்கள், நடிகர்கள், கலைஞர்கள், புத்திஜீவிகள் ஆகியோருக்கு எதிராக கொலை பயமுறுத்தல்களையும் வீடுகள் மீதான குண்டு வீச்சுக்களையும் நடாத்திக் கொண்டுள்ளது.

கலை கருத்து வெளிப்பாட்டு சுதந்திரம் மீதான தாக்குதல்கள் முன்னேறிய நாடுகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. அந்நாடுகளில் கிறிஸ்தவ அடிப்படைவாதிகளும் மற்றும் பழைமைவாத ஆதரவு குழுக்களும் தமது செல்வாக்கை செலுத்தி வருகின்றன. அமெரிக்காவில் கடந்த செப்டம்பரில் புரூக்ளின் மியூசியத்தில் பிரித்தானிய கலைஞர்களின் ஒரு கண்காட்சி –Sensation- இடம் பெற்றது. நியூயோர்க் நகர மேயர் கியூலியனி, Sensation கண்காட்சியை இழுத்து மூட முயன்றார். கண்காட்சி "கத்தோலிக்கருக்கு ஓங்கி அடிப்பதாகவும்" மத எதிர்ப்பானது எனவும் அவர் தெரிவித்தார். ஒரு சில வாரங்களின் பின்னர் மிச்சிக்கனில் அதிகாரிகள் டெட்ரொயிட் கலை நிறுவனத்தில் இடம் பெற்ற சமகால கலை கண்காட்சியை நடாத்தவிடாது தடுத்தனர்.

நவம்பர் கடைப்பகுதியில் அவுஸ்திரேலிய தேசிய கலையரங்கு அங்கு இடம்பெற இருந்த Sensation கண்காட்சியை இரத்துச் செய்தது. இந்தக் கலையரங்கின் பணிப்பாளருக்கு ஒரு சில ஆட்சேபக் கடிதங்கள் கிடைத்து இருந்தன. அவர் இந்த கண்காட்சியை பற்றி பழமைவாத ஹொவாட் அரசாங்கத்துடன் கலந்துரையாடியுள்ளார். அவுஸ்திரேலியாவில் சினிமாப் படத் தயாரிப்பாளர்கள் அரசாங்கம் திணிக்க உள்ள கண்டிப்பான திரைப்பட தணிக்கை விதிகளுக்கு முகம் கொடுக்க நேரிட்டுள்ளது.

கடந்த ஆண்டு பேர்ளின் பொலிசார் ஒரு வீடியோ பட வாடகை கம்பனியை முற்றுகையிட்டு படங்களை பறிமுதல் செய்தனர். இக்கம்பனி சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்த சினிமாக்களின் கலாநிலையமாக விளங்கியது.

கலைஞர்களின் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரம் இந்தளவு பாரதூரமான தாக்குதலுக்கு உள்ளாகி இருப்பது ஏன்? இது உலகளாவிய ரீதியில் செல்வந்தர்களுக்கும் ஏழைகளுக்கும் இடையேயான அசமத்துவத்தின் வளர்ச்சி காரணமாக அதிகரித்து வரும் சமூக பதட்ட நிலைமையுடன் தொடர்பு பட்டது. இந்த யதார்த்தத்தை அம்பலப்படுத்துபவர்களின் வாய்களை மூட வைப்பது ஆளும் கும்பலுக்கு அவசியமாகியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ...எதிரான

மிகவும் முக்கியமான படத் தயாரிப்பாளர்களும் கலைஞர்களும் தம்மைச் சுற்றியுள்ள உலகினை ஆழமாக அகழ்ந்து கொண்டுள்ளனர். இந்த சிருஷ்டிகரமான போக்குக்கள் ஆட்சியாளர்களுக்கு ஒரு ஆபத்தை தோற்றுவித்துள்ளது. ஏனெனில் அனைத்து நேர்மையான கலைப் படைப்பாளிகளையும் அதன் இரசிகர்களை சமூக யதார்த்தத்தையும் அனைத்து முரண்பாடுகளையும் கவனமாக ஆய்வு செய்யத் தள்ளச் செய்துள்ளது. ஆக்க இலக்கியத்துக்கான சுதந்திரமானது எந்த ஒரு தோற்றப்பாட்டையும் கலை வளம் மிக்கதாக ஆய்வு செய்யும் ஒரு அடிப்படை ஜனநாயக உரிமையாகும். இது தமது சொந்த சீரழிந்து போன அரசியல், சமூக பொருளாதார நிகழ்ச்சி நிரலை திணிக்க முயற்சிப்பவர்களுக்கு ஒரு அச்சுறுத்தலாக விளங்குகின்றது. தமது சொந்த வரலாற்றையும் சமூக உரிமைகளையும் அறிந்து கொண்டுள்ள ஒரு நனவான சனத்தொகையானது, ஒரு குழம்பித் தடுமாறும் ஒன்றைவிட ஒரு பலமான அரசியல் எதிர்ப்பாளனாகும்.

இந்தியாவில் தீப்பா மேத்தாவுக்கு எதிரான அடிப்படைவாதிகளின் இன்றைய பிரச்சாரமானது 1930 களில் ஹிட்லரின் நாஸிகள் கையாண்ட விதிமுறையை நினைவுக்கு கொணர்கின்றது. பாசிசக் குண்டர்கள் ஆயிரக் கணக்கான நூல்களை தீயிட்டுக் கொழுத்தியதை ஆட்சியாளர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. 19ம் நூற்றாண்டின் ஜேர்மன் கவிஞரான ஹீன்றிச் தீர்க்க தரிசனமாக கூறியது போல்: "எங்கெல்லாம் அவர்கள் நூல்களைத் தீயிட்டுக் கொழுத்தினார்களோ அங்கெல்லாம் அவர்கள் மனித உயிர்களுக்கு தீவைப்பதுடனேயே நிறைவு பெறுவர்". மேத்தாவுக்கு எதிரான அடிப்படைவாதிகளின் அணிதிரள்வானது அதே ஆபத்தை தோற்றுவித்துள்ளதோடு ஒரு தீர்க்கமான அக்கறையையும் வேண்டி நிற்கின்றது.

உலக சோசலிச வெப் தளம் சினிமா கைத்தொழில் துறையில் உள்ளவர்களையும் அனைத்து கலைஞர்கள், எழுத்தாளர்களையும் அனைத்து உழைக்கும் மக்களையும் தீபா மேத்தாவை பேணுவதில் ஒரு நிலைப்பாட்டை வகிக்க வேண்டும் எனக் கோருகின்றது. ஜனநாயக, கலைத்துறை உரிமைகள் மீதான மோசமடைந்து வரும் தாக்குதல்களை எதிர்க்க வேண்டும். இந்து அடிப்படைவாதிகளின் பிரச்சாரம் சவால் செய்யப்படாது போகுமானால் இது வேறு இடங்களில் தீவிரவாத மூலகங்களை ஊக்குவிக்கும். எங்ஙனம் விஞ்ஞான ஆராய்ச்சி வேலைகள் அரசியல் தலையீடுகளால் வரையறுக்கப்பட்டு, அரசாங்க கொள்கைகளால் நிர்ணயம் செய்யப்படுமேயானால் அது முன்னேற்றம் காண முடியாது. அவ்வாறே நிஜ கலைப்படைப்பு பங்களிப்புகளும் பூரண கருத்து வெளிப்பாட்டு சுதந்திரமும் ஆய்வுகளும் இல்லாமல் அபிவிருத்தி காணமுடியாது.

உங்களின் ஆட்சேபனை கடிதங்களை பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

அடால் பிஹாரி வாஜ்பாய்,
இந்திய பிரதமர்,
சவுத் புளொக்,
றெயிசினா ஹில்,
புது டில்லி,
இந்தியா -110 011
பக்ஸ்: 91-11-3019545/ 91-11-3016857

ஸ்ரீ ராம் பிரகாஷ் குப்தா,
முதலமைச்சர்,
உத்தர பிரதேஷ் 5,
காளிதாஸ் மார்க், லக்னோ,
இந்தியா
பக்ஸ்: 91-522-239234/91-522-214876
Email: &

உங்களது ஆட்சேப கடிதங்களின் பிரதிகளை உலக சோசலிச வெப் தளத்துக்கும் (WSWS) அனுப்பிவைக்கவும் Email:

# இந்து தீவிரவாதிகளின் பிரச்சாரத்துக்கு எதிராக தீபா மேத்தா பேசுகிறார்

## 'நாங்கள் முகம் கொடுப்பது அரசியலுக்கே அன்றி மதத்துக்கு அல்ல'

LIBRARY
10 AUG 2000
PERIODICALS DIVISION

ரிச்சாட் பிலிப்ஸ்

இந்தியாவில் பிறந்து சர்வதேச புகழ் பெற்ற திரைப்பட இயக்குனர் தீபா மேத்தா பாரதீய ஜனதா கட்சியுடன் நெருக்கமாக செயல்படும் இந்து தீவிரவாதிகளின் மிகவும் கடுமையான தாக்குதலுக்குள்ளானதுடன் அவருடைய புதிய படமான "தண்ணீர்" (Water) படத்தை உத்தரப்பிரதேசத்தில் தயாரிப்பதும் இடை நிறுத்தப்பட்டுள்ளது.

இந்திய தேசிய ஜனநாயக முன்னணி அரசாங்கத்தில் பாரதீய ஜனதாவே பிரதான கட்சியாகும். அதுவே உத்தரப்பிரதேசத்தில் அதிகாரத்தில் உள்ளது. தயாரிக்கப்படவுள்ள படமானது இந்து மதத்துக்கும், இந்திய விதவைகளின் மகத்துவத்துக்கும் குந்தகம் விழைவிப்பதாகக் கூறி, பாரதீய ஜனதாக் கட்சி அரசியல்வாதிகளும், வலதுசாரி இந்து தீவிரவாதிகளும் தலைமைதாங்கிய வர்ணாசி காடையர் கும்பல் படம் தயாரிக்கப்படவுள்ள இடத்தை தாக்கி அழித்தனர். அமைதிக்கு பங்கம் விளைவிப்பதாகக் கூறி படத் தயாரிப்பினை ஒரு வாரத்தில் இரு தடவைகள் பாரதீய ஜனதா மாநில அரசாங்கம் இடைநிறுத்தம் செய்ததைத் தொடர்ந்து மேதா அந்த மாநிலத்தில் இருந்து வாபஸ் பெற்று, வேறு இந்திய மாநிலத்துக்கு செல்ல தீர்மானித்துள்ளார்.

மேத்தா ஜனநாயக உரிமைகளுக்கு எதிரான தாக்குதலை நிராகரித்ததோடு மத அடிப்படைவாத குண்டர்களின் ஓயாத தீவிர பயமுறுத்தல் பிரச்சாரத்தின் முன் உறுதியாகவும் நின்றார். இந்தியாவுடன் ஒன்றுக்கொன்று தொடர்பான மூன்றாவது படமான "தண்ணீர்" வர்ணாசியில் உள்ள விதவைகளின் நிலைமையை விளக்குகிறது.

1996 இல் வெளிவந்த "அக்கினி" (Fire) 1998 இல் வெளிவந்த "பூமி" (Earth ) ஆகிய மற்றைய இரு படங்களும் இந்து இனவாதிகளுக்கும் மேத்தாவுக்குமிடையே முரண்பாட்டை ஏற்படுத்தியது . திருமணம் செய்த இரண்டு பெண்களுக்கிடையிலான தன்னினச் சேர்க்கை உறவை விளக்கும் "அக்கனி" படம் வெளியிடப்பட்டபோது இந்து தீவிரவாதிகள் கலவர ஆர்ப்பாட்டங்களை ஒழுங்கு செய்தனர். இந்த ஆர்ப்பாட்டங்கள் பம்பாயிலும் புதுடில்லியிலும் பல சினிமா படமாளிகைகளை மூட நிர்ப்பந்தித்தது. 1947 இல் பிரித்தானியர் இந்தியாவை துண்டாடியதை குறிக்கும் "பூமி" வெளியிடப்பட்டபோது அதையும் கண்டித்து, படத்தை தடை செய்யுமாறு அரசைக் கோரினர்.

"தண்ணீர" படத்தயாரிப்பு உத்தரப்பிரதேசத்தில் தடை செய்யப்பட்டிருந்தபோதிலும் அந்த படத்தை இந்தியாவின் வேறு ஒரு மாநிலத்தில் படமாக்குவதில் தான் உறுதியாக இருப்பதாகவும் அதற்கு அச்சுறுத்தல் இருக்காது எனவும் கூறினார். அவர் கடந்தவாரம் இந்தியாவில் இருந்து *உலக சோசலிச வெப் தளத்தின்* (WSWS) ரிச்சாட் பிலிப்புடன் பேசினார்.

ரிச்சாட் பிலிப்ஸ்: கடந்த சில வாரங்களாக நடந்த சம்பவங்களை விளக்குமாறு கேட்பதற்கு முன் தண்ணீர் படத்தை தயாரிக்கும் உங்களது உறுதியை நாங்கள் ஆதரிக்கின்றோம் . உத்தரப் பிரதேசத்தில் அதை தடை செய்ததை ஜனநாயக உரிமைகளுக்கு எதிரான பாரிய தாக்குதலாக கருதுவதோடு படத்தயாரிப்பாளர்களும் கலைஞர்களும் முழு தொழிலாளர் வர்க்கமும் எதிர்க்க வேண்டும் எனவும் கோருகின்றோம்.


தீபா மேதா: நன்றி எங்களுக்கு பல படத் தயாரிப்பாளர்களிடமிருந்தும் மற்றையோரிடமிருந்தும் ஆதரவு கிடைத்து இருக்கிறது. கடந்த வார ஆதரவுக்கு மனதார மதிப்பளிக்கின்றேன். எமக்கு ஆதரவளித்து விளம்பரங்கள் செய்யப்படவுள்ளதாக நாம் அறிகின்றோம். இந்த ஆதரவுகளால் நான் பெருமிதம் அடைகின்றேன்.

ரி.பி: இந்தியாவில் படமொன்றைத் தயாரிப்பதற்கான சட்டரீதியான தேவைகள் தொடர்பாக விளக்குவீர்களா?

தீபா: வெளிநாட்டு நிதி உதவியுடன் படமொன்றை தயாரிப்பதாயின் முதலாவதாக தகவல் ஒலிபரப்பு அமைச்சுக்கு விண்ணப்பம் செய்யவேண்டும். அத்துடன் கதையின் மூலப் பிரதியையும் சமர்ப்பிக்க வேண்டும். அவர்கள் ஆழ்ந்து அவசி ஆராய்ந்து



தீபா மேத்தா



நந்திதா தாஸ்



ஷபானா அஸ்மி

***அதன் அரசியல் அர்த்தம் என்ன? அது நாசிசத்தைப் போன்று மிகவும் பயங்கரமானது. ஜனநாயக உரிமைகள் தொடர்பாக நிறைய கேள்விகளை எழுப்புகிறது. திரைப்படங்களின் தாக்கத்தினை நாங்கள் குறைத்து மதிப்பிடுவதாக நான் கருதுகின்றேன். இந்த படம் ஒரு சக்திமிக்க படைப்பு என்பதால் இதை நிறுத்துவதற்கு எல்லா சக்திகளையும் அணிதிரட்டுகிறார்கள்.***

படமாக்க முடியுமா என தீர்மானிப்பார்கள். பின் அவர்கள் தணிக்கையோடு அல்லது தணிக்கையில்லாமல் அனுமதி வழங்கலாம். ஏன் எனில் ஏதாவது ஒரு வழியில் இந்தியா விட்டுக் கொடுக்கப்படுகின்றதா என்பதை ஊர்ஜிதம் செய்து கொள்வதற்கே ஆகும்.

இதன் பின் வெளிநாட்டவர்களின் வருகைக்காக உள்நாட்டு அமைச்சுக்கு 'வீசா' விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டும் . இத்தகவல்கள் அனைத்தும் கொடுத்து அனுமதி வழங்கப்பட்ட பின் அரசு ஒரு தொடர்பு அதிகாரியை நியமிக்கும். அவர் ஒரு அமைச்சு உத்தியோகஸ்தர் . வழங்கப்பட்ட மூலப் பிரதிக்கேற்ப படமாக்கப்படுகிறதா என ஊர்ஜிதம் செய்வதே அவருடைய வேலையாகும். மோசடி ஏதும் நிகழாமல் இருப்பதை அவதானிப்பதற்காக அவரிடம் ஒரு மூல பிரதி இருக்கும். படம் இந்தியாவில் வெளியிடப்படும்போது தணிக்கை சபைக்கு கொடுக்கப்படும். அங்கும் தணிக்கை செய்யப்படலாம்.

ரி.பி: இந்தக் கடமைகளை நிறைவுசெய்து நீங்கள் படமெடுக்க ஆரம்பிக்கும் போது இந்து மத அடிப்படைவாதிகள் அவர்களுடைய பிரச்சாரத்தினை ஆரம்பித்தனர் .இதைப்பற்றி விளக்க முடியுமா?


மேதா: ஆம். தேவையான சகல சட்ட ரீதியான நடைமுறைகளையும் பூர்த்தி செய்தோம். மூலப்பிரதி எந்த விதமான தணிக்கையுமின்றி அனுமதிக்கப்பட்டது. அதன் பின்னர் நாங்கள் படமெடுப்பதற்காக வர்ணாசி சென்றோம். மாநில அரசாங்கத்திடம் ஆலோசனை பெற வேண்டிய அவசியம் இல்லை. இருந்தும் நாம் அதைச் செய்யத் தீர்மானித்தோம். நாம் அங்கு படமெடுப்பதை அவர்கள் வரவேற்றார்கள். உத்தரப்பிரதேச அரசாங்கம் தற்போது பட முதலீட்டை ஊக்குவிக்க முனைகிறது. உலகில் இருந்து பலர் இங்கு வர அவர்கள் விரும்புகிறார்கள். மற்றும் சாத்தியப்பட்ட எல்லா வழிகளிலும் உதவுவதாகவும் கூறினார்கள். தொழில்சார் தகமையில்லாத ஆனால் உத்தரபிரதேச உல்லாசப் பயணத்துறை அமைச்சரின் கை ஆள் போன்ற ஒருவர் வர்ணாசிக்கு வந்து படத்தில் தன்னுடைய நண்பர்களை நடிப்பதற்கு பயன்படுத்துவதாக இருந்தால் மட்டும் படத்தை எடுக்கலாம். நான் ஏற்கனவே படத்துக்கான பாத்திரங்களை ஒழுங்கு செய்து விட்டேன் எனக் கூறினேன். அப்படியென்றால் சரி ஆனால் அந்த நண்பரின் மனைவியை ஒரு நடிகையாகப் பயன்படுத்துவதுடன் மற்றைய எல்லாத் தேவைகளுக்கும் பயன்படுத்தமுடியுமா எனக் கேட்டார். அத்துடன் பட விநியோக உரிமையையும் அதிகாரத் தோரணையில் கேட்டார். அப்போதே பிரச்சனை உச்ச நிலையை அடைந்தது. நான் அதை முழுமையாக நிராகரித்தேன். இச்சந்தர்ப்பத்தில் படம் தயாரிக்கும் பணி நான்கு வாரத்தை எட்டியது. இரு தினங்களுக்குப் பிறகு பணியை விரைவுபடுத்துமாறு கூறினேன். நகர் எங்கும் நான் இந்து மதத்துக்கும் இந்து கலாச்சாரத்துக்கும் இந்து விதவைகளுக்கும் வர்ணாசி மக்களுக்கும் எதிராக படமெடுப்பதாக முணுமுணுக்கத் தொடங்கினார்கள். சில தினங்களில் இது பெரிதாக்கப்பட்டது. எவ்வாறு ஒழுங்குபடுத்தப்பட்டு இயக்கப்பட்டது என்பதையிட்டு ஆச்சரியமடைந்தோம். ஆர்ப்பாட்டத்தின் பின் முதல் தடவையாக மாநில அரசாங்கம் படத்தயாரிப்பு வேலைகளை இடை நிறுத்தம் செய்யத் தீர்மானித்தவுடன் எனக்கு அனுமதி வழங்கிய அமைச்சரைச் சந்திக்க புதுடில்லி வந்தேன். அவர் எனது நிலைப்பாட்டில் இருந்து அந்தப்படத்தை எடுப்பதற்கு மத்திய அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. நீங்கள் கட்டாயம் அந்தப்படத்தை எடுக்கவேண்டும் எனக் கூறினார். உத்தரப்பிரதேச அரசோ சட்டமும் ஒழுங்கும் சம்பந்தப்பட்ட பிரச்சனை எனவும், படத்தை எடுக்கக்கூடாது எனவும் கூறியது. இது முற்றிலும் கேலிக்கிடமானது. முதல் நாள் அடிப்படைவாதிகள், திட்டமிட்டு எங்கள் செட்டுகளை நாசம் செய்தனர். இது முற்றிலும் பூதாகரப்படுத்தப்பட்டதாக விளங்கியது. இது முற்றிலும் ஒரு நாசகர வேலை. இது நாட்டை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. நாம் சற்று கவலைப்பட்டோம்.

இரண்டாவது தடவை வர்ணாசி மக்கள் குழப்பமடைந்துள்ளதாகவும் ஆயிரக்கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டம் செய்வதாகவும் ஒருவர் தற்கொலை செய்து கொள்ள முயற்சி செய்ததாகவும் சட்டமும் ஒழுங்கும் சீரகுலைந்து போய்விட்டதாகவும் கூறி மாநில அரசாங்கம படத்தை எடுக்க வேண்டாம் என்றது. நாங்கள் படப்பிடிப்பை மீண்டும் ஆரம்பித்திருந்தோம் எவ்வித எதிர்ப்பையும் கேள்விப்படவில்லை. 10000 பேர் எதிர்ப்பு தெரிவிப்பதாகக் கூறினர். நாங்கள் வெளியில் சென்று பார்த்தபோது 12 பேரே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

தற்கொலை முயற்சியில் ஈடுபட்டவருக்கு

14ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூகோளமயமாக்கலும் அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கமும்

## மார்க்சிசத்தின் குட்டி முதலாளித்துவ எதிரிகளுக்கு ஒரு பதில்

### நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அறிக்கை

அமெரிக்க ஸ்பார்ட்டசிஸ்ட் லீக்கின் ஒரு தொடர் கட்டுரைகளுக்கு எதிராக நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினால் தயார் செய்யப்பட்ட பதில் 1998 மே இதழில் இருந்து தொழிலாளர் பாதையில் பிரசுரமாகின்றது

## தொழிற்சங்கங்களும் கூலி அமைப்பும்

மிகவும் முக்கியமான மார்க்சிசக் கோட்பாட்டாளர்களின் கண்டிப்பான ஆய்வுகள், சோசலிஸ்டுகளின் அடிப்படையான பணி தொழிற் சங்கங்களை புரட்சிகரப் போராட்டத்தின் ஆயுதங்களாக பரிணாமம் காணச் செய்வதே என்னும் ஸ்பார்ட்டசிஸ்டுகளின் கருத்துக்கள் மார்க்சிச சிந்தனையில் இருந்து பெரிதும் அப்பாற்பட்டவை என்பதை தெளிவுபடுத்துகின்றன. உண்மையில் மார்க்சும் எங்கேல்சும் தொழிற்சங்கங்கள் அவற்றின் அத்தியாவசியமான பொருளாதார தொழிற்பாட்டு சுபாவம் காரணமாக கூலி முறையை எதிர்க்கவில்லை; மாறாக அதை நடைமுறைக்கிட உதவின என்பதை வலியுறுத்தினர். இந்த பொருளாதார தொழிற்பாடு என்பது என்ன, தொழிற்சங்க வடிவிலான அமைப்புக்களைக் கொண்டு தொழிலாளர்கள் கைத் தொழிலின் குறிப்பிட்ட ஒரு கிளையில் தமது உழைப்பு சக்தியை முதலாளிகளுக்கு பெரிதும் சாத்தியமானதும் சாதகமானதுமான நிபந்தனைகளுக்கு அமைய விற்பனை செய்யத் தமது சக்தியை அணிதிரட்டுகின்றன. ஒரு புறத்தில் இது வேலைகொள்வோருக்கு எதிரெதிராக தமது அந்தஸ்தை பேணிக் கொள்வதற்கான ஒரு முயற்சியாகும். ஆனால் அதே சமயம், கூலி அமைப்பின் அடிப்படையில் தங்கிக் கொண்டுள்ளதைக் காட்டும் விதத்தில் இது முதலாளிகளின் கூலி விதிகளை நடைமுறைக்கிடும் ஒரு சாதனமாகவும் விளங்கிக் கொண்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட தருணத்தில் கூலிகளைக் கட்டிக் காக்கும் விதத்தில் கிட்டத்தட்ட உழைப்புச் சக்தியின் முழு சந்தைப் பெறுமானத்தையும் பாதிக்கின்றது.

இந்த விதத்தில் மார்க்ஸ் மூலதனத்தின் முதலாம் திரட்டில் எழுதியதாவது: "தொழிற்சங்கங்களின் நோக்கம் கைத்தொழிலின் பல்வேறுபட்ட கிளைகளிலும் பாரம்பரியமாகக் கையாளப்படும் மட்டத்துக்கு கீழாக கூலிகள் குறைக்கப்படுவதைத் தடுப்பதை தவிர வேறெதுவும் அல்ல. அதாவது அவை உழைப்புச் சக்தியின் விலை அதன் பெறுமானத்துக்கு கீழாக வீழ்ச்சி காண்பதை தடுக்கவே விரும்புகின்றன"

ஏங்கேல்ஸ் "கூலி அமைப்பு"(1881)என்ற தலைப்பிலான கட்டுரையில் எழுதியதாவது: "தொழிற்சங்கங்களின் போராட்டங்களால் கூலி விதிகள் கவிழ்ந்து போய்விடாது அதற்கு மாறாக அது அவர்களால் அமுல் செய்யப்படுகின்றது."

பேர்ண்ஸ்டைனின் திரிபுவாதத்துக்கு எதிரான றோசா லக்சம்பேர்க்கின் சீர்திருத்தம் அல்லது புரட்சி (Reform or Revolution) 1899 விமர்சனத்தில் இக்கருத்து மேலும் பெரிதும் விரிவான முறையில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது

ஆனால் உண்மை என்னவென்றால் தொழிற்சங்கங்களின் முக்கிய தொழிற்பாடு, முதலாளித்துவ கூலி விதிகளை நிறைவேற்றி வைக்கும் விதத்தில் தொழிலாளர்களுக்கு ஒரு சாதனத்தை வழங்குவதை உள்ளடக்கிக் கொண்டுள்ளது. அதாவது: அவர்களின் உழைப்புச் சக்தியை நடைமுறை சந்தை விலைகளில் விற்பனை செய்வதாகும். ஒவ்வொரு தருணத்திலும் தொழிற்சங்கங்கள் சந்தையின் இணைப்பாக பாட்டாளி வர்க்கத்தைப் பயன்படுத்த உதவுகின்றன. ஆனால் இந்த இணைப்புக்கள் ... தொழிற்சங்கங்களின் செல்வாக்கு அரங்குக்கு வெளியில் இருந்து கொண்டுள்ளன. தொழிற்சங்கங்கள் கூலி விதிகளை நசுக்கிவிட முடியாது. மிகவும் சாதகமான சூழ்நிலைகளின் கீழ் அவர்கள் செய்யக் கூடிய சிறந்த நட்வடிக்கை முதலாளித்துவ சுரண்டலின் மீது அத்தருணத்தில் உள்ள 'சாதார்ரணமான' வரையறைகளை திணிப்பதேயாகும். எவ்வாறெனினும் அவை படிப்படியாகத் தன்னும் சுரண்டலை ஒதுக்கித் தள்ளும் சக்தியைக் கொண்டிருக்கவில்லை. இலாப வீதத்துக்கு எதிரான கூலி வீதத்தின் போராட்டத்தின் முற்றிலும் பொருளாதாரப் பக்கத்தையிட்டு குறிப்பிடக் கூடியது இவ்வளவுதான். இதையே பேர்ண்ஸ்டைன் தொழிற்சங்கங்களின் செயற்பாடுகளாகப் பட்டயம் தீட்டுகின்றார். இவை நீலவானத்தில் இடம் பெறவில்லை. இவை நன்கு வியாக்கியானம் செய்யப்பட்ட கூலி விதிகளின் கட்டுமானத்தின் உள்ளேயே இடம் பெறுகின்றன. இந்தக் கூலி விதிகள் தொழிற் சங்கங்களால் சிதறடிக்கப்படவில்லை; ஆனால் அவற்றின் நடவடிக்கைகளின் மூலம் பிரயோகிக்கப்பட்டு வருகின்றன."(லக்ஷம்பேர்க் – சீர்திருத்தம் அல்லது புரட்சி பக்கம் 20–21,43)

முதலாளித்துவத்தின் கீழான கூலி விதிகளை புறக்கணித்து, அடியோடு மறுப்பதன் மூலமும் கூலிகளை முன்னேற்றம் அடையச் செய்வதற்கான வரையறையற்ற சாத்தியங்கள் இருந்து கொண்டுள்ளதாகக் காட்டுவதன் மூலமும் ஸ்பார்ட்டசிஸ்டுகள் புரட்சிகரக் கூச்சல்களில் ஈடுபட்டுக் கொண்டுள்ள அதே வேளையில் சோசலிசப் புரட்சியினதும் மார்க்சிசத்தின் அடிப்படையிலான ஒரு தொழிலாளர் வர்க்க அரசியல் கட்சியை கட்டி எழுப்புவதனதும் புறநிலை அவசியத்தை நிராகரிக்கின்றார்கள். தொழிற்சங்கப் போராட்டத்தின் சாதனங்கள் மூலம் தொழிலாளர்கள் தமது சம்பளத்தை முன்னொரு போதும் இல்லாத விதத்தில் அதிகரித்துக் கொள்ள முடியுமேயானால் அவர்கள் ஏன் ஆட்சிக்கான போராட்டத்திலும் முதலாளித்துவத்தை ஒழித்துக் கட்டுவதிலும் ஈடுபட வேண்டும்? சரியாகச் சொன்னால் சோசலிசம் ஒரு மானசீக நலமான ஒன்றாக மாறுவதோடு விஞ்ஞான சோசலிசம் கற்பனாவாதத்தின் ஒரு புதிய வகையறாவினால் பதிலீடு செய்யப்படுகின்றது.

ஸ்பார்ட்டசிஸ்ட் லீக் அதனது நிலைப்பாட்டின் சீர்திருத்தவாத தர்க்கவியலை அடியோடு அறியாமல் அல்ல. இந்த விதத்தில் நல்லதைப் பொறுக்கி எடுக்கும் – மார்க்சிஸ்டுகளாக நடித்துக் கொள்ளும் சகலரதும் பாணியில் ஸ்பார்ட்டசிஸ்ட் லீக் சோசலிச சமத்துவக் கட்சிக்கும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுக்கும் எதிரான அதனது தாக்குதலில், தனக்கு ஒரு கோட்பாட்டு மூடுதிரையை வழங்கும் இலக்கில் அது ஒரு பந்தியை புகுத்தியுள்ளது. ஸ்பார்ட்டசிஸ்ட் லீக் எழுதுவதாவது: "எவ்வளவுதான் போர்க்குணம் கொண்டதாக இருப்பினும் தொழிற்சங்கப் போராட்டங்கள் மூலம் அடைந்து கொள்ளக் கூடியவற்றுக்கு வரையறைகள் இருந்து கொண்டுள்ளது. முதலாளிகளின் உழைப்புச் செலவு, ஒரு சில புள்ளிகளை தாண்டி வளர்ச்சி கண்டதும் முதலாளிகள் தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்தும் (குறைந்த இலாபமுள்ள நடவடிக்கைகளை இழுத்து மூடியும்) புதிய ஊழிய சேமிப்புத் தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்வதோடு சில தொழில் நடவடிக்கைகளை குறைந்த ஊதியம் வழங்கும் நாடுகளுக்கு இடம் பெயரச் செய்தும் பதிலளிக்கின்றனர்" (Workers Vangurd- january 24, 1997)

உண்மையில் கூலி விதிகளுக்கு இந்தச் சாடை காட்டும் போக்கு கோட்பாட்டு ரீதியில் தவறானது. நிலையான மூலதனத்துக்கு உழைப்புச் சக்தியின் வீதாசாரத்தை குறைக்கும் பெருட்டு புதிய தொழில் நுட்பங்களை அறிமுகம் செய்யச் சிபார்சு செய்வது, முதலாளித்துவ உற்பத்தியின் ஒரு உலகளாவிய அம்சமாகும். இது அதிகரிக்கும் கூலிகளின் பேரில் காட்டும் ஒரு காப்பீட்டு நடவடிக்கையாகும். முதலாளிகள் புதிய தொழில்நுட்பங்களை திட்டவட்டமானதும் நனவானதுமான நோக்கத்துக்காக கையாள்கின்றனர். தொழிலாளர்களின் கூலிப் போராட்டத்திற்கு குழிபறிக்கும் நோக்கிலேயே செய்கின்றனர். அது இந்த விடயத்தின் ஒரு பக்கம் மட்டுமேயாகும். மார்க்சும் எங்கேல்சும் கம்யூனிஸ்ட் அறிக்கையை (Communist manifesto) வெளியிட்ட காலத்திலேயே விளக்கியது போல் உற்பத்திப் போக்கின் தொடர்ச்சியான புரட்சிகர மயமாக்கம், முதலாளித்துவத்தின் ஒரு பாரம்பரியப் பண்பாகும். அது தொழிலாளர் வர்க்கத்தின் நெருக்குவாரத்தினால் திணிக்கப்பட்ட ஒன்று மட்டும் அல்ல; ஆனால் முதலாளித்துவச் சந்தையின் அத்தியாவசியமான பண்பான எதிரிடையான முதலாளிகளுக்கு இடையேயான போட்டியினதாகும்.

ஆனால் ஸ்பார்ட்டசிஸ்டுகளின் அடிப்படை விதி முறைகளுக்கு, அதாவது அகநிலைவாதம் வெளிச்சம் போட்டுக் காட்டுவதற்கு முன்னரே மேலே மேற்கோளாக எடுத்துக் காட்டிய வசனத்தில் இருந்து தொடர்வது என்ன? "தொழிற்சங்கங்களின் போராட்டங்களுக்கு எதிராக தொழிலாளர்கள் இன்று இருந்து கொண்டுள்ள அல்லது அதைவிட இன்னும் மோசமான நிலைமைகளைப் போராட்டம் இல்லாமலேயே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற வாதத்தை தொழிற்சங்க அதிகாரத்துவம் முதலாளிகளின் வல்லமையை சுட்டிக் காட்டுகின்றது. இதே வேளையில் "அமெரிக்க தொழில்களை களவாடுவதாக" ஏனைய நாடுகளின் தொழிலாளர்கள் மீது குற்றம் சுமத்துகின்றது."

இதன் மூலம் தொழிலாளர் வர்க்கத்தின் ஒரு அடிப்படையானதும் புறநிலையானதுமான பண்புக்கு சாடை காட்டிக் கொண்டு– இது தொழிலாளர் வர்க்கத்தின் கூலியை நிரந்தரமாக அதிகரிக்க இலாயக்கானதாக உள்ளது– ஸ்பார்ட்டசிஸ்ட் லீக் இதற்காக தொழிற்சங்க வாதத்தை குற்றம் சாட்டாமல் தொழிற்சங்க அதிகாரிகளின் கேவலமான உள்நோக்கங்களின் மீதே குற்றச்சாட்டை திணிக்கின்றது. சோசலிச சமத்துவக் கட்சியே தொழிற்சங்கத் தலைவர்களின் நாற்றம் கண்ட பண்பையும் அடிப்படை ஊக்கிகளையும் சர்ச்சைக்குள்ளாக்குவதில் கடைசியாக இருந்திருக்கலாம். ஆனால் தொழிலாளர் போராட்டங்கள், தொழிற்சங்க வாதத்தின் வடிவத்தினுள் முடங்கிக் கிடக்கும் வரை தொழிலாளர்களின் சம்பளங்களையும் வேலை நிலைமைகளையும் கீழே தள்ளும் முதலாளித்துவ உற்பத்தியின் அடிப்படைப் போக்கில் இருந்து தலையெடுப்பதற்கான சாதனங்களை கண்டு கொள்ள முடியாது என்பதே உண்மையாகும். ஸ்பார்ட்டசிஸ்டுகள் இதைக் குழப்பியடிக்க முயற்சிக்கின்றனர்.


முதலாளித்துவ உற்பத்தி உறவுகளைப் பற்றிய மார்க்சிச ஆய்வுகளும் பல தசாப்த கால வரலாற்று அனுபவங்களின் மூலம் பெற்றுக் கொண்ட விஞ்ஞான ரீதியான முடிவுகளும் தொழிற்சங்க வடிவிலான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்பானது வர்க்கப் போராட்டத்தினை ஒரு விதத்தில் எதிர்த்து நின்று கொண்டுள்ளதை உயிர்ப்புஷ்டியான முறையில் எடுத்துக் காட்டுகின்றது. தொழிற்சங்கங்கள் வரலாற்று ரீதியில் வர்க்கப் போராட்டத்திலிருந்து உருவானவை என்ற உண்மையானது அவை அந்தப் போராட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்குப் போதுமான சாதனங்களை வழங்கிவிட்டதைக் குறிக்காது. அதற்கு மாறாக அவற்றின் முக்கியமான பாத்திரமானது தொழிலாளர்கள் தமது உழைப்புச் சக்தியை கூட்டுப் பேரம் பேசல்களின் மூலம் விற்பனை செய்வதற்கான முக்கிய கருவிப் பாத்திரத்தை வகிக்கின்றன. அத்தோடு இந்த அமைப்பு வடிவங்கள் அவற்றை ஈவிரக்கமற்ற முறையில் வர்க்க உடனுழைப்பு இணக்கப்பாட்டு நிலைப்பாடுகளுக்கு இயைந்து போகும்படி தள்ளுகின்றது.

## தொழிற்சங்கங்களுக்கும் புரட்சிகர மார்க்சிசத்துக்கும் இடையேயான பகைமை

இந்த விதத்தில் புரட்சிகர மார்க்சிசத்துக்கும் தொழிற்சங்கங்களுக்கும் இடையேயான பகைமையான உறவுகள் -எங்கெல்லாம் கைத்தொழில் முதலாளித்துவம் அபிவிருத்தி கண்டதோ அங்கெல்லாம் தலைதூக்கிய ஒரு தோற்றப்பாடு- தொழிற்சங்க வடிவிலான புறநிலைப் பண்புகளில் வேரூன்றிக் கொண்டுள்ளது. மார்க்சிசக் கட்சி முதலாளித்துவ உற்பத்தி உறவுகளுக்கு அதன் வரலாற்று இயல்ளவின் அடிப்படையில் ஒரு புரட்சிகர எதிரிடை என்ற விதத்தில் தொழிலாளர் வர்க்கத்தை பிரதிநிதித்துவம் செய்கின்றது. தொழிற்சங்கங்கள் இறுதியில்



கார்ல் மார்க்ஸ்



லெனின்



லியோன் ட்ரொட்ஸ்கி

இந்த உற்பத்தி உறவுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

தொழிற்சங்க வடிவத்தின் முக்கியமான சில பண்புகள் என்ன? முதலாவதாக தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களை ஒரு குறிப்பிட்ட கைத்தொழிலின் கிளைகள், கைத்திறனுக்கு இணங்க அணிதிரட்டுகின்றது. அதாவது, முதலாளித்துவச் சந்தையின் உழைப்புச் சக்திக்கான தேவைக்கு இணங்க இடம் பெறுகின்றது. இந்த விதத்தில் அவற்றின் தன்மை காரணமாக அவை ஒரு ஒன்றிணைந்த சமூக, புரட்சிகரச் சக்தியென்ற முறையில் தொழிலாளர் வர்க்கத்தை பிரதிநிதித்துவம் செய்யவில்லை. அதற்குப் பதிலாக அவை தொழிலாளர்களை முதலாளித்துவ சந்தையின் இயக்கத்தால் வறையறுக்கப்பட்ட பல்வேறுபட்ட தனித்தனி நலன்கள் கொண்ட பகுதிகளாகப் பிரிக்கின்றனவே தவிர அந்தச் சந்தையின் வரலாற்று ரீதியான கட்டளையினை வெற்றி கொள்வதற்காக அல்ல. தொழிற்சங்கங்கள் சாராம்சத்தில் தொழிலாளர் வர்க்கத்தை ஒரு ஒடுக்கப்பட்டதும் சுரண்டப்பட்டதுமான சமுதாயத்தின் ஒரு பாகமாக உள்ளடக்கிக் கொண்டுள்ளனவேயே தவிர ஒரு புரட்சிகர வர்க்கமாக அல்ல.

சுருங்கச் சொன்னால் இந்தக் காரணத்துக்காக தொழிற்சங்கங்கள் தொழில்நுட்ப முன்னேற்றங்களை ஒரு பிற்போக்கு விதத்திலேயே பிரதிபலிக்கின்றன. ஒன்றில் அவை இதைத் தடை செய்வதன் மூலம் புதிய வடிவிலான உற்பத்திகளைத் திணிப்பதில் ஒத்துழைக்கின்றனர். தொழிலாளர் வர்க்கத்தின் நீண்டகால வரலாற்று நலன்களுக்கு உதவும் தொழில் நுட்ப முன்னேற்றங்களை தொழிற்சங்கங்கள் தழுவிக் கொள்ள முடியாத அதே வேளையில் அத்தகைய முன்னேற்றங்களால் அச்சுறுத்தப்படும் தொழிலாளர்களின் உடனடி நிலைமைகளையும் பேணிக் காக்க முடியாது. ஏனெனில் இந்தப் பணியை ஒரு புரட்சிகர சோசலிச தகவமைவின் அடிப்படையில் மட்டுமே பூர்த்தி செய்யமுடியும். அத்தகைய ஒரு தகவமைவானது தொழிலாளர் வர்க்கத்தை அதனது உடனடி அவசியங்களைக் காப்பதன் அடிப்படையில் அணிதிரட்டத் தள்ளப்படுவதோடு அதன் ஒவ்வொரு கட்டத்திலும் உற்பத்திச் சாதனங்களில் தனியார் உடமையை ஒழித்துக் கட்டுவதன் அவசியத்தைச் சுட்டிக் காட்டுவதோடு இலாபத்தின் பேரில் அன்றி மனித அவசியங்களிற்கு ஏற்ப உற்பத்தியை மீளமைக்கும் பொருட்டு தொழில்நுட்பத்திலும் பொருளாதார வாழ்வின் சகல அடிப்படை நெம்புகோல்களிலும் பொதுவுடமையை ஸ்தாபிதம் செய்வதன் உடனடி அவசியத்தை எடுத்துக் காட்டிக் கொண்டுள்ளது.

றோசா லக்சம் பேர்க் தமது "சீர்திருத்தம் அல்லது புரட்சி" என்ற நூலில் தொழில்நுட்ப அபிவிருத்தி தொடர்பான தொழிற்சங்கங்களின் மனோபாவத்தை பின்வரும் விதத்தில் தொகுத்துக் கூறுகின்றார்:

"உற்பத்தியின் தொழில்நுட்ப பகுதியில் தொழிற்சங்கங்கள் தலையீடு வைத்துக் கொள்ளும் வரையில் அவற்றினால் தொழில்நுட்பக் கண்டுபிடிப்புக்களை எதிர்க்க மட்டுமே முடியும். ஆனால் இங்கு அவர்கள் முழுத் தொழிலாளர் வர்க்கத்தின் நலன்களின் பேரிலும் அதன் விடுதலையின் பேரிலும் செயற்படவில்லை. இங்கு அது தொழில்நுட்ப முன்னேற்றங்களுடனும் ஆதலால் தனிமைப்படுத்தப்பட்ட முதலாளித்துவ நலன்களுடனும் சிறிது ஒத்துப் போகின்றது. இங்கு அவர்கள் ஒரு பிற்போக்கு திசையில் செயற்பட்டு வருகின்றனர்." (றோஷா லக்சம்பேர்க்- சீர்திருத்தம் அல்லது புரட்சி பக்கம்-21)

மேலும் தொழிற்சங்கங்கள் உழைப்புச் சக்தியை விற்பனை செய்வதற்கான நிபந்தனைகளையிட்டு வேலை கொள்வோருடன் சட்டரீதியானதும் கட்டுப்படுத்தப்பட்டதுமான உடன்படிக்கைகளைச் ஸ்தாபிதம் செய்து கொள்ளத் தள்ளப்படுகின்றனர். எவ்வளவுக்கு எவ்வளவு அவர்கள் இந்த உடன்படிக்கைகளை செயற்படுத்துகின்றார்களோ அவ்வளவுக்கு அவ்வளவு அவர்கள் முதலாளி வர்க்கத்தின் சட்டபூர்வமான கொள்கைகளை திணிப்பதோடு தொழிலாளிக்கும் வேலைகொள்வோருக்கும் இடையே ஒரு உறுதியானதும் சமாதான பூர்வமானதுமான உறவுகளை ஊர்ஜிதம் செய்ய முயற்சிக்கின்றனர். இந்த உறவுகளை அச்சுறுத்தும் தொழிலாளர் வர்க்கத்தின் எந்த ஒரு ஆயுதக் கிளர்ச்சி இயக்கமும் சமூகப் புரட்சியும் இந்தத் தொழிற்சங்கங்கள் அடிப்படையாகக் கொண்டுள்ள பொருளாதார, சமூக அத்திவாரங்களையே ஒழித்துக் கட்டுவதைக் குறித்து நிற்கின்றது.

உழைப்புச் சக்தியை விற்பனை செய்பவர்கள் என்ற தொழிலாளர் அந்தஸ்தை அங்கீகரிப்பதால் ஏற்படும் வேறு சிக்கல்கள் என்ன? உயர்ந்த மட்டத்திலான சுரண்டலை அடிப்படையாகக் கொண்ட புதிய வடிவிலான உழைப்புக்கான மூலதனத்தின் மாற்றம் கண்டு வரும் தேவைகளுக்கு தொழிற்சங்கங்களை இணங்கிப் போகும்படி இது தவிர்க்க முடியாத விதத்தில் நெருக்குகின்றது. புதிய விதிமுறைகளையும் வடிவங்களையும் கொண்டதுமான முதலாளித்துவ உற்பத்தி சார்பு ரீதியில் உறுதியான தொழில் பாதுகாப்புகள் இல்லாத- எட்டு மணித்தியால வேலை, உறுதியான வேலை பகுப்பு, மூப்புரிமை, ஓய்வூதியம், சுகாதார நலன்கள் ஆகியவை இல்லாத- ஒரு புதிய பாணியிலான தொழிலாளியை வேண்டி நிற்கின்றது. அதற்குப் பதிலாக முதலாளிகள் வளைந்து கொடுக்கக் கூடிய பகுதி நேர, தற்காலிக தொழிலாளியை வேண்டி நிற்கின்றனர். அங்கு தொழிலாளியின் உழைப்புக் காலம் வேலை கொள்வோரின் உடனடித் தேவைகளுக்கு ஏற்ற விதத்தில் நிர்ணயிக்கப்படுவதோடு கூலிகளும், (சேவை) நலன்களும் வறுமை மட்டத்தில் இருந்து கொண்டுள்ளது. தொழிற் சங்கங்கள் ஒன்றில் சந்தையின் இந்த அவசியங்களை கட்டாயம் வழங்கியாக வேண்டும் அல்லது தொழில் இல்லாமல் போக வேண்டும்.

வரலாற்று அனுபவங்கள் நடைமுறையில் வர்க்கப் போராட்டத்துக்கும் சமூகப் புரட்சிக்கும் தொழிற்சங்கம் காட்டும் உயிர்புஷ்டியான பகைமையை எடுத்துக் காட்டிக் கொண்டுள்ளது. இந்த விதத்தில் பிரித்தானியாவினதும் ஜேர்மனியினதும் உதாரணங்கள் பெரிதும் அப்பட்டமானவை. இந்த இரு நாடுகளும் தொழிற்சங்க வாதத்துக்கான சிறந்த உதாரணங்களாக இருந்து வந்துள்ளன. பிரித்தானியாவில் தொழிற்சங்கங்கள் தொழிலாளர் வர்க்கத்தின் ஒரு புரட்சிகர அரசியல் இயக்கமான "சார்ட்டிசம்" (Chartism) வீழ்ச்சி கண்டதைத் தொடர்ந்து, வளர்ச்சி கண்டு செழித்து வளர்ந்தன. அவை முற்றிலும் ஒரு பொருளாதார அமைப்புகளாகத் தோன்றியதோடு வெகுவேகமாக லிபரல் கட்சியின் அரசியல் இறக்கையின் கீழும் வந்தன. லிபரல் கட்சி உற்பத்தி முதலாளி வர்க்கத்தின் கட்சியாக விளங்கியது. ஜேர்மனியில் சமூக ஜனநாயகத்தின் பரந்த அளவிலான தொழிற்சங்கங்கள் ஸ்தாபிதம் செய்யப்பட்டன. இவை உத்தியோக பூர்வமான முறையில் மார்க்சிச வேலைத்திட்டத்துடன் இணைந்து கொண்டு இருந்ததோடு பொருளாதார அரங்கில் பரந்த சோசலிசக் கட்சியின் கருவிகளாகவும் தோன்றின. அத்தோடு இந்த இரு நாடுகளிலும் தொழிற்சங்கங்கள் முதலாளித்துவ அந்தஸ்தினை பேணிக்காக்கும் பழமைவாதிகளாக விளங்கின.

## எங்கேல்சும் பிரித்தானிய தொழிற்சங்கங்களும்

1840 களில் இருந்து பிரித்தானிய தொழிலாளர் வர்க்கத்தைப் பற்றிய தமது ஆக்கங்களில் எங்கேல்ஸ் வேலைநிறுத்தப் போராட்டங்களதும் தொழிற் சங்கங்களதும் வளர்ச்சியையிட்டு காணப்பட்ட கணிசமான அளவிலான ஆர்வத்தை எடுத்துக் காட்டினார். ஆனால் இந்த ஆரம்ப காலகட்டத்தில் கூட எங்கேல்ஸ் தொழிற்சங்கங்களின் குறுகிய மனப்பான்மையை விமர்சனம் செய்ததோடு 'சார்ட்டிசத்தை' பெரிதும் மேலானதும் பெரிதும் முன்னேற்றமானதுமான போராட்ட வடிவமாகக் கணித்தார்.

அவரது பிற்காலப் படைப்புக்களில் அவர் 1848ல் சார்டிஸ்ட் இயக்கம் தகர்ந்து போனதன் பின்னர் தொழிற்சங்கங்களின் எழுச்சியை ஒரு அரசியல் பின்னடைவுடன் இணைத்து நோக்கினார். தொழிற்சங்கங்களையிட்டு எங்கேல்சின் பொறுப்பு அதிகரித்தது. அவற்றின் பரிணாமத்தை விபரிக்கையில் அவர் அவை தொழிலாளர் வர்க்கக் கிளர்ச்சியின் கருவிகள் என்ற நிலையில் இருந்து அதிகார வர்க்கத்தினரின் நன்கு ஸ்தாபிதம் செய்யப்பட்ட நிறுவனங்களாக அவற்றை வருணித்தார்.

1879ல் பேர்ண்ஸ்டைனுக்கு எழுதிய ஒரு கடிதத்தில் எங்கேல்ஸ் பிரித்தானிய (ஆங்கிலேய) தொழிலாளர் இயக்கத்தின் நிலைமையையிட்டு வெட்டு ஒன்று துண்டு இரண்டாக்கும் வார்த்தைகளை கையாள்வதை தவிர்க்கவில்லை.

"கடந்த பல வருடங்களாக ஆங்கிலேய தொழிலாளர் வர்க்க இயக்கம், உயர்ந்த சம்பளத்துக்கும் குறைந்த வேலை நேரத்துக்குமான அவநம்பிக்கைக்குரிய வேலை நிறுத்தங்களுக்கான ஒரு குறுகிய வட்டமாக வருணிக்கப்பட்டு வந்ததே தவிர தகுந்ததும் அல்லது பிரச்சாரத்துக்கான சாதனங்களாகவும் அமைப்பாகவும் அல்லாது இறுதி இலக்காகவே கொள்ளப்பட்டது. தொழிற்சங்கங்கள் கொள்கையளவிலும் தமது பட்டயங்களிலும் சகல அரசியல் நடவடிக்கைகளுக்கும் தடை போடுவதோடு அதன் மூலம் ஒரு வர்க்கம் என்ற முறையில் தொழிலாளர் வர்க்கத்தின் எந்த ஒரு பொதுத் தொழிற்பாட்டிலும் பங்கு கொள்வதையும் கூடத் தடை செய்கின்றன...

"ஒருவர் இங்கு ஒரு தொழிலாளர் இயக்கத்தைப் பற்றி இங்கு வேலை நிறுத்தங்கள் இடம் பெறும் வரை மட்டுமே பேசிக் கொள்ளமுடியும். அது வெற்றி கண்டாலும் சரி தோல்வி கண்டாலும் சரி அது இயக்கத்தை ஒரு அடி தன்னும் முன்னெடுத்துச் செல்ல முடியாது. அத்தகைய வேலை நிறுத்தங்களை வீங்கச் செய்வதற்கு- கடந்த சில வருடங்களாக முதலாளிகளின் கடைகெட்ட நடவடிக்கைகள் வேண்டுமென்றே நடைமுறைக்கிடப்பட்டன. தமது பக்டரிகளையும் ஆலைகளையும இழுத்து மூடுவதற்கான ஒரு மூடுதிரையாக இவை பயன்பட்டன. இவற்றின் மூலம் தொழிலாளர் வர்க்க இயக்கம் ஒரு சிறிய அளவில் தன்னும் உலக முக்கியத்துவம் வாய்ந்த போராட்டங்களாக, உதாரணமாக பிரைட்டில் (Frieikeit) இடம் பெற்றது போல் முன்னேற்றம் காணமுடியவில்லை. எனது கருத்தின்படி இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ளவை கெடுதியை மட்டுமே ஏற்படுத்த முடியும். தற்சமயம் கண்ட ரீதியிலான நிஜ தொழிலாளர் இயக்கம் கிடையாது என்ற உண்மையை மூடிமறைக்க முயற்சிக்கக் கூடாது. ஆதலால் இங்குள்ள தொழிற்சங்கங்களின் தொழிற்பாடுகள் பற்றி எதுவிதமான அறிக்கைகளும் தற்போதைக்கு கிடைக்கவில்லை என்பதால் நீங்கள் எதையும் இழந்துவிடப் போவதில்லை என நான் நம்புகின்றேன்." (மார்க்சும் எங்கேல்சும் தொழிற்சங்கங்கள் பற்றி கூறியவை- பக்கம்- 127-28)

1881ல் அவர் எழுதியதாவது: "தொழிற்சங்கங்கள் இன்று அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களாகி விட்டன. பக்டரிகளதும் வேலைத்தலங்களதும் சட்டங்கள் வேலை நேரத்தை ஒழுங்குபடுத்துவது போல் இவற்றின் நடவடிக்கைகளும் கூலிகளை ஒழுங்குபடுத்துவோரில் ஒருவனாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன". (தொழிற்சங்கம் பற்றி மார்க்சும் ஏங்கேல்சும்- பக்கம் -106)

இதே கட்டுரையில் அவர் புதிய, அரசியல் போராட்ட வடிவங்களின் தோற்றம். தொழிலாளர் வர்க்கம் மீதான தொழிற்சங்கங்களின் திமிர் கொண்ட செல்வாக்கை தாண்டிச் செல்ல உதவும் என எதிர்பார்த்தார்:

"இவை அனைத்துக்கும் மேலாக சில காலங்களாக இந்நாட்டின் தொழிலாளர் வர்க்கம் தவறான குறுகிய பள்ளத்தின் ஊடாக பயணம் செய்து வந்தது. இன்று அது நனவு பெற்று விழிப்படைந்து வருவதற்கான பல அறிகுறிகள் தென்படுகின்றன. தனித்து உயர்ந்த சம்பளம் குறைந்த வேலையைத் தவிர வேறு பிரச்சினை கிடையாது என்ற ஒரு நச்சு வளையத்தினுள் இன்றைய இயக்கங்களை மாட்டிக் கொள்ளச் செய்துள்ளது. அடிப்படையான கெடுதியாகியுள்ளது குறைந்த கூலி அல்ல; கூலி முறையேயாகும். இந்த அறிவு தொழிலாளர் வர்க்கத்தினுள் பொதுவில் பரந்துபட்டதுதான் தாமதம் தொழிற்சங்கங்களின் அந்தஸ்து நிச்சயம் கணிசமான அளவு மாற்றம் அடையும். தொழிலாளர் வர்க்கத்தின் ஒரே அமைப்புக்கள் என்ற சலுகையை அவை தொடர்ந்து அனுபவிக்க முடியாது போகும். சிறப்பு தொழில்களின் தொழிற்சங்கங்களின் ஒரு பக்கத்தில் அல்லது அதற்கு மேலாக தொழிலாளர் வர்க்கத்துக்கு முழுமையாக ஒரு அரசியல் அமைப்பு, ஒரு பொதுத் தொழிற்சங்கம் அங்கு தலையெடுக்கும்." (தொழிற்சங்கம் பற்றி மார்க்சும் எங்கேல்சும்- பக்கம் 129)

-தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# முதலாளித்துவத்தின் எடுபிடிகளான தீவிரவாதிகளின் போலிக் கோலம் அம்பலம்

*இனவாத யுத்தத்துக்கு 25 வருடங்கள் என்ற தலைப்பில் விஜே டயசினால் எழுதப்பட்டு 'தொழிலாளர் பாதை' 'கம்கறு மாவத்த' பத்திரிகைகளில் வெளியான கட்டுரைகளைக் கொண்ட ஒரு நூலாக இது வெளிவர உள்ளது. அந்நூலின் முன்னுரை இங்கே பிரசுரமாகின்றது.*

**கடந்த இதழின் தொடர்ச்சி**

முதலாளித்துவ அமைப்பினுள் தொழிலாளர்களும் ஒடுக்கப்படும் மக்களும் வெற்றி கொள்ளும் சீர்திருத்தங்கள் புரட்சிகர வார்க்கப் போராட்டத்தின் துணை விளைவு மட்டுமே என மார்க்சிஸ்டுகள் வலியுறுத்தியது, 19ம் நூற்றாண்டின் கடைப்பகுதியில் தலை நீட்டிய முதலாளித்துவச் சார்பு பேர்ண்ஸ்டைன் வாதத்துக்கு எதிராகவாகும். தொழிலாளர்களும் ஒடுக்கப்படும் மக்களும் முதலாளித்துவத்தின் உழைப்புச் சுரண்டலுக்கும் பாகுபாடுகளுக்கும் அடக்குமுறைகளுக்கும் எதிராக முன்வைக்கும் கோரிக்கைகளில் ஒரு அளவைத் தன்னும் வழங்க முதலாளித்துவ ஆளும் வர்க்கம் தள்ளப்படுவது, தமது சொத்துடைமைகளையும் அவ்வாறே ஆட்சி அதிகாரத்தையும் சவாலுக்கு உள்ளாக்கும் வெகுஜன இயக்கம் தோன்றுமோ என்ற கிடுநடுக்கத்தினாலாகும். இந்தக் கிடுநடுக்கம் நனவான புரட்சிகர தலைமையிலான வர்க்கப் போராட்டம் உள்ள நிலைமையிலாகும். அங்ஙனம் இல்லாது போகுமிடத்து பொது மக்களின் கோரிக்கைகளையிட்டு ஆளும் வர்க்கத்தின் பிரதிபலிப்புக்கள் வெறும் ஏமாற்று மோசடிகளாக விளங்கும்.

ஆளும் வர்க்கம் சமூக சீர்திருத்தங்களை தமது ஆதிக்கத்தில் உள்ள சமூக அமைப்பின் மரணத்தை ஒத்திப் போடும் ஒரு உபாயமாகக் கையாள்கின்றது. அஹிங்சக பெரேராவும் அவ்வாறே தீவிரவாதிகள் எனப்படும் வகையறாக்களும் சீர்திருத்தவாத கும்பல்களுடன் சேர்ந்து, புரட்சிகர மூலோபாயங்களை உதறித்தள்ளிவிட்டு முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தின் சாப்பாட்டு மேசையில் இருந்து கொட்டும் மிச்ச சொச்சங்களை தின்று திருப்தி அடைய வேண்டும் என மக்களுக்கு கூறுகிறார்கள். இதைத் தொழிலாளர் வர்க்கம் தனது உபாயமாகவும் தந்திரமாகவும் கடைப்பிடிக்க வேண்டும் என்கிறார்கள். எஜமானரின் பாதுகாப்புக்காக நின்று கொண்டுள்ளதாகக் காட்டிக் கொள்ள அடிக்கடி குரைத்துக் கொண்டு, சாப்பாட்டு மேசையை சுற்றி வட்டமிட்டுக் கொள்ளும் நாய் வேலையில் இருந்து இது வேறுபடுவது எப்படி? நாய்க்கு எஜமானனை ஒழித்துக் கட்டும் நோக்கம் ஒரு போதும் ஏற்படுவதில்லை. அல்லது உபாயம், தந்திரம் எல்லாமே எஜமானனின் கீழ், வாய் வயிற்றை நிரப்பிக் கொள்ளுவதேயாகும். மனித இனத்தின் முன்னேற்றத்தை ஊர்ஜிதம் செய்யக் கூடிய சோசலிசப் புரட்சியின் முன்னணிப் படையணியான தொழிலாளர் வர்க்கத்துக்கு அஹிங்சக பெரேரா போன்றவர்கள் சிபார்சு செய்வது, இத்தகைய ஒரு தரித்திரம் பிடித்த விதிமுறைகளை என்றும் கடைப்பிடித்து ஒழுக வேண்டிய கொள்கையாகவேயாகும்.

முதலாளித்துவ ஆட்சியாளர்களின் பின்னால் அலைந்து திரியும் அதே சமயம் சீர்திருத்தவாத விதைகளை விரல்களில் எண்ணிக் கணக்கிட்டுக் கொண்டு மூச்செடுக்க ஓடும் சீகால் ஆதிவாசிகளின் தீவிரவாதிகள் எனப்படுபவர்களுக்கு எதிராக போல்ஷிவிக் கட்சி 1905 புரட்சியின் பின்னர் ஸார் ஆட்சியாளர்கள் முன்வைத்த முதலாளித்துவ பாராளுமன்றவாத டூமா தொடர்பாக வகித்த நிலைப்பாட்டை புரிந்து கொள்வது அவசியம்.

அதனை ஸார் ஆட்சியாளர்களிடமிருந்து கிடைத்த ஒரு சீர்திருத்தமாக போல்ஷிவிக்குகள் கட்டி அணைத்துக் கொள்ளவில்லை. முதலில் அதன் மோசடியை அம்பலப்படுத்தியதோடு அதில் சேர்ந்து கொள்வதையும் போல்ஷிவிக்குகள் லெனினின் தலைமையில் நிராகரித்தனர். பின்னர் உலகளாவிய ரீதியில் தொழிலாளர் வர்க்கப் போராட்டத்தின் சாதகமான பின்னணி நிலைமைகளின் கீழ் புரட்சிகர மூலோபாயத்துக்கு கீழ்ப்பட்ட ஒரு உபாயமாக லெனினின் சிபார்சுகளுக்கு இணங்க தொழிலாளர் வர்க்கத்துக்கு போதிக்கும் பொருட்டு போல்ஷிவிக் கட்சி டூமாவில் சேர்ந்து கொள்ள தீர்மானம் செய்தது. இதற்குக் காரணம், டூமாவினுள் இருந்து கொண்டே அதனது ஈடாட்ட நிலையையும் தொழிலாளர் வர்க்கத்தினதும் ஒடுக்கப்படும் மக்களதும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டின் சமூகப் புரட்சியின் அவசியத்தையும் வலியுறுத்துவதற்கேயாகும். போல்ஷிவிக் கட்சியின் இந்த விதிமுறை நடைமுறைக்கிடப்பட்டது ஜே.வி.பி. அன்று பொதுஜன எதிர்ப்பு மக்கள் படுகொலை நடவடிக்கைகளில் ஈடுபட்ட வண்ணம் தானே எதிர்ப்புக் காட்டிய மாகாண சபைகளுள் இன்று நுழைந்து கொண்டு அவற்றின் அதிகார இயந்திரத்தை "ரிமோட் கொன்ட்ரோல்" மூலம் இயக்கும் அடிப்படையில் காலூன்றிக் கொண்டு நடைமுறைக்கிட்டு வரும் பொதுஜன முன்னணி மாகாண சபைகளின் நிர்வாகத்தில் பங்காளிகளாக செயற்படும் விதத்திலானது அல்ல. 'ரிமூட் கொன்ட்ரோல்' பேச்சு முதலாளித்துவ அமைப்புக்கு நெருக்குவாரம் கொடுப்பதன் மூலம் அதை அடிபணியச் செய்ய முடியும் என்ற நப்பாசையை வளர்க்கிறது.


யாழ்ப்பாண வீதியொன்றில் பயணம் செய்யும் அரச இராணுவம்


சந்திரிகா குமாரதுங்க


வேபிரபாகரன்

அஹிங்சக் பெரேரா குறிப்பிடுவதன்படி ஆளும் வர்க்க ஆட்சியாளர்களின் தியாக மனப்பான்மையின் மீது நம்பிக்கை வைத்து முதலாளி வர்க்கம் வழங்கும் மோசடி வாக்குறுதிகளை அவர்களைக் கொண்டு நடைமுறைப்படுத்தும் நொண்டிச் சாட்டு-மலட்டு விதிமுறைகளை போல்ஷிவிக் கட்சி அடிப்படையாகக் கொண்டிருந்ததே கிடையாது. அக்கட்சி மக்களாதரவுடன் சமூகப் புரட்சிக்கு தலைமை வழங்குவதாக மாறியதற்கு இலங்கையில் இருந்து உதாரணம் காட்டுவதாயின் ட்ரொட்ஸ்கிச போல்ஷிவிக்-லெனினிஸ்ட் கட்சி 1947ல் நடைமுறைக்கிடப்பட்ட சோல்பரி அரசியலமைப்பு சட்ட சீர்திருத்தத்தை "பொதுமக்களுக்கு எதிரான சதி" என கண்டனம் செய்தது. அத்தோடு அதில் உள்ளடங்கியிருந்த முதலாளித்துவ மோசடியை அம்பலப்படுத்தும் அதே வேளையில் அந்தச் சீர்திருத்தத்தின் கீழ் அமைக்கப்பட்ட பாராளுமன்ற ஆசனங்களுக்குப் போட்டியிட்டமை லெனினிஸ்டுகள் என்ற முறையில் அத்தகைய புரட்சிகர உபாயத்தைக் கடைப்பிடிப்பதாகவும் விளங்கியது. பின்னர் சமசமாஜக் கட்சி கடைப்பிடித்த விதிமுறை தேசியவாத முதலாளித்துவ ஆட்சியுடன் இணங்கிப் போனதேயாகும். லெனினின் புரட்சிகர மூலோபாயத்துக்கு கீழ்ப்படிந்த இத்தகைய உபாயங்களின் அவசியத்தை அவர் எழுதிய 'இடதுசாரி கம்யூனிசத்தின் இளம்பிள்ளை வலிப்பு' என்ற நூலில் தெளிவுபடுத்தியுள்ளார்.

முதலாளித்துவ ஒற்றையாட்சி முறையைக் காக்கும் இனவாத யுத்தத்தை ஈவிரக்கமின்றி எதிர்த்தும் வடக்கு, கிழக்கில் இருந்து அரச படைகளை வாபஸ் பெறச் செய்யவும் பொதுமக்களை அணிதிரட்டும் பொருட்டு இடைவிடாது பிரச்சாரம் செய்த புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் சோசலிச சமத்துவக் கட்சியும் முன்னெடுத்த போராட்டம் தொடர்பாக ஆத்திரத்தைக் கொட்டும், இரண்டு கடைவாய்களின் ஊடாகவும் வீணி ஓடும் காக்காய்வலிப்பு நோயாளியைப் போல அஹிங்சக பெரேரா இடைவிடாமல் பின்வருமாறு கூறுகின்றார்: "ஜே.வி.பி. அதிதீவிரவாத சிங்கள இனவாத நிலைப்பாட்டில் இருந்து சிங்கள முதலாளிகளின் மத்தியமயமாக்கப்பட்ட ஒற்றையாட்சி முறையை கட்டிக் காக்கும் பொருட்டு கையாட்களாக செயற்பட்டு இலங்கைப் பாட்டாளி வர்க்க இயக்கத்தை இந்தத் தலைவிதிக்குள் தள்ள செயற்பட்டு வரும் அதே சமயம் பு.க.க. மனித சமுதாயத்தின் சகல அடிப்படைப் பிரச்சினைகளுக்குமான தீர்வு, உலகப் பொருளாதாரத்தின் மட்டத்திலும் அனைத்துலகப் புரட்சிகர போராட்டத்தின் சாதனங்களூடாகவும் தேடிக் கொள்ளப்பட வேண்டும் என்ற அனைத்துலகவாத விதிமுறையை முன்தள்ளி இங்கேயே வீழ்ந்து கொண்டுள்ளது."

இது ட்ரொட்ஸ்கியின் நிரந்தரப் புரட்சிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்பாட்டுக்கு எதிராக இரண்டு கட்டப் புரட்சி வேலைத்திட்டத்தைக் காக்கும் பொருட்டு நீண்ட காலமாக ஏகாதிபத்தியச் சார்பு ஸ்டாலினிச வர்க்கச் சமரசவாதிகள் முன்வைத்துள்ள குற்றச்சாட்டாகும். இந்தக் குற்றச்சாட்டு இன்று இருட்டில் இருந்து கொண்டு கூச்சல் போடுபவர்கள் ட்ரொட்ஸ்கிச சமூக விஞ்ஞான ரீதியான கோட்பாட்டு முடிபுகள் பொய்யாக்கப்பட்டுள்ளது எந்த நாட்டில் அல்லது எந்த தேசத்தில் இந்த நூற்றாண்டின் எந்தக் காலகட்டத்தில் என்பதை புறக்கணிப்பதேயாகும். நேரம் அல்லது அவகாசத்தினுள் அத்தகைய எந்த ஒரு உதாரணத்தைத் தன்னும் எடுத்துக் காட்ட முடியாதெனில் இரண்டு கண்களால் அல்ல மூன்று, நான்குகளாலும் கனவு காண்பவர்கள் பொய்யர்கள். இதைத் தவிர வேறு எதுவும் நிரூபிக்கப்படவில்லை.

மேலே மேற்கோளாகக் காட்டிய அஹிங்சக பெரேராவின் வாக்கியங்களின்படி பு.க.க. "முன் தள்ளியிருந்த"தும் ட்ரொட்ஸ்கிஸ்டுகள் இன்றும் கடைப்பிடிக்கின்றதுமான விதிமுறைகளை "மனித சமுதாயத்தின் சகல அடிப்படை முக்கியத்துவமும் வாய்ந்த பிரச்சினைகளுக்கான தீர்வை அனைத்துலக புரட்சிகரப் போராட்டத்தின் சாதனங்களுள் தேடிக் கொள்ள வேண்டும்" என்பது உண்மையே. அது மார்க்சிச இயக்கத்தின் நீண்டதும் விஞ்ஞான அடிப்படையிலானதுமான விதி முறையாகும். 1917 அக்டோபரில் ரூஷ்யத் தொழிலாளர் வர்க்கம் ஆட்சியைக் கைப்பற்றிக் கொள்ளும் போதும் ஆட்சியைக் கைப்பற்றியதன் பின்னரும் லெனினும் ட்ரொட்ஸ்கியும் அந்த அனைத்துலக சோசலிச வேலைத்திட்டத்துக்கு வெளியே பாய்ந்து கொண்டதில்லை. தொழிலாளர் வர்க்க சர்வாதிகாரத்தை ஸ்தாபிதம் செய்ததன் பின்னர் ரூஷ்யாவினுள் தலைநீட்டிய பதவிகளையும் வசதி வாய்ப்புக்களையும் கட்டிக் காக்க முயன்ற– அரச அதிகாரத்துவ தரப்பினருக்கு எதிராக அவர்கள் இருவரும் ஒரே குரலில் ரூஷ்ய தொழிலாளர் வர்க்க அரசு திரிப்புக்களுக்கு உள்ளாகும் சாத்தியத்தை வலியுறுத்தியதோடு அதை வெற்றி கொள்ளுவது உட்பட சோவியத் யூனியனின் எதிர்கால முன்னேற்றமும் தலைவிதியும் அனைத்துலகப் புரட்சியின் வெற்றியில் தங்கியுள்ளதாகவும் ரூஷ்யாவைப் போலவே உலக தொழிலாளர் வர்க்கத்திற்கும் போதித்து வழி நடாத்தப் போராடினர். 1919ல் மூன்றாம் கம்யூனிஸ்ட் அகிலத்தை ஸ்தாபிதம் செய்யும் போராட்டத்துக்கு அவர்கள் இருவரும் இணைத் தலைவர்கள் என்ற ரீதியில் தோள் கொடுத்தும் அந்த அடிப்படையிலேயேயாகும். மூன்றாம் அகிலத்தின் உலக சோசலிசப் புரட்சி முன்நோக்குக்கு எதிராக தேசியவாத "தனிநாட்டில் சோசலிசம்" பற்றிய கோட்பாட்டை கொணர்ந்து ரூஷ்யாவினுள் தமக்குக் கிடைத்த வசதி வாய்ப்புக்களுடன் சேர்ந்து ரூஷ்யத் தொழிலாளர்– ஒடுக்கப்படும் மக்களின் நிஜ பிரச்சினைகளுக்கு புறமுதுகு காட்டியது, ஸ்டாலின் உட்பட்ட அதிகாரத்துவ தரப்பினரே ஆகும். அனைத்து குட்டி முதலாளித்துவ தீவிரவாதிகளும் முதலாளித்துவ அமைப்பினுள் வயிறளப்பதைக் காக்கும் பொருட்டு எச்சில் சோற்றை நக்கும் வயிற்றுமாரி முறைமையை காக்கும் திட்டத்துடன் சமூகப் பிரச்சினைகளுக்கு உரிய நிஜமானதும் வர்க்கப் போராட்டத்தின் உரைகல்லின் மூலம் ஊர்ஜிதம் செய்யப்படுகின்றதுமான தீர்வான அனைத்துலக சோசலிசப் புரட்சி பற்றிய முன்நோக்குக்கு பல்லிளிப்போர் கடைப்பிடிப்பது லெனினின் அனைத்துலகவாத பாரம்பரியங்களை அல்ல; அதற்கு எதிராக எழுப்பப்படும் ஸ்டாலினின் தேசிய சோசலிசத்தின் பாரம்பரியங்களையேயாகும். தமக்கு முதலாளித்துவ அமைப்பினுள் இப்போது உரித்தாகியுள்ள வசதிவாய்ப்புகள் நிறைந்த வயிற்றுமாரி வாழ்க்கை முறையும் குழம்பிப் போகலாம் என்ற பீதி காரணமாக அவர்கள் ஒன்றிணைந்து விஞ்ஞான பூர்வமான புரட்சிகர முன்நோக்கினையும் அதைக் கடைப்பிடிப்பவர்களையும் எதிர்க்கிறார்கள்.

இந்த விடயத்தை மேலும் தெளிவுபடுத்தும் பொருட்டு அஹிங்சக பெரேரா தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை (பிரிந்து சென்று தனி அரசு அமைக்க ஒடுக்கப்படும் தேசிய இனங்களுக்கு உள்ள உரிமை) பாதுகாத்துக் கொண்டு– தூக்கிப்பிடிக்கும் மேலும் சில அறிக்கைகளை நெருக்கமாக ஆய்வு செய்வது பொருத்தமானது. அவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: "ஒடுக்கப்படும் தேசிய இனங்களிற்கான சுயநிர்ணய உரிமையை– தேசிய இனம் என்ற விதத்தில் முகம் கொடுக்கும் இந்த விசேட ஒடுக்குமுறைகளில் இருந்து ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் தொழிலாளர் வர்க்கம் உட்பட்ட அனைத்து வர்க்கங்களையும் சேர்ந்த மக்களதும் சார்பு ரீதியான சுதந்திரத்தை உத்தரவாதம் செய்கின்றது." தேசிய சுயநிர்ணய உரிமையின் கீழ் தமிழ் மக்களுக்குக் கிடைக்கும் சார்பு ரீதியான சுதந்திரம் எனப்படுவதை ஊர்ஜிதம் செய்து காட்டும் பொருட்டு பெரேரா அந்த பெருமூச்சுக்கு ஒரு முன்மாதிரியையும் எடுத்துக் காட்ட முயற்சிக்கின்றார். "சிங்கள மையமான முதலாளித்துவ ஆட்சி முறையானது, அதாவது, பிரித்தானிய ஆட்சியில் இருந்து சுதந்திர ஆட்சி முறை– சோல்பரி, 1972 முதலிய அரசியல் அமைப்புக்கள் மூலம் தேசிய ரீதியில் ஸ்தாபிதம் செய்யப்பட்ட போதிலும் முதலாளித்துவ, ஏகாதிபத்திய சுரண்டலில் இருந்து சுதந்திரம் பெற தேசிய பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் ஒடுக்கப்படும் மக்களால் முடியாது போய்விட்டது. ஆனால் சிறப்பாக சிங்கள தேசிய இனத்தின் உரிமைகளை அதன் மூலம் ஊர்ஜிதம் செய்து கொள்ள முடிந்தது."

1948ம் ஆண்டின் சுதந்திரத்தினதும் தமிழர் எதிர்ப்பு இனவாத யுத்தத்தின் தூண்டுகோலான 1972 அரசியலமைப்புச் சட்டத்தினதும் படுகொடூரமான பேரழிவுகளில் இருந்து இதுகாறும் வேண்டியமட்டும் அனுபவம் பெற்றுள்ள சிங்கள தொழிலாளர்– ஒடுக்கப்படும் மக்கள், "சிங்கள தேசிய உரிமைகளை ஊர்ஜிதம் செய்யும்" இந்த வம்பளப்பில் ஈடுபட்டுள்ளவர்களை இராப் பகலாக குற்றம் சாட்டுவது நிச்சயம். இந்தப் பொய்யுக்கு பல்வேறு வகையறாக்களைச் சேர்ந்த சாயங்களை தடவி, பொதுமக்களைத் திரும்பத் திரும்ப பிற்போக்குப் பொறிக்குள் மாட்டி வைத்துள்ளது என்பது உண்மையாகும். சரியான முன்நோக்கும் தலைமையும் இல்லாததால் தம்மை அகப்படுத்திக் கொண்டுள்ள பொறிகளை அவர்கள் சபிக்காமலும் இல்லை. பொதுஜன முன்னணி போன்ற காலவதியான முதலாளித்துவ மாட்டுவண்டிகளை பொதுமக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வாகனமாகச் சாயந் தீட்டப் பங்களிப்பு செய்யும் சகல போலி ஸ்வைத்தியர்களையும் அவர்கள் திட்டித் தீர்ப்பது உக்கிரம் அடையும் நாளில் உருவாகும் பெறுபேறுகள் சம்பந்தமான பயங்கர கனவுகளை இன்றே தெரிந்து கொள்ளுங்கள்!

1948, 1972 அரசியல் மாற்றங்கள் என்ற விதத்தில் தூக்கிப் பிடிக்கப்பட்ட ஏகாதிபத்திய சார்பு ஆட்சியின் சேரிட்ட கழுதைகளை இழுப்பதன் காரணமாக "சிங்கள தேசிய உரிமைகளை ஸ்தாபிதம் செய்து கொள்ள முடிந்தது" என தாம் அணிந்து கொண்டுள்ள கோட்டு சூட்டுக்கு அப்பால் வாழும் மக்கள் அனுபவிக்கும் தரித்திரம் பிடித்த வாழ்க்கை நிலைமைகளைக் கண்டுகொள்ள முடியாத சுயநலம் பிடித்த குட்டி முதலாளித்துவ உதவாக்கரைகளால் மட்டுமே கூறமுடியும்.

ஆதலால் அவர்கள் எதுவிதமான வெட்கமும் இல்லாமல் தமிழ் மக்களையும் அதே பாதையில் பயணம் செய்யும்படி சிபார்சு செய்கிறார்கள். நனவான– விழிப்பான எந்த ஒரு தமிழ் தொழிலாளியோ அல்லது தமிழ் இளைஞனோ அவர்களுக்கு விரல் நீட்டி "சுயநிர்ணய உரிமைக்கு தோள் கொடுத்துக் கொண்டு இப்போது நீங்கள் 1948லும் 1972 லும் முதலாளித்துவ சீர்திருத்தங்கள் மூலம் சிங்களப் பொதுமக்களுக்கு பெற்றுக் கொடுத்துள்ள தலைவிதிக்கு எம்மையும் இழுத்துச் செல்ல முயற்சி எடுத்தால் நீங்கள் சேவகம் செய்வது ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ ஆட்சியாளர்கள் எம் மீதும் திட்டவட்டமான முறையில் திணிப்பதற்கு இல்லையா என்ற கேள்வியை எழுப்பினால் அஹிங்சக பெரேரா வழங்கும் பதில் என்ன? அந்த பதிலை எம்மால் ஊகித்துக் கொள்ள முடியும். அவர் பகிரங்கமாகத் தெரிவிக்காது போனாலும் அது பின்வரும் விதத்தில் அமைந்து இருக்கும்: "சிங்களத்தை அரச மொழியாக்கும் இனவாத வேலைத் திட்டத்தின் கீழ் பல்கலைக் கழகத்தில் பயின்ற நான் தற்சமயம் 'தியச' சஞ்சிகையின் ஆசிரியன்! என்னைப் போன்ற நூற்றுக் கணக்கானவர்கள் அல்ல, பல்லாயிரக் கணக்கானவர்கள் உள்ளனர். இலட்சோப இலட்சம் எண்ணிக்கையினரான ஏனைய தொழிலாளர்– ஒடுக்கப்படும் மக்களுக்கும் அவர்களின்



லியோன் ட்ரொட்ஸ்கி

குழந்தை குட்டிகளுக்கும் கிட்டுவது என்ன? அவ்வாறே தமிழ் மக்களான உங்களுக்கு கிட்டுவது என்ன! எனக்கு அதையிட்டு அனுபவம் கிடையாது. சுயநிர்ணய உரிமையை கட்டிக் காக்கும் விதத்தில் நான் முன்வைக்கும் தீர்வு, என்னைப் போன்ற ஒரு சில நூறு அல்லது ஆயிரம் பேர்களுக்கு வாழ்க்கைக்கான வழியை வழங்கிய, முதலாளித்துவ அமைப்பிற்கு சேவகம் செய்யும் பொருட்டு ஏற்படுத்தப்பட்டதாகும்." "அத்தகைய தீர்வுகள் மூலம் உங்களின் வயிறளப்பு நடவடிக்கைகளுக்கு வாய்ப்புக் கிடைத்தது போல் சுயநிர்ணய உரிமையின் கீழ் தனிநாட்டை அமைத்ததன் பின்னர் தமிழ் குட்டி முதலாளித்துவ கையாட்கள் சிலரை பெரும் புள்ளிகள் ஆக்குவதன் மூலம் எமக்கு கிடைக்கும் நன்மை என்ன?" என்ற பிரச்சினையை எழுப்பி தமிழ் தொழிலாளர்கள்; ஒடுக்கப்படும் இளைஞர்கள் தொடர்ந்தும் எதிர்ப்புக் காட்டுவதில் ஈடுபட்டால்? இதற்கு அஹிங்சக பெரேராவின் பதிலானது பொதுஜன முன்னணியின் அரசியல் பொதியை நிராகரித்தால் அவர்களுக்கு எதிராக யுத்தத்தை தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும் இல்லையா? சுயநிர்ணய உரிமையை காக்கும் வேஷம் போடும் புள்ளிகளின் நிஜ எதிர்ப்புரட்சி இலக்கு அத்தகையதாகும்.

அஹிங்சக பெரேரா தமது கட்டுரைத் தொகுதியில் முன்வைக்கும் அர்த்தமற்ற கருத்துக்கள் அனைத்தையும் தூக்கி வீச முடியும் எனினும் அதற்கு இத்தகைய ஒரு முன்னுரையுள் கிடைக்கும் இடவசதி மிகவும் வரையறுக்கப்பட்டது. ஆதலால் அத்தகைய ஒரு முயற்சியில் நாம் இங்கு ஈடுபடப் போவதில்லை. எனினும் ட்ரொட்ஸ்கிஸ்டுகள் பக்கச் சார்பான முறையில் சோசலிச சமத்துவக் கட்சியின் விதிமுறைகள் அவரின் வழிகாட்டலுக்கு அப்பால் சென்றுள்ளதாகக் காட்ட எடுக்கும் பித்தலாட்டமான முயற்சியையிட்டு சிறிதேனும் இங்கு குறிப்பிடாமல் இருக்க முடியாதுள்ளது.

நான்காம் அகிலத்தின் அடிப்படை வேலைத்திட்டமான முதலாளித்துவத்தின் மரண ஓலமும் நான்காம் அகிலத்தின் பணிகளும் என்ற பத்திரத்தில் இருந்து அஹிங்சக பெரேரா பின்வரும் வாக்கியங்கள் சிலவற்றை மேற்கோளாகக் காட்டுகின்றார்:

"பாட்டாளி வர்க்கத்தின் வரலாற்று அமைப்புக்களின் காட்டிக் கொடுப்பின் அதிகாரத்தின் கீழ் நான்காம் அகிலத்தின் இறுதியில் சில குழுவாத, அகநிலை, பல்வேறு வகையறாக்களைச் சேர்ந்த குழுக்கள் தோன்றுகின்றன. அல்லது ஊற்றெடுக்கின்றன. அவற்றின் அடிப்படையாக அரைகுறையாக இடைமருவு கோரிக்கைகளுக்காக– அதாவது தொழிலாளர் வர்க்கத்தின் நவீன அடிப்படை அவசியங்களுக்கானதுவும் தேவைகளுக்கானதுவுமான போராட்டங்களை நிராகரிப்பதாகும். புரட்சிக்கு தயார் செய்வது என்பதன் மூலம் குழுவாதிகள் கருதுவது, சோசலிசத்தின் மகத்துவத்தை தாம் புரிந்து கொள்வதாகும்.

"குழுவாதிகள் இரண்டு நிறத்திலேயே வேறுபாட்டை கண்டு கொள்ள முடியும். அதாவது சிவப்பு, கறுப்பு என்ற இரண்டு நிறங்களுக்கிடையே மட்டுமே. தாம் காயமடைவதை தவிர்த்துக் கொள்ளும் பொருட்டு இவர்கள் யதார்த்தத்தை இலகுவாக்குகின்றார்கள்."

புரட்சிக்காகக் தயார் செய்வதை அக்கறையுடன் கூடிய ஒரு குழுவாதியாக அஹிங்சக பெரேரா பெயர் சூட்ட எந்தவிதமான வாய்ப்பும் கிடையாது. புரட்சிக்கு எதிரான எதிரி வர்க்கத்துடன் கூட்டுச் சேர்ந்து கொண்டுள்ள சந்தர்ப்பவாதியும் புரட்சியையிட்டு பெரிதும் அக்கறையுள்ளவனாகக் காட்டிக் கொள்ளும் பேரில் போராட்டத்தில் இருந்து ஓட்டம் பிடிக்கும் குழுவாதியும் ஒரே நாணயத்தின் இரு பக்கங்கள் என்பதை நாம் புரிந்து கொண்டுள்ளோம். அஹிங்சக பெரேரா இதில் முதலாவது வகையறாவைச் சேர்ந்தவர்.

ஆனால் நாணயத்தின் இருபுறத்திலும் குறிப்பிடப்பட்டுள்ள உருவங்கள் ஒரே உலோகத்தில் வரையப்பட்டுள்ளதால் அந்த இரட்டை செயற்பாடுகளின் சமமான இலட்சணங்களை தவிர்க்க முடியாது.

"குழுவாதிகளால் வேறுபாட்டை இரண்டு நிறங்களுக்கு இடையே மட்டுமே காண முடியும்" எனக் குறிப்பிட்ட ட்ரொட்ஸ்கி "பொதுவில் இந்த மலட்டு அரசியல்வாதிகளுக்கு இடைமருவு கோரிக்கைகளின் உருவில் ஒரு பாலத்தின் அவசியம் கிடையாது" எனவும் "அது அவர்களுக்கு அக்கரை செல்லும் அவசியம் கிடையாததால் ஆகும்" எனவும் அப்பத்திரத்தில் மேலும் தெளிவுபடுத்தியுள்ளார்.

பிற்போக்கானதும் மனிதப் பேரழிவும் நிறைந்த யுத்த நிலைமையில் இருந்து சமாதான சமத்துவ வாழ்க்கை முறையை நோக்கி சிங்கள, தமிழ் மக்களை வழிநடாத்தி, அக்கரைக்கு இட்டுச் செல்லும் பொருட்டு, இடைமருவு கோரிக்கைகளை (transitional demands) எழுப்புவதன் மூலம் ஒரு பாலத்தை அமைப்பதுடன் தொடர்புபட்ட விதத்தில் இப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியில் நாம் ஈடுபட்டுள்ளோம்.

சிங்கள இனவாத முதலாளித்துவ வர்க்கமும் அதன் கொழும்பு ஆட்சியாளர்களும் தமிழ் தேசிய இனத்துக்கு எதிரான அடக்குமுறையை யுத்த மட்டத்துக்குக் கொணர்ந்துள்ளது. அது கறுப்பானது. அந்நிலையில் இருந்து விடுபடும் பொருட்டு தமிழ் ஆயுதம் தாங்கிய குழுக்கள் தனிநாடு அமைக்கும் பெயரில் போராடி வருகின்றன.

அது பலருக்கு சிவப்புச் சாயமாகியுள்ளது அல்லவா? இது எம்முன்னால் தோன்றியுள்ள இருதரப்பாகும். புரட்சியாளனுக்கு இந்த இரண்டில் ஒன்றை தேர்ந்தெடுப்பதை விட வேறு வழியில்லையா? இருந்து கொண்டுள்ளது. அதைத் தேடிக் கண்டுகொண்டாக வேண்டும்.

இந்த மாற்று வழியை சிவப்புப் பக்கமாகப் பெயரிட்டுக் கொண்டுள்ள தரப்பினருக்கு தேசிய சுயநிர்ணய உரிமையை காக்கும் பெயரில் 'ஹாய்' போட்டுக் கொண்டு கறுப்பு பக்கத்தை பிரதிநிதித்துவம் செய்யும் இனவாத யுத்தத்தின் அலுகோசுகளின் தீர்வுப் பொதி மோசடிக்கு செவி சாய்ப்பது எவ்வளவு கொள்கையற்ற ஒன்றாகும். அதுவே 'தியச' குழுவினரதும் அஹிங்சக பெரேராவினதும் நெறிகெட்ட தொழிலாகும்.

இதற்கு முரண்பட்ட விதத்தில் புரட்சியாளர்கள் இடைமருவு கோரிக்கைகள் ஊடாக ஒரு பாலத்தை சிங்களம், தமிழ் பேசும் இரு தேசிய இனத்தையும் சேர்ந்த

14ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து தீவிரவாதிகளின் பிரச்சாரத்துக்கு எதிராக தீபா மேத்தா பேசுகிறார்

9ம் பக்கத் தொடர்ச்சி

எதிராக பொலிஸ் வழக்கு இருப்பது உண்மையே. ஆனால் அவரின் தொழிலே அதுவாகும். அதை அவர் தனது வாழ்க்கைப் பிழைப்புக்காக செய்கிறார் . மக்கள் அவருக்கு காசு கொடுத்து செய்விக்கிறார்கள். அவர் ஒரு நாள் வைத்தியசாலையில் இருந்து விட்டு, மறு நாள் வீடு சென்று விடுவார்.

ரி.பி: இந்தப் பிரச்சாரத்திற்கு பின்னணிச் சக்தியாக யார் உள்ளனர்? இதில் மத்திய அரசாங்கத்தின் பங்களிப்பு யாது?

மேத்தா: அரசியல் பின்னணி தொடர்பாகவும் சம்பந்தப்பட்ட நபர்கள் தொடர்பாகவும் தெளிவற்று இருக்கிறேன். ஆனால் மத்திய அரசாங்கம் இதுவரையில் எனக்கு ஆதரவாகத்தான் இருந்து வருகிறது. இந்தியாவில் இருக்கும் ஒவ்வொருவரும் நடமாடும் கதைக்கும் தணிக்கை சபை என நான் நம்பவில்லை. இது மத்திக்கும் மாநிலத்திற்கும் இடையில் உள்ள ஒரு பிரச்சினையாகும். மத்திய அரசாங்கம் எடு என்று சொன்னால் மாநில் அரசாங்கம் ஏன் அனுமதிக்கவில்லை. ஆனால் இவர்கள் எல்லோரும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள். இது தேர்தலோடு சம்பந்தப்பட்ட புற அழுத்தங்களாக இருக்கக்கூடும். இதற்கு பின்னணியில் மதஅடிப்படை வாதிகள் இருக்கின்றார்கள். இதில் குறிப்பாக உலக இந்து மன்றம் முன்னணி வகிக்கின்றது. இதன் தலைவர் அசோக் சிங்காள் தனது சடலத்தின் மீது தான் இப் படப்பிடிப்பு தொடரும் எனக் கூறியுள்ளார். இவ்வாறு ஒவ்வொருவரும் தம்மைத்தாம் அழிக்கும் முயற்சி ஒரு கலவரச் சூழலை ஏற்படுத்தும்; எனவே படப்பிடிப்பை நிறுத்தும்படி மாநில முதல்வரால் எங்களுக்கு கூறப்பட்டது.

ரி.பி: உ.இ.ம தலைவர் அப்படம் இந்தியாவில் எங்கு எடுக்கப்பட்டாலும் தடுப்போம் எனக் கூறியுள்ள போது இனி வரும் தாக்குதலை எதிர் கொள்வீர்களா?

மேத்தா: நாங்கள் வேறு மாநிலங்களில் இருந்தும் பிரச்சினையை எதிர்பார்க்கின்றோம். அப்பொழுது அதிக பிரச்சினைகள் இருக்காது. ஆனால் படத்தயாரிப்பில் உறுதியாக இருக்கின்றேன்.

ரி.பி: கடந்த சில வருடங்களாக மத அடிப்படைவாதிகளினால் தயாரிப்பாளர்களும் கலைஞர்களும் தாக்கப்படுகின்றார்கள். இது எப்போது இருந்து ஆரம்பிக்கப்பட்டது?

மேத்தா: இது கடந்த எட்டு ஒன்பது வருடங்களாக மத அடிப்படைவாதத்துடன் எழுச்சியுற்றது. முழு விபரமும் நான் அறியேன். மூலப்பிரதியை அரசுக்கு சமரப்பிக்க வேண்டும் என்ற நடைமுறையில் எல்லோரும் பழகி விட்டோம். நமது விடயம் வேறு. காடையர்களின் தயாரிப்புக்கு முந்திய தணிக்கை தொடர்பான கோரிக்கைக்கே நாம் முகம் கொடுக்கின்றோம். இது சினிமா வரலாற்றில் கேள்விப்படாத விடயம். இது ஒரு எழுத்தாளன் தன்னுடைய நூலை வெளியிடுவதற்கு முன்னரே அதை விமர்சித்து முரண்படும் விடயத்துக்கு ஒப்பானது.

ரிபி: மத அடிப்படை வாதிகள் 'தண்ணீர்' இந்து மதத்தை தாக்குவதாக கூறுகிறார்கள் அத்தோடு நீங்கள் ஒரு படத்தயாரிப்பாளர் என்ற ரீதியில் இந்திய பிரச்சினைகளை பயன்படுத்தி பெருந்தொகையான பணத்தை சம்பாதிப்பதாகவும் கூறுகிறார்கள், இது தொடர்பாக உங்கள் கருத்து என்ன?

மேத்தா: இந்த வாதங்கள் முற்றிலும் அபத்தமானவை. அவர்கள் மூலப்பிரதியை வாசிக்காது எவ்வாறு அப்படிக் கூறமுடியும். இங்குதான் பிரச்சினையே இருக்கிறது. அவர்கள் 'பூமி' இந்துமத எதிர்ப்பு படம் எனவும் கூறுகிறார்கள், இதுதான் விநோதமானது. 'பூமி' பிரித்தானியர் இந்தியாவைத் துண்டாடியதன் விளைவாக உருவாக்கப்பட்ட பிரச்சினையை விளக்குகிறது. நீங்களும் அதை பார்த்திருப்பீர்கள். அது எதை பற்றியது. நான் நிறைய பணம் சம்பாதிப்பதாக கூறுபவர்கள் எனது வங்கிக் கணக்கை பார்த்தால் தெரியும் அதில் ஒன்றும் இல்லை என்று. நீங்கள் ஆடல் பாடல்களுடன் கூடிய அல்லது அனாவசியமான படங்களை எடுத்தால் நீங்கள் நல்லவர். இதுதான் இன்றைய இந்தியாவின் நிலையாகும். அது எவ்வளவு மோசமான பலாத்காரம் மிக்கதாய் இருந்தாலும் அக்கறையில்லை. ஆனால் நீங்கள் ஒரு சிந்தனைக்குரிய படத்தை தயாரிக்க விரும்பினால் இந்தியாவின் கலாச்சாரத்தை சீர்குலைப்பதாக நீங்கள் குற்றஞ்சாட்டப்படுவீர்கள். நான் கேட்கிறேன் ஒரு படத்தினால் அழியக் கூடியளவு பலவீனம் கொண்டதா இந்தியக் கலாச்சாரம்? நான் எடுக்கவிருக்கும் படம் இந்தியாவின் கௌரவத்தை பாதிக்கும் என கூறுபவர்கள் எனக்கு என்ன நடந்திருக்கிறது என்பதையும் விளக்க வேண்டும். அது இந்தியாவின் கௌரவத்தை பாதிக்காது என்ன செய்யும் என்பது எனக்கு தொரியாது.

ரிபி: இந்த படம் இவ்வாறான பிரச்சினைக்கு முகம் கொடுக்கும் என நீங்கள் கற்பனை செய்தீர்களா?

மேதா: ஒரு துளிகூட இல்லை.. நாங்கள் எல்லாவற்றையும் சட்டத்தின்படி செய்தோம். மூலப்பிரதி சமர்ப்பிக்கப்பட்டு, அனுமதிக்கப்பட்டது. நான் எல்லாவற்றையும் மிக அமைதியாகச் செய்தேன். நான் ஒரு பத்திரிகையாளர் மகாநாட்டைக் கூட நடாத்த விரும்பவில்லை. ஆர்ப்பரிப்பு இல்லாமல் எடுத்து முடிக்க விரும்பினேன். தயாரிக்கப்படவுள்ள படம் தொடர்பாக எந்த ஒரு இயக்குனரும் இங்ஙனம் விளம்பரம் இல்லாமலே இருக்கமாட்டார்கள். மிகப் பெரிய எதிர்பார்ப்புக்கள் இருந்தது. எல்லா வகையான அழுத்தங்களும் கொடுத்தார்கள். இதைச் செய்ய தேவையில்லை. எம்மை படத்தை எடுக்க அனுமதியுங்கள். பின்னர் நல்லதா கெட்டதா என தீர்மானியுங்கள் என நான் தொடர்ந்து கூறி வந்துள்ளேன்.

ரிபி: தற்போது படத்திற்கான நிகழ்ச்சி நிரல் என்ன ? நீங்கள் புதிய இடத்தை தெரிவு செய்து விட்டீர்களா ?

மேத்தா: (படப்பிடிப்புக்கு) வருகை தந்தவர்கள் தற்போது இல்லை. ஆனால் நாங்கள் வேறு ஒரு இடத்தை இந்தியாவில் தெரிவு செய்யத் திட்டமிட்டுள்ளோம். சாத்தியமானவுடன் படத்தை எடுப்போம். நாங்கள் மீண்டும் இணைந்து ஆரம்பிப்பதற்கு சில மாதங்கள் செல்லலாம். அதிஷ்டவசமாக எனது தயாரிப்பாளர் என்னுடன் இருக்கிறார். திகைப்படைந்து இந்த நாட்களில் எனக்கு ஆதரவாக இருந்தார். முழு அனுபவங்களும் பயங்கரமாக இருந்த போதிலும் இந்தப் படத்தை நான் தயாரிக்காது விட்டால் குறை கூறப்படுவேன். நான் இது தொடர்பாக மிகவும் உறுதியாக இருக்கின்றேன்

ரி.பி: இறுதியாக இந்திய படத்தயாரிப்பாளர்கள் முகம் கொடுக்கும் அரசியல் நிலைமைகளும் இந்த சம்பவம் தொடர்பாகவும் நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்

மேத்தா: அநியாயத்தின் போது என்ன நடந்தது என்பது தொடர்பாக ஒவ்வொருவருக்கும் தத்துவ விளக்கம் இருக்கிறது. நீங்கள் வரலாற்று நூல்களில் அதை வாசிக்கலாம். ஆனால் அதற்கூடாக வாழ்வதற்கு கடந்த வாரங்களில் செய்தவேலை வேறு. அதன் அரசியல் அர்த்தம் என்ன? அது நாசிசத்தைப் போன்று மிகவும் பயங்கரமானது. ஜனநாயக உரிமைகள் தொடர்பாக நிறைய கேள்விகளை எழுப்புகிறது. திரைப்படங்களின் தாக்கத்தினை நாங்கள் குறைத்து மதிப்பிட்டுள்ளதாக நான் கருதுகின்றேன் இந்த படம் ஒரு சக்திமிக்க படைப்பு என்பதால் இதை நிறுத்துவதற்கு எல்லா சக்திகளையும் அணிதிரட்டுகிறார்கள். நான் இந்து மதத்தை தாக்குவதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளேன். அது அபத்தமானது. நானும் ஒரு இந்து. நான் அறிந்த இந்து மதம் எந்தச் சந்தர்ப்பத்திலும் சகிப்புத் தன்மையையே வலியுறுத்துகின்றது. கடந்த வாரம் எனது படத்தை தடைசெய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டவர்களுக்கும் நான் அறிந்த இந்து மதத்திற்குமிடையில் பாரிய பிளவு இருக்கின்றது. நிச்சயமாக நாங்கள் முகம் கொடுப்பது அரசியலுக்கேயன்றி மதத்துக்கல்ல.

(தமிழாக்கம் ஏ.சாந்தகுமார்)

# இனவாத யுத்தத்துக்கு 25 வருடங்கள்...

13ம் பக்கத் தொடர்ச்சி

தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களைக் கொண்டு நிர்மாணிக்க வேண்டும். அது அவர்களை எதிரும் புதிருமாக நிறுத்தி, யுத்தத்தைத் தூண்டிவிட்டுள்ள முதலாளித்துவ அமைப்பைத் தூக்கி வீசும் இலக்கிலான சோசலிச ஐக்கியத்தை ஸ்தாபிதம் செய்யும் பொருட்டாகும். அதற்காக அவர்கள் இனவாத யுத்தத்துக்கும் அவ்வாறே பிரிவினைவாதத்துக்கும் எதிராக அனைத்துவகத் தொழிலாளர் வர்க்க ஐக்கியத்தின் பேரிலான சுலோகத்தை முன்வைக்கின்றார்கள். வடக்கு– கிழக்கிலிருந்து இலங்கை அரச படைகளை வாபஸ் பெறு! இனவாத யுத்தத்துக்கு ஒரு ஆளோ ஒரு சதமோ கொடாதே! எனச் சோசலிச சமத்துவக் கட்சி முன்வைத்துள்ள இடைமருவு சுலோகம் அத்தகைய புரட்சிகர மூலோபாயத்தின் அடிப்படையில் முன்வைக்கப்படுகின்றது. குறுங்குழுவாதிகளைப் போலவே சந்தர்ப்பவாதிகளும் எந்த ஒரு காலத்திலும் சரி இந்தச் சுலோகங்கள் தொழிலாளர்– ஒடுக்கப்படும் மக்களிடையே ஊடுருவச் செய்யப் போராடியது கிடையாது.

அதற்குக் காரணம் அவர்கள் இனவாத யுத்தத்தை விற்றுப் பிழைப்பதன் மூலம் பராமரிக்கப்படும் தேசிய சுயநிர்ணயத்தின் பிரச்சாரகர்களாக மோசடி தீவிரவாத வேஷம் போட்டுக் கொண்டுள்ளனர். இதற்குக் காரணம் அதை ஒரு வாழ்க்கைப் பிழைப்பாகக் கொண்டுள்ளதேயாகும்.

அரசியல் தீர்வுப் பொதிக்கும் அதன் சிருஷ்டி கர்த்தாவான பொதுஜன முன்னணிக்கும் சார்பாக வக்காலத்து வாங்குவதன் மூலம் தெற்கில் வயிறளக்கும் இந்த சிடுமூஞ்சிக்காரர்கள் வடக்கு– கிழக்கு மாகாண மக்களிடையே எதுவிதமான அரசியல் நடவடிக்கைகளிலும் ஈடுபடாத் பேர்வழிகளாவர். எனவே தான் அவர்கள் கொழும்பு ஆட்சியாளர்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தலைமையிலான தமிழ் முதலாளித்துவ பகுதியினருக்கும் இடையேயான சமரசத்தின் மூலம் ஏகாதிபத்திய, முதலாளித்துவ சுரண்டல்களுக்கு ஒரு உறுதியான களத்தை இலங்கையில் நிர்மாணித்துக் கொடுக்கத் தலைகீழாக நின்று வருகின்றார்கள். அது பிரித்தானிய மாஜி. இராஜாங்க அமைச்சர் லியாம் பொக்ஸ் தொடக்கம் செலிங்கோ குறுப் கம்பனிகளின் அதிபரான லலித் கொத்தலாவலை உட்பட்ட இலங்கையின் முன்னணி வர்த்தகப் பிரமுகர்கள் தட்டினரின் அப்பட்டமான நிலைப்பாடாக அம்பலமாகியுள்ளது. பொதுஜன முன்னணியைப் போலவே யூ.என்.பி.யும் ஆளுக்காள் போட்டியிட்டுக் கொண்டு அரசாங்கத்தினதும் எதிர்க்கட்சியினதும் அங்கீகாரத்துடன் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தி, தமிழர் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும் எனக் கூச்சலிடத் தொடங்கியுள்ளனர். சிங்கள சோவினிச அமைப்பான ஜே.வீ.பி.யும் ஒற்றையாட்சி முறையைக் கட்டிக் காக்கச் சபதம் பூண்டுள்ளதாகக் கூறிக்கொள்ளும் அதே வேளையில் தமிழ் மக்கள் வாழும் பிராந்தியங்களுக்கு சுயாட்சி வழங்க இணங்கியுள்ளமை இந்தப் பிற்போக்குச் சக்திகளின் அணிதிரள்வின் ஒரு வெளிப்பாடாகவேயன்றி சிங்கள அல்லது தமிழ் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் ஜனநாயக, வாழ்க்கை உரிமைகளையிட்டு அவர்களுக்குள்ள அக்கறையினால் அல்ல.

எவ்வாறெனினும் தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்தைத் தொடக்கி வைத்தவர்களும் அந்த யுத்தத்தை மேலும் உக்கிரமாக்கி முன்னெடுத்தவர்களும் அதற்குத் தாளம் போட்டவர்களும் இந்த விதத்தில் யுத்தத்தை நிறுத்தி, தீர்வு காணத் தள்ளப்பட்டுள்ளது ஏன்? யுத்தம் அதனது தர்க்க விதிகளுக்கு அமைய முன்சென்று கொண்டுள்ள அதே வேளையில் அதன் ஆரம்ப நோக்கங்களுக்கு எதிரான பெறுபேறுகளைக் கொணர்ந்து உள்ளதாக ஆளும் வர்க்கம் புரிந்து கொண்டுள்ளதாலாகும்.

யுத்தத்துக்காகவே யுத்தம் செய்யும் ஆளும் வர்க்கம் கிடையாது. யுத்தமானது ஆளும் வர்க்கத்தின் அவசியங்களை இட்டு நிரப்பும் பொருட்டு கையாளப்படும் மற்றொரு அரசியல், இராணுவ வேலைத்திட்டமாகும். அது உலக யுத்தத்துக்கு மட்டுமன்றி இனவாத யுத்தத்துக்கும் பொருத்தமான ஒரு பொது உண்மையாகும்.

தமிழ் பேசும் மக்களுக்கு எதிராகப் பாகுபாடு காட்டுவதையும் ஒடுக்குமுறைக்கு உள்ளாக்குவதையும் 1948ல் இருந்து மேலும் மேலும் மோசமடையச் செய்த யூஎன்.பி. சிறீலங்கா, கூட்டரசாங்கங்களும், 1983ன் பின்னர் அதனை ஒரு யுத்தத்தின் மட்டத்துக்கு தூக்கிப் பிடித்தனர். இது பூகோளமயமான முதலாளித்துவ பொருளாதார அமைப்பை ஒன்றிணைக்கும் போது ஏற்படக்கூடிய அரசியல் நெருக்கடிக்கு தீர்வுகாணும் முறையில் இடம் பெற்றது. திறந்த பொருளாதார கொள்கைகளின் பேரழிவுமிக்க தாக்கங்களுக்கு முகம் கொடுக்கும் தொழிலாளர் வர்க்கமும் ஏழை மக்களும் இதற்கு எதிராகக் கிளர்ந்து எழுந்து எதிர்ப்புக் காட்டுவதை முன் கூட்டியே சிதறடிக்கும் பொருட்டு இனக்குழு பாகுபாடுகள் கையாளப்பட்டது. இதன் மூலம் முதலாளித்துவ அரசின் இராணுவமயமாக்கத்துக்கு வழி திறப்பது அதன் இலக்காகியது. ஆனால் அங்கீகரிக்கப்பட்ட இனவாத யுத்தம் யூஎன்பி. அரசாங்கத்தின் கீழ் மேலும் சில ஆண்டுகளும் தொடர்ந்து இடம் பெற்று வருகையில், அதன் மூலம் முதலாளித்துவ பொருளாதாரத்துக்கும் நிர்வாக ஸ்திரப்பாட்டுக்கும் ஆபத்தான சவாலை உருவாக்குவதை தவிர்க்க முடியாது போயிற்று.

அரசாங்க வருடாந்த வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கு பொசுங்கிப் போனதோடு இக்காலப் பகுதியினுள் நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியில் ( GNP) 22600 கோடி ரூபாக்களுக்கும் அதிகமான தொகையை நாசமாக்கியுள்ள யுத்தம், முதலாளித்துவ வர்க்கத்தினால் தொடர்ந்தும் சகிக்க முடியாத ஒரு பெரும் சுமையாகியது. நாட்டின் கடற்பரப்பில் 2/3 பங்கும் நிலப்பரப்பில் 1/3 பங்கும் முதலாளித்துவ வர்த்தக நடவடிக்கைகளுக்கு பொருத்தமற்றதாக்கப்பட்டது. அத்தோடு நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத் தாபனங்களின் ( Transnational Corporation) மூலதனத்தை தருவிப்பதற்கு ஒரு பெரும் தடையாகவும் யுத்தம் மாறியது. இதனால் முதலாளித்துவ வர்த்தக சமூகத்துக்கு பெரும் வாய்ப்புகள் இல்லாத நிலைமை உருவாகியது. அது மட்டும் அல்ல. அரச இராணுவமயமாக்கம் அதிகரித்த அளவுக்கு அரசின் ஈடாட்ட நிலையும் உக்கிரம் கண்டது. பொதுவில் வளர்ச்சி கண்டு வந்த சமூக வன்முறைகளை ஊக்குவித்ததும் இந்த யுத்தமே. சிங்கள தமிழ் இனக் குழுக்களின் பிராந்தியங்களின் எல்லைப் பகுதிகளில் மட்டுமல்லாது தலைநகர் உட்பட்ட நாட்டின் தென் பகுதி நகரங்களிலும் சமூக வாழ்க்கை ஆபத்துக்குள்ளாகியது. யுத்த பேரிகைகளால் அடிபணியச் செய்ய முடியாது போன பொதுமக்களிடையே நாளாந்தம் யுத்த எதிர்ப்பு மனோநிலை வளர்ச்சி கண்டது.

இவை யுத்தத்தின் தீய விளைவுகளின் சாராம்சமாகும். முதலாளித்துவ அமைப்புக்கும் ஆட்சி முறைக்கும் தெரிந்த விதத்தில் அது பரவி வந்த விதத்தை குறிப்பது மட்டுமேயாகும்.

இனவாதக் கூலிப்படைகளாக மாறிய பல்வேறு தமிழ்க் குழுக்கள், கும்பல்களுக்கு பலிகடாக்களை வழங்குவதன் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளைத் தனிமைப்படுத்தி, சிதறடிப்பதன் மூலம் முதலாளித்துவ ஒற்றையாட்சி அரச முறையைக் கட்டிக் காக்கும் அரசியல் தீர்வுப் பொதி மோசடி இந்நிலைமையிலேயே குழி பறிந்து போயுள்ளது. சுயநிர்ணயத்தினதும் சுயாட்சியினதும் இனிப்பு வர்த்தகர்களின் வியாபாரத்தை முன்னெடுத்துக் கொண்டு அதன் பின்னால் முக்கிய முதலாளித்துவக் கட்சிகள் இரண்டையும் ஒன்றாக அணிதிரட்டி, விடுதலைப் புலிகளுடன் சமரசம் செய்வதன் மூலம் முதலாளித்துவ இலாபம் கறப்பதை உக்கிரமாக்கும் வேலைத் திட்டத்தில் ஏகாதிபத்தியவாதிகளும் இலங்கை வர்த்தகர்கள் கும்பலும் யூ.என்.பி, பொதுஜன முன்னணி அரசியல்வாதிகளும் தள்ளப்பட்டிருப்பதற்குக் காரணம் இதுவேயாகும்.

–மிகுதி அடுத்த இதழில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனையிறவில் இராணுவம் வீழ்ச்சி கண்டமை...

1ம் பக்கத் தொடர்ச்சி

இன்னும் பல ஆயுதங்களையும் பெருமளவில் கைப்பற்றிக் கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர். ஊர்ஜிதம் செய்யப்படாத செய்தியை மேற்கோள் காட்டி "ரொயிட்டர்" வெளியிட்ட செய்தியில் பெருமளவிலான இலங்கை இராணுவத்தினர் எதிரியின் கட்டுப்பாட்டுக்குள் வந்த பகுதிக்குள் சிக்குண்டு போய்க் கிடப்பதாகக் கூறியுள்ளது. எனினும் இலங்கை இராணுவப் பேச்சாளர்கள் விடுதலைப் புலிகளின் இந்த அறிக்கை பொய்யானது எனத் தெரிவித்துள்ளனர்.

## மாபெரும் தோல்வி

இந்த இராணுவ நடவடிக்கைகள் பற்றி அறிவிப்பதில் பெரும் தாமதம் காட்டி வந்த இலங்கை இராணுவ அதிகாரிகள், ஒரு மாபெரும் இராணுவத் தோல்வி என வர்ணிக்கத் தக்க ஒன்று இடம் பெற்றுள்ளதாகக் காட்டிக் கொள்ள முயன்றனர். வீழ்ச்சி கண்ட இந்த ஆனையிறவு முகாம் விசேட இராணுவ டிவிசன்கள் உட்பட 17000 படையாட்களைக் கொண்டிருந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு பீரங்கிகளும் கவச வாகனங்களும், விமானப் படைகளும் ஆதரவு வழ்ங்கி வந்தன. இராணுவத் தோல்வியை "ஒரு உபாய பின்வாங்கல்" ஆக சித்தரிக்க முயற்சிக்கின்றது. இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பாலித்த பெரேரா சும்மா கூறியதாவது: "கடும் சண்டை தொடர்கின்றது. இராணுவம் பாதுகாப்பு பிராந்தியத்தை ஆனையிறவுக்கு வடக்கே நகர்த்தியுள்ளது." பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட தகவல்களின்படி அரசாங்கத் தரப்பில் 8 இராணுவ அதிகாரிகள் உட்பட 80 பேர் இறந்துள்ளதோடு, 19 அதிகாரிகள் உட்பட 457 பேர் காயமடைந்துள்ளனர். இந்த அறிக்கை குறைந்த பட்சம் 150 விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டதாக குறிப்பிட்டு இருந்தது.

இலங்கை இராணுவம் தற்சமயம் சுமார் 500000 மக்கள் வாழும் யாழ்ப்பாண நகரைச் சுற்றிலும் உள்ள தனது இராணுவ நிலைகளை ஸ்திரப்படுத்துவதில் ஈடுபட்டுள்ளது. இராணுவம் 1995/96ல் விடுதலைப் புலிகளிடமிருந்து யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியது. அச்சமயத்தில் கொழும்பு அரசாங்கத்தின் 1 இலட்சம் படையினரில் மூன்றில் ஒரு பங்கினர் யாழ்ப்பாணம் பகுதியில் நிறுத்தப்பட்டு இருந்தனர். இது முக்கிய கடற்படை, விமானப்படை தளங்களையும் உள்ளடக்கிக் கொண்டு இருந்தது. யாழ்ப்பாணக் குடா நாட்டின் ஏனைய பகுதிகளிலும் கடும் மோதுதல் இடம் பெற்று வருகின்றது. பெயர் குறிப்பிட விரும்பாத ஒரு இலங்கை அதிகாரி சீ.என்.என். (CNN) செய்திச் சேவைக்கு தெரிவிக்கையில், விடுதலைப் புலிகளின் போராளிகள் விமானத்தள [பலாலி] பிராந்தியத்துக்கு நெருக்கமாகத் தமது பீரங்கிப் படைகளை நிறுத்துவதைத் தடை செய்வதிலேயே இராணுவம் பெரிதும் அக்கறை காட்டி வருவதாகக் குறிப்பிட்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் வடக்கு நோக்கிச் செல்லும் தமது நடவடிக்கையில் தொடர்ந்து ஈடுபடும் எனவும் ஆனையிறவுக்கு வடக்கில் இராணுவத்தால் புதிதாக அமைக்கப்பட்ட காவல் அரண்களை நிர்மூலமாக்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இராணுவ ஆய்வாளர்கள் ஆனையிறவு முகாம் இழக்கப்பட்டதை 1954ல் பிரான்சிய காலனித்துவ படைகளுக்கு வியட்னாமில் டியன் பியன் பூ (Dien Bien Phu) வில் ஏற்பட்ட தோல்வியுடன் ஒப்பிட்டுள்ளனர். இறுதியில் இது பிரான்சை இந்தோசீனத்தில் இருந்து வெளியேறத் தள்ளியது. இராணுவத் தணிக்கை காரணமாக இந்த ஆனையிறவு தோல்வியைப் பற்றி அறிக்கை செய்ய முடியாது போயுள்ள நிலையிலும் கடந்த "சண்டே டைம்ஸ்" [ஏப்பிரல் 23] பத்திரிகை குறிப்பிட்டதாவது: "ஆனையிறவு யாழ்ப்பாணத்துக்கான நுழைவாயிலாகும். இந்த விரகி முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் ஏற்பட்டுள்ள தோல்வியானது இராணுவ நிலைமையை தலையெடுக்க முடியாத விதத்தில் சங்கடத்துக்குள்ளாக்கும். இதன் இயற்கை விளைவாக அரசியல் நிலைமை தொடர்ந்தும் பாதிக்கப்படும். இது நாட்டின் பெரிதும் அக்கறைக்குரிய ஒரு விடயமாகும். இதன் அடிப்படை இதுதான்: "ஆனையிறவில் ஏற்படும் எந்த ஒரு பின்னடைவும் இராணுவ ரீதியிலும் அரசியல் ரீதியிலும் பேரழிவு மிக்கதாக இருக்கும்".

ஆனையிறவு வீழ்ச்சி கண்டமை அரசாங்கத்தில் ஏற்கனவே இருந்து கொண்டுள்ள பதட்டத்தை சந்தேகத்துக்கு இடமற்ற விதத்தில் மோசமடையச் செய்வதோடு உயர் மட்ட இராணுவ அதிகாரிகளுக்கு எதிரான ஒரு தொகை புதிய குற்றச் சாட்டுக்களை தூண்டிவிடச் செய்யும். கடந்த நவம்பரில் வன்னியில் விடுதலைப் புலிகள் துரித கதியில் 10 இராணுவ முகாம்களை கைப்பற்றியதைத் தொடர்ந்து இடம் பெற்ற ஒரு தொகை கணிசமான தோல்விகளின் தாக்கத்தினால் இராணுவம் ஏற்கனவே தடுமாறிக் கொண்டு இருந்தது. ஏப்பிரல் [2000] தொடக்கத்தில் இராணுவம் தனது ஏழு உயர்மட்ட அதிகாரிகளை கட்டாய ஓய்வில் அனுப்பியது. வன்னி தோல்விகளைத் தொடர்ந்து அமைக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையின் அடிப்படையில் மேஜர் ஜெனரால் தொடக்கம் மேஜர் பதவி நிலை அதிகாரிகள் இங்ஙனம் கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்டவர்களுள் அடங்குவர்.

ஆனையிறவில் நிலைமை மோசமடைந்து வருவதைத் தடுக்கும் ஒரு நடவடிக்கையாக தற்சமயம் லண்டனில் வைத்திய சிகிச்சை பெற்றுவரும் ஜனாதிபதி குமாரதுங்க இராணுவத் தலைமைப் பீடத்தில் மேலும் மாற்றங்களைச் செய்யும் "பக்ஸ்" செய்தியை அனுப்பியிருந்தார். 1988-89 காலப்பகுதியில் இலங்கையின் தென் பகுதியில் கிராமப்புற இளைஞர்களுக்கு எதிரான பயங்கர நடவடிக்கையில் ஈடுபட்டவராக பிரபல்யமான மேஜர் ஜெனரால் ஜானக பெரேரா யாழ்ப்பாணக் குடா நாட்டின் சர்வ அதிகாரமும் கொண்ட இராணுவத் தளபதியாகவும் (Overall operation commander - OOC) இராணுவ நடவடிக்கைகளின் கூட்டுத் தளபதியாகவும் (Joint chief of operation ) நியமனம் செய்யப்பட்டார். இதே சமயம் ஜெனரால் றொஹான் தலுவத்த பாதுகாப்பு அதிகாரிகளின் தலைமைப் பதவிக்கு (Chief of defence staff) நியமனம் செய்யப்பட்டார். இப்பதவி சடுதியாக குமாரதுங்கவினால் வழங்கப்படும் வரை இவர் கடந்த மே 1999 வரை இப்பதவியை வகித்து வந்தார்.

## ஒழுங்கீனம்

இந்தப் பெரிதும் ஒழுங்கீனமான இராணுவப் பதவி மாற்றங்கள், அரசாங்கம் ஆழமான நெருக்கடியில் மூழ்கியுள்ளதைச் சுட்டிக் காட்டுகின்றது. அரசாங்கத் தரப்பிலான பிளவுகளும் வெளிப்பட்டுள்ளன. ஜனாதிபதி நாட்டில் இல்லாத சமயத்தில் பிரதி பாதுகாப்பு அமைச்சர், ஜெனரால் அனுருத்த ரத்வத்த பாதுகாப்பு அமைச்சராக கருமமாற்ற நியமனம் செய்யப்படவில்லை. ஜனாதிபதி குமாரதுங்க பாதுகாப்பு, நிதியமைச்சர் போன்ற முக்கிய பதவிகளையும் வகிக்கின்றார். ஜனாதிபதி ஆனையிறவு தோல்வி பற்றி எந்த ஒரு அறிக்கையையும் வெளியிடாத போதிலும் பிரிட்டனுக்கான தமது விஜயத்தை சுருக்கிக் கொண்டு அவர் கொழும்பு திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. கொழும்பில் உள்ள வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் ஏற்கனவே பொதுஜன முன்னணி அரசாங்கத்தை தாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன. யுத்தத்துக்கு ஆதரவான 'ஜலண்ட்' பத்திரிகை அதனது முன்பக்க ஆசிரியத் தலையங்கத்தில் எச்சரிக்கை செய்துள்ளது: "வடக்கில் உள்ள இராணுவம் படுமோசமான பேராபத்துக்கு முகம் கொடுத்துள்ளது. இலங்கையில் உள்ளவர்களின் நிலைமையும் இதுவே. இந்நாட்டைக் காப்பாற்ற தமது உயிர்களை அர்ப்பணம் செய்ய முன் வந்த இளைஞர்கள் பிளவுபடுத்தப்பட்டுள்ளனர். ஒவ்வொரு வருடமும் பல நூறு கோடிக்கணக்கான ரூபாக்கள் செலவிடப்பட்டுள்ளன. எமது படைகளின் எண்ணிக்கை பயங்கரவாதிகளின் எண்ணிக்கையை விட அதிகமானதோடு பெரிதும் சிறந்த முறையில் ஆயுதபாணியாக்கப்பட்டும் உள்ளனர். ஆனால் பின்வாங்கச் செய்யப்பட்டுள்ளோம். இது நீண்டு செல்ல முடியுமா?" இப்பத்திரிகை கிளர்ச்சியாளர்களை தோற்கடிக்கச் செய்ய புதிய மூலோபாயங்களை அமுல் செய்யும்படி குமாரதுங்கவை வேண்டிக் கொண்டுள்ளது.

எதிர்க் கட்சியான யூ.என்.பி. இந்த திடீர் மாற்றத்தின் பேரில் அராசாங்கத்தை கண்டனம் செய்ததோடு ஆனையிறவு வீழ்ச்சியைப் பற்றி கலந்துரையாட பாராளுமன்றத்தின் ஒரு அவசரக் கூட்டத்தைக் கூட்டும்படியும் வழக்கமான விதத்தில் அழைப்பு விடுத்துள்ளது. அரசாங்கம், பயங்கரவாதத்துக்கு எதிரான தேசிய இயக்கம், சிங்கள வீரவிதான போன்ற சிங்கள சோவினிச அமைப்புக்களின் நெருக்குவாரங்களுக்கும் உள்ளாகியது. ஏப்பிரல் மாத முற்பகுதியில் இவை ஒரு ஆர்ப்பாட்டத்தையும் நடாத்தின. விடுதலைப் புலிகளை ஒழித்துக் கட்டும் யுத்தத்தை உக்கிரமாக்கும்படி இவை கோரின.

## மோசமான வியாதி

ஆனையிறவு தோல்வியானது திறமையற்ற இராணுவத் தலைமையினதோ அல்லது யுத்தத்தை குமாரதுங்க அரசாங்கம் தொடர முடியாது போனதையோ விட இலங்கை ஆயுதப் படைகளின் படுமோசமான வியாதியைப் பிரதிபலிக்கின்றது. உண்மையில் யுத்தத்துக்கு ஒரு முடிவுகாணும் பிரச்சாரத்தின் அடிப்படையில் 1994ல் ஆட்சிக்கு வந்ததில் இருந்து குமாரதுங்க இராணுவ நடவடிக்கைகளை பிரமாண்டமான முறையில் உக்கிரமாக்கினார். கடைசியாக இடம் பெற்ற டிசம்பர் ஜனாதிபதி தேர்தலில் குமாரதுங்க தனது எதிர்ப்பாளர்களின் சோவினிச கூச்சல்களை எல்லாம் மிஞ்சும் விதத்தில் தமது ஆட்சிக்காலத்தில் யாழ்ப்பாணத்தைத் திரும்பக் கைப்பற்றியதைச் சுட்டிக் காட்டி வந்தார். ஆனால் 17 வருடகால யுத்தத்தில் 60000க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டதோடு இன்னும் பலர் காயமடைந்ததோடு வீடுகளையும் இழந்தனர். இன்று யாழ்ப்பாணக் குடாநாட்டில் இடம்பெறும் யுத்தத்தில் 5000க்கும் அதிகமான மக்கள் யுத்த களமாக மாறியுள்ள பளை, பச்சிலைப்பள்ளி பகுதிகளில் அகப்பட்டுப் போயுள்ளனர். இவர்கள் ஏப்பிரல் மாதத்தின் முற்பகுதியில் அரசாங்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடத் தள்ளப்பட்டனர். அரசாங்க அதிபர் அலுவலகத்துக்கு வெளியே [யாழ்ப்பாணக் கச்சேரி] இடம் பெற்ற 2000 பேர் கலந்து கொண்ட ஒரு நேருக்கு நேர் மோதலில் ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்த தலைவர்கள், தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு எதிராக இராணுவம் தமிழ்ப் பொது மக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்துவதாக குற்றம் சாட்டினர்.

தொடர்ந்துவரும் யுத்தம் தொழிலாளர் வர்க்கத்தினுள்ளும் நகர்ப்புற, கிராமப்புற ஏழைகளிடையேயும் பரந்த அளவிலான எதிர்ப்பை உருவாக்கியுள்ளது. இவர்கள் இந்த உக்கிரமான தாக்குதல்களின் பளுவை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சுமக்க நேரிட்டது. யுத்தத்துக்கான எதிர்ப்பு படையாட்களிடையேயும் பிரதிபலிக்கின்றது. இவர்களில் பலர் பொருளாதாரத் தேவைகளுக்காகவே இராணுவத்தில் சேர நேரிட்டுள்ளது. கடந்த ஆண்டில் வன்னியில் இடம் பெற்ற மோதுதலில் பல இராணுவ படைப் பிரிவுகள் பிளவுபட்டு ஓட்டம் பிடித்தன அல்லது பெருமளவில் இராணுவத்தில் இருந்து தப்பி ஓடினர்.

இந்த வருடத் தொடக்கத்தில் 15000 மேலதிக படையாட்களைத் திரட்டும் நடவடிக்கை அடியோடு தோல்வி கண்டது. இராணுவ உயர் அதிகாரிகள் தேசாபிமான அழைப்புக்களை விடுத்த போதிலும் இராணுவம் ஆக 1386 படையாட்களை மட்டுமே காலக் கெடுவின் இறுதியில் -மார்ச்- திரட்டிக் கொள்ள முடிந்தது. இராணுவ படையாட்களிடையே போராட்ட விருப்பு வீழ்ச்சி கண்டு போனமை ஆனையிறவின் தோல்விக்கு பங்களிப்பு செய்துள்ளது என்பதில் சந்தேகம் கிடையாது. மறுபுறத்தில் இது மனவுறுதியை மேலும் வீழ்ச்சி காணச் செய்வதில் இணைந்து கொள்ளும்.

இலங்கையின் பெரும் வர்த்தக நிறுவனங்களின் கணிசமான பகுதியினர் யுத்தத்துக்கு ஒரு முடிவு காணத் தள்ளப்பட்டுள்ளனர். வெளிநாட்டு முதலீட்டுக்கும் பொருளாதார ஸ்திரப்பாட்டுக்கும் இது ஒரு தடையாக இருந்து கொண்டுள்ளதாக அவர்கள் இப்போது கருதுகின்றனர். நோர்வே, ஐரோப்பிய யூனியனின் ஆதரவோடு பேச்சுவார்த்தை மூலம் யுத்தத்துக்கு ஒரு முடிவுகாண அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே பேச்சுவார்த்தையை ஆரம்பித்து வைப்பதில் ஈடுபட்டுள்ளது. ஆனால் இருதரப்பினரும் முன்னொரு போதும் இல்லாத அளவில் வெட்டி நின்று கொண்டுள்ளனர். தமிழீழ விடுதலைப் புலிகள் தீவின் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் ஒரு தனிநாட்டை அமைக்கப் போராடி வருகின்றது. இதே சமயம் மாகாணங்களுக்கு ஒரு வரையறுக்கப்பட்ட அதிகாரத்தை வழங்குவதை உள்ளடக்கிய அரசியலமைப்பு சட்ட மாற்றங்களுக்கான சாத்தியத்தை ஏற்படுத்தும் அரசாங்கத்துக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையேயான பேச்சுவார்த்தைகள் ஸ்தம்பித்துப் போயுள்ளது.

இறுதியாகக் கிடைத்த இராணுவ ரீதியிலான வெற்றிகள், எந்த ஒரு அதிகாரப் பகிர்வு பொதியையும் நிராகரித்து பூரண சுதந்திரத்தைக் கோரும் விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை மட்டுமே பலமடையச் செய்யும். ஏப்பிரல் 22ம் திகதி விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரான அன்டன் பாலசிங்கம் தமிழ் கார்டியனிடம் (Tamil Guardion) தெரிவித்ததாவது: "விடுதலைப் புலிகள் ஒரு நோர்வே தூதுக்குழுவை வன்னிக்கு விஜயம் செய்யும்படியும் கொழும்பு ஆட்சியாளர்களுடனான பேச்சுவார்த்தைகளுக்கு ஏற்பாடு செய்யும் விதத்தில் தமது தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் பேச்சுவார்த்தை நடாத்தும்படியும் அழைப்புவிடுத்துள்ளது". குமாரதுங்க அதிகரித்த விதத்தில் ஒரு தெளிவான கொள்கையற்ற ஒரு அரசியல்வாதியாகவே இருந்து வந்துள்ளார். இணக்கப்பாட்டுக்கு கொணர முடியாததை இணக்கப்படுத்த முயற்சித்து வந்துள்ளார்: யுத்த பேரிகையின் மூலம் சிங்கள சோவினிஸ்டுகளுக்கு அழைப்பு விடுத்து வந்துள்ளார். இதே சமயம் யுத்த எதிர்ப்பு உணர்வுகளை சமாதான உடன்படிக்கைகளுக்கு வாக்குறுதியளிப்பதன் மூலம் தணிக்க முயன்றுள்ளார். அவர் பெருமளவுக்கு தனது அரசியல் ஆதரவு அடிப்படையை இழந்து போயுள்ளதோடு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி உள்ளடங்கலான ஒரு ஓட்டை உடைசல் கூட்டரசாங்க கட்சிகளிலேயே தங்கி நின்று கொண்டுள்ளார். ஆனையிறவை இழந்தமையானது வட்டத்தை விரிவுபடுத்திக் கொள்ளும் அவரது முயற்சியை - அரசியல் ரீதியில்- இன்னும் பெரிதாக ஸ்தாபிதம் செய்து கொள்ள முடியாது போயுள்ளதோடு ஆளும் வர்க்கத்துக்கு ஒரு தெளிவான பதிலீடு இல்லாத நிலைமைகளில் அரசாங்கத்தின் வீழ்ச்சியை துரிதப்படுத்தவும் முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்க்சிச இலக்கியங்களை நீங்களும் வாசியுங்கள்!



## லியோன் ட்ரொட்ஸ்கியும் 20ம் நூற்றாண்டில் சோசலிசத்தின் தலைவிதியும்

டேவிட் நோர்த்


விலை ரூபா. 10.00



## சோசலிச சமத்துவக் கட்சியின் முன்நோக்கு

பொது மக்கள் முகம் கொடுக்கும் சகல பிரச்சினைகளும் அவர்கள் ஈடுபட்டுள்ள சகல போராட்டங்களும் முன்நோக்கு, தலைமை பற்றிய அரசியல் பிரச்சினையை உக்கிரமான முறையில் தோற்றுவிக்கின்றது. இந்தச் சவாலுக்கு முகம் கொடுக்க, அனைத்துலகக் குழுவின் தலைமையிலான நான்காம் அகிலத்தினால் மட்டுமே முடியும். அனைத்துலகக் குழுவின் கிளைகளால் புதிய கட்சிகளை ஸ்தாபிதம் செய்வதானது, முதலாளித்துவ முறைக்கு எதிராக தவிர்க்க முடியாத விதத்தில் போராட்டத்துக்குக் கிளம்பும் மக்களுக்கு சமூக சமத்துவத்தையும் நீதியையும் ஜனநாயக சுதந்திரத்தினையும் கொண்ட மாற்று வேலைத்திட்டத்தின் அடிப்படையில் ஆட்சி பற்றிய முன்நோக்கில் வழிகாட்டுவதற்கே.

விலை ரூபா 40.00



## முதலாளித்துவத்தின் மரண ஓலமும்

நான்காம் அகிலத்தின் பணிகளும்

இடைமருவு வேலைத்திட்டம்
நான்காம் அகிலத்தின் ஸ்தாபக மாகாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

விலை ரூபா. 15.00




இலங்கையில் ட்ரொட்ஸ்கிசமும் திரிபுவாதமும்

## சமசமாஜ வரலாற்று ஏட்டிலிருந்து

கீர்த்தி பாலசூரிய

விலை ரூ. 15.00



## அடிப்படைக் கொள்கைகளுக்கும், மூலோபாயத்துக்குமான 25 ஆண்டுகால உறுதியான போராட்டம்

விஜே டயஸ்


விலை ரூ.10.00



## இலவசக் கல்வியை காப்பது எப்படி ?

விஜே டயஸ்

விலை ரூ. 10.00



ஏகாதிபத்திய யுத்தத்துக்கும் காலனித்துவத்துக்கும் எதிரான போராட்டமும்

## பேர்லின் உலக மகாநாட்டின் முன்நோக்கும்

விலை ரூ. 25.00



ஆகஸ்ட் சதியின் பின்னர்:

## சோவியத் யூனியன் எங்கே செல்கிறது?

விலை ரூ. 25.00



சோவியத் யூனியன் கலைக்கப்பட்டதன் பின்னர்

## மார்க்சிசத்துக்கான போராட்டமும் நான்காம் அகிலத்தின் பணிகளும்

டேவிட் நோர்த்

விலை. ரூ5.00



## நிரந்தரப் புரட்சியும் சோசலிச அனைத்துலக வாதத்துக்கான போராட்டமும்

கீர்த்தி பாலசூரிய நினைவுப் பேருரை

டேவிட் நோர்த்

விலை ரூ. 8.00

தொழிலாளர் பாதை வெளியீடு, 90, 1 வது மாளிகாகந்த ஒழுங்கை, கொழும்பு 10: தொலைபேசி: 682220

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யுத்தத்துக்கு பேச்சுவார்த்தை...

2ம் பக்கத் தொடர்ச்சி

மதில் சுவரால் ஏறிக்குதிக்க முயன்றனர். பொலிசார் சும்மா பார்த்துக் கொண்டு நிற்கவே இவர்கள் இதைச் செய்தனர்.

ஏனைய சக்திகளும் இந்த அரசியல் ஸ்தம்பித நிலைமையை பயன்படுத்திக்கொள்ள முயற்சிக்கின்றன. "விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகள் இடம்பெறுகையில் எமது இராணுவ நடவடிக்கை உக்கிரமடையும்" என மார்ச் 27ம் திகதி இடம்பெற்ற வெளிநாட்டு பத்திரிகையாளர் மகாநாட்டில் பேசிய குமாரதுங்க குறிப்பிட்டார். இலங்கை இராணுவத் தளபதி சிறீலால் வீரசூரிய முதற்தடவையாக படைகளுக்கு ஆட்திரட்டும் அழைப்பை விடுத்தார். "யுத்தத்தை விரைவாக ஒரு முடிவுக்கு கொணர இராணுவம் அவசியமான போர்வீரர்களின் எண்ணிக்கையை பூர்த்தி செய்யும் பிரச்சினைக்கு முகம் கொடுத்துள்ளது. வெற்றியீட்டுவதற்கான ஒரே தடைக்கல் இதுதான். ஆதலால் காரியாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் இராணுவத்தின் இன்றைய பலத்தை அதிகரிக்கும் அவசியத்தை உணர்ந்து கொண்டுள்ளோம். நாட்டைக் காக்கும் இந்தத் தீர்க்கமான வரலாற்றுக் கட்டத்தில் உங்களின் புத்திரர்களை இராணுவத்தில் சேரும்படி ஊக்குவியுங்கள்." இராணுவத் தளபதி யுத்தத்துக்கு இளைஞர்களின் அவசியத்தை மேலும் வலியுறுத்தி வருகையில் இனவாத சக்திகள் தெற்கில் தமிழீழ விடுதலைப் புலிகள் சிவிலியன்கள் மீது மேற்கொண்ட குண்டு வெடிப்புகளால் உருவான ஆத்திரத்தையும் குழப்ப நிலையையும் பயன்படுத்திக் கொண்டுள்ளன. அவர்கள் ஒரு சட்ட விரோத குண்டர் கும்பல்களுக்கான நிலைமையைச் சிருஷ்டிக்க இதைச் சாதகமாக்கிக் கொண்டுள்ளனர். இதன் மூலம் தமிழ் மக்களுக்கு எதிரான எதிர்ப்பைத் தூண்டிவிட முயற்சித்துள்ளனர்.

மார்ச் மாதக் கடைப் பகுதியில் -6 நாட்களில்- கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் தமிழர்களுக்கு எதிரான 7 தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளன. இரண்டு தமிழ் இளைஞர்கள் பஸ்ஸினுள்ளும் புகைவண்டியினுள்ளும் தாக்கப்பட்டனர். ஓடும் புகைவண்டியில் இருந்து பாடசாலை மாணவன் வெளியே தள்ளப்பட்டார். ஒரு தமிழ் வழக்கறிஞர் வீதியில் கத்திக்குத்துக்கு இலக்கானார். தமிழ் பத்திரிகை வாசித்த தமிழ் முதியவர் ஒருவர் வீதியில் வைத்துத் தாக்கப்பட்டார். 'புலி' எனக் கூறி கோவில் ஐயர் ஒருவர் ஒரு கும்பலினால் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டார். இச்சம்பவங்கள் எல்லாம் தொழிலாளர் வர்க்கத்துக்கு ஒரு எச்சரிக்கையாக ஒலிக்க வேண்டும். சமாதானம் பற்றிய ஆறு வருடகால மோசடிக் கோசங்களின் பின்னரும் யுத்தத்துக்கு முடிவு கட்ட அவர்களிடம் எதுவிதமான வேலைத்திட்டமும் கிடையாது என்பதை பொதுஜன முன்னணி ஆட்சியாளர்கள் காட்டிக் கொண்டுள்ளனர். அதற்கு மாறாக அவர்கள் பெரிதும் தீவிர வலதுசாரி சக்திகளுக்கான விளை நிலத்தை உருவாக்குவதில் ஈடுபட்டுள்ளனர்.

## தனியார்மயமாக்கலின் பின் தோட்டத்...

4ம் பக்கத் தொடர்ச்சி

ரூபாயிலிருந்து 20.6 பில்லியன் ரூபாவரை வீழ்ச்சி கண்டது.

உதாரணமாக 1998ல் கொழும்பு தேயிலைச் சந்தைக்கு விற்பனைக்கு விடப்பட்ட முழுத் தேயிலையில் 10 சதவீதம் கூட விலை போகவில்லை. இந்த ஆண்டில் இலங்கையின் பெரும் தேயிலைச் சந்தைகளில் ஒன்றான ரஷ்யாவில் 40 மில்லியன் கிலோ கிராமாகவிருந்த இலங்கைத் தேயிலையின் கொள்வனவு, ரஷ்ய நாணயமான ரூபிளின் மதிப்பு அமெரிக்க டொலருக்கு எதிராக 50 வீத வீழ்ச்சி கண்டதைத் தொடர்ந்து தேயிலை விலையிலும் 10 வீத வீழ்ச்சி கண்டது.

கென்யா, சீனா, இந்தியா போன்ற ஏனைய தேயிலை உற்பத்தி நாடுகளுக்கிடையிலான போட்டியும் இலங்கையின் இந்த நிலைமைக்கு முக்கிய பொறுப்பாகும். 1977 முதல் 97 வரை உலக தேயிலைச் சந்தையில் இலங்கையின் பங்கு 22 அல்லது 23 வீதத்தை பிரதிநிதித்துவம் செய்தது. அதே காலப்பகுதியில் கென்யா, சீனா ஆகிய இரண்டு நாடுகளும் உலகத் தேயிலை சந்தையில் முறையே 9-17, 10-18 வீத வளர்ச்சியைக் கண்டன.

இலங்கை பெருந்தோட்ட பயிர்ச்செய்கையாளர் சங்கம் கடந்த ஆண்டில் வெளியிட்ட அறிக்கையில் ஒரு எச்சரிக்கை விடுத்திருந்தது: "தேயிலை மற்றும் இறப்பர் விலைகளின் வீழ்ச்சியும், வறையறையற்ற சம்பளத் திட்டங்களும், பொதுவான வரிவிதிப்புக்களும் கடன்களும் இலங்கையின் பெருந்தோட்டக் கைத்தொழிலை நெருக்கடிக்குள் மூழ்கடிக்கும். சில உடனடித் தீர்வுகளைக் காண அரசாங்கம் தவறுமானால் அது நாட்டின் பொருளாதாரத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்."

பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையாளர் சங்கத்தின் அறிக்கை இந்த நெருக்கடியிலிருந்து தலையெடுக்க தொழிற்சங்கங்களையும் கம்பனிகளையும் அரசாங்கத்தையும் ஒரு கூட்டு நடவடிக்கையொன்றை முன்னெடுக்க அழைப்பு விடுத்துள்ளது. உற்பத்தியில் 50 வீதம் தொழிலாளர்களின் சம்பளத்திற்காக செலவு செய்யப்படுவதாக குற்றம் சாட்டியுள்ளதோடு, அடுத்த ஆண்டுகளில் மேலும் ஒரு சம்பள வெட்டு ஒப்பந்தத்துக்கும் அழைப்பு விடுக்கின்றது. ஒரு தோட்டத் தொழிலாளிக்கு ஒரு நாள் சம்பளம் 1.30 அமெரிக்க டொலர் மாத்திரமே என்பதும் குறிப்பிடத் தக்கது.

ஜனாதிபதித் தேர்தல்களில் யார் ஆட்சிக்கு வந்தாலும், அரசாங்கத்தினதும் தொழிற்சங்க அதிகாரத்துவங்களதும் ஆதரவோடு, சம்பளம் மற்றும் சேவை நிலைமைகள் மீதான நிர்வாகத்தின் கடும் தாக்குதலுக்கு தோட்டத் தொழிலாளர்கள் முகம் கொடுத்து வருகின்றனர்.

## தமிழ்க் கைதிகளைக் கொன்ற அதிகாரிகளைக்...

5ம் பக்கத் தொடர்ச்சி

துப்பாக்கியை பாவித்தது தெரிய வந்தது. இந்த அதிகாரி இது உண்மையென ஒப்புக் கொண்டுள்ளார். துப்பாக்கியை தாம் பாவித்ததை ஏனைய சிறைச்சாலை அதிகாரிகள் ஊர்ஜிதம் செய்தனர். ஜனவரி 6ம், 7ம் திகதிகளில் இடம் பெற்ற மரணங்களின் பின்னர் சிறைச்சலை அதிகாரிகள் ஒரு தண்டனை நடவடிக்கையாக தமிழ்க் கைதிகளை மாகாணச் சிறைகளுக்கு மாற்றினர். இதில் பதுளை, கண்டி, அனுராதபுரம், மட்டக்களப்பு, காலி அத்தோடு கொழும்பு சிறைகளும் அடங்கும். கண்டி சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டவர்களில் சுப்பு உதயகுமாரும் அருணாசலம் யோகேஸ்வரனும் அடங்குவர். அட்டன் பகுதியைச் சேர்ந்த தோட்டத் தொழிலாளர்களான இவர்கள் சோடிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளின் பேரில் வழக்கு விசாரணைக்காக ஒரு வருடத்துக்கும் மேலாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களை விடுதலை செய்ய சோசலிச சமத்துவக் கட்சி பிரச்சார நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. களுத்துறை வார்ட் 'சீ'யில் தமது உயிர்களுக்கு ஆபத்து ஏற்பட்ட விதத்தை அவர்கள் சோசலிச சமத்துவக் கட்சி பிரதிநிதிகளிடம் விபரித்தனர். "சிங்களக் கிறிமினல் குற்றவாளிகளைக் கொண்டிருந்த அறைகள் ஒரு வயர் பின்னல் வலையினால் பிரிக்கப்பட்டு இருந்தது. தமிழருக்கு எதிரான இனவாத யுத்தம் 1983ல் ஆரம்பித்ததில் இருந்து சிறைச்சாலைகளில் இடம் பெற்ற தாக்குதல்களை நாம் சகலரும் அறிவோம். சிறைச்சாலை அதிகாரிகள் தமிழ்க் கைதிகளை தாக்க சிங்கள சிறைக் கைதிகளை எப்போதும் பயன்படுத்தினர். 1983ல் வெலிக்கடை சிறைச்சாலையில் இவர்கள் 53 தமிழர்களை கொலை செய்தனர்.

இக்கைதிகள் சிறைச்சாலை நிலைமையைப் பற்றியும் குறிப்பிட்டனர்: "நாம் சிறைக் கூட்டுக்குள் இருந்து வெளியே கூட்டிச் செல்லப்படுவது கிடையாது. இதனால் சுத்தமான காற்றை சுவாசிக்க முடியாமல் போயுள்ளது. அன்றாடைய அவசியப் பொருட்களான பால் மாவு, பற்பசை, சவர்க்காரம் ஆகியன எமக்கு வழங்கப்படுவதில்லை. எமக்கு புதினப் பத்திரிகைகள், தொலைக் காட்சிகள், றேடியோக்கள் தடை செய்யப்பட்டுள்ளன. வெளியே என்ன நடக்கிறது என்பதைத் தன்னும் நாம் அறியோம். திடீரென எங்கேனும் ஒரு குண்டு வெடிப்பு இடம் பெற்றது தான் தாமதம் அதை அதிகாரிகள் சிங்களக் கிறிமினல் கைதிகளைக் கொண்டு எம்மைத் தாக்குவதற்கு சந்தர்ப்பமாக்கிக் கொள்கிறார்கள். இதே ஆபத்துக்கு ஏனைய தமிழ் கைதிகளும் முகம் கொடுக்கிறார்கள்." ஜனவரி 28ம் திகதி சிங்கள கிறிமினல் கைதிகள் கொழும்பின் முக்கியச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மூன்று தமிழ் பெண்களை தாக்க சிறை அதிகாரிகளால் தூண்டி விடப்பட்டனர்.

களுத்துறைச் சிறைச்சாலையில் இடம் பெற்ற மரணங்கள் பற்றிய பெரிதும் வரையறைக்குட்பட்ட விசாரணைகளும் பொலிஸ் குற்ற புலனாய்வுகளும் தமிழ் கைதிகளுக்கு எதிரான உடல் ரீதியான வன்முறைகளை தொடர்ந்து நடாத்த நாடு பூராவும் உள்ள சிறைச்சாலை அதிகாரிகளுக்குச் சுதந்திரம் வழங்கியுள்ளது.

## இலங்கை கடற்படை ரோந்து படகு மோதி...

3ம் பக்கத் தொடர்ச்சி

இதனால் அவசர சிகிச்சைக்காகததன்னும் நோயாளிகளை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்ல வழி இல்லை..

பெரும் மீன்பிடி வலைச் சொந்தக்காரர்கள் மீனவர்களின் உயிர் வாழ்க்கையை தீர்மானம் செய்பவர்களாக உள்ளனர். உடப்பு, மீன்பிடிக் கைத்தொழிலில் பழைய நிலமானித்துவ அமைப்பின் மிச்ச சொச்சங்கள் புதிய முதலாளித்துவ உறவுகளுடன் பின்னிப் பிணைந்து கொண்டுள்ளதைக் காணலாம். இந்த வலைச் சொந்தக் காரர்கள் 60 அல்லது 70 தொழிலாளர்களை இப்பகுதியில் மீன்பிடி சீசன் காலத்தின் போது- 6 மாதத்துக்கு- சேவைக்கு அமர்த்துகின்றனர். ஒவ்வொரு தொழிலாளியும் அவரின் தொழிலுக்கு இணங்க ரூபா. 20000 தொடக்கம் 40000 வரை சம்பளம் பெறுகின்றனர். இந்த ஆறு மாத காலத்தில் இந்த தொழிலாளர்கள் வேறு முதலாளிகளின் கீழ் வேலை செய்ய முடியாது. உண்மையில் அவர் மீன்பிடி முதலாளிக்கே சொந்தமானவர். அவர் வேலைக்கு செல்லாவிடில் மீன் முதலாளி அவரை தொழில் செய்யும்படி நெருக்குவார். இதை மீன் முதலாளி தனித்தோ அல்லது பொலிசாருடன் சேர்ந்தோ செய்கின்றார்.

பிடித்த மீனில் இருந்து கிடைக்கும் வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கு (தினசரி) மீன்பிடிப் படகு சொந்தக்காரருக்கு போகிறது. மூன்றில் ஒரு பங்கு நாளாந்த செலவீனங்களுக்கு- சாப்பாடு- போகிறது. எஞ்சிய மூன்றில் ஒரு பங்கு மட்டுமே தொழிலாளர்களுக்கு கிட்டுகிறது. தொழிலாளர்களின் இந்த வருமானப் பங்கில் இருந்தும் சம்பள முற்பணம் போன்றவை கழிக்கப்பட்டு விடுகின்றது. உடப்புவில் 28 மீன்பிடி வலை சொந்தக் காரர்களும் 60 மீன்பிடி படகுச் சொந்தக்காரர்களும் உள்ளனர். இவர்கள் தமக்கு உதவியாளர்களாக ஒன்று அல்லது இரண்டு தொழிலாளர்களை சேவைக்கு அமர்த்துகின்றனர். உடப்பு, வலை மீன்பிடியின் மேலாதிக்கத்துக்கு ஆட்பட்டது. இது பெரிதும் கஷ்டமான வேலை. தொழிலாளர்கள் தெப்பங்களையோ அல்லது கட்டு மரங்களையோ வலைகளை கடலுக்கு கொண்டு செல்ல பயன்படுத்த வேண்டி உள்ளது. பின்னர் மீன்பிடி வலைகளை கரைக்கு வலித்து இழுத்துவர வேண்டும்.

வலைச் சொந்தக் காரரிடம் வேலை செய்யும் ஐ. குமார் கூறியதாவது: "நான் இந்தத் தொழிலை எனது இளமைக் காலத்திலிருந்தே செய்து வருகிறேன். நாம் கடற்கரைக்கு விடியற் காலையில் சென்று மாலையில் 6 அல்லது 7 மணிக்கே வீடு திரும்புகின்றோம். எமது தினசரி வருமானம் எவ்வளவு என்று திட்டவட்டமாக கூற முடியாது. மீன்பிடி காலத்தில் கடல் பெருக்கெடுக்குமானால் நாம் கடலுக்கு செல்ல முடியாது. எமக்கு செலவுக்கு போதிய வருமானம் கிட்டாது" என்றார்.

இதனால் மீனவர்கள் வேறு இடங்களுக்கு இடம் பெயரத் தள்ளப்படுகின்றனர். கடல் பெருக்கெடுக்கும் ஆறு மாத காலத்தில் அவர்கள் மன்னார், கொக்கிளாய், நாயாறு, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, போன்ற வடக்கு- கிழக்கு மாகாண பகுதிகளுக்கு செல்வது வழக்கமாக இருந்தது. ஆனால் இன்று இடம் பெறும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான இலங்கை அரசாங்கத்தின் யுத்தத்தினால் அந்த இடங்களில் மீன்பிடியில் ஈடுபடுவது சாத்தியமின்றி போய்விட்டது. மீனவர்கள் இப்போது பொலிசாரிடம் இருந்து அனுமதி பெற வேண்டும். வர்த்தகர்கள் மீன்பிடி படகுகளை வாடகைக்கு அமர்த்தத் தயங்குகின்றார்கள். பிரேக்குகள் உடையுமோ அல்லது மீன்பிடிக் கருவிகளை இழக்க நேரிடுமோ என அவர்கள் அஞ்சுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF JAFFNA LIBRARY PERIODICAL DIVISION

# தமிழ் பாடசாலை மாணவன் புகையிரதத்தில் பயணம் செய்கையில் இனவாதக் குண்டர்களால் தாக்கப்பட்டார்

நமது நிருபர்

கொழும்பு இந்துக் கல்லூரியின் நூற்றுக் கணக்கான மாணவர்கள் சக மாணவன் ஒருவர் இனவாதக் குண்டர் கும்பலால் பட்டப்பகலில் தாக்கப்பட்டதை எதிர்த்து மார்ச் 23ம் திகதி வகுப்புகளில் இருந்து வெளிநடப்புச் செய்தனர். பாடசாலை நிர்வாகத்தின் நெருக்குவாரங்கள் காரணமாக ஒரு பகிஷ்கரிப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதைக் கைவிட்டு, எதிர்ப்பைக் காட்டும் வகையில் கறுப்பு பட்டி அணிந்து பாடசாலைக்கு செல்ல உயர் மாணவர் மன்றம் முடிவு செய்தது. இலங்கை அரசாங்கமும் வெகுஜனத் தொடர்புச் சாதனங்களும் தூண்டிவிட்டுள்ள இந்த சிங்கள சோவினிசத்தின் இலட்சணங்கள் பெற்றோர்களையும் ஆசிரியர்களையும் ஆத்திரம் அடையச் செய்துள்ளது.

மார்ச் 22ம் திகதி மகாலிங்கம் கோபிகிருஷ்ணா [18வயது] நீர்கொழும்பில் இருந்து கல்கிசை வரை சேவையில் ஈடுபடும் புகையிரதத்தில் அதிகாலை 5.55 மணிக்கு ஏறினார். புகையிரதத்தில் பொதிகளை வைக்கும் தட்டில் தனது புத்தகப் பையை போட்ட கோபிகிருஷ்ணா, பயணிகளின் நெரிசல் காரணமாக அதில் இருந்து சற்று அப்பால் தள்ளி நிற்க நேரிட்டது. "இந்தப் பயணத்தின் போது புகையிரதப் பெட்டிக்குள் ஒரு விதமான குழப்பநிலை காணப்பட்ட போதிலும் அது என்ன என்பதை பார்த்து புரிந்துகொள்ள முடியவில்லை. "எனது பேக்கினுள் பாடசாலை கொப்பி புத்தகங்களும் ஒரு மதிய போசன பெட்டியுமே இருந்தன" என கோபிகிருஷ்ணா *உலக சோசலிச வெப் தள (WSWS)* நிருபர்களிடம் தெரிவித்தார். "புகையிரதம் கொள்ளுப்பிட்டி புகையிரத நிலையத்தை வந்தடைந்ததும் -நான் இறங்க வேண்டிய தரிப்புக்கு ஒரு தரிப்பு முன்னதாக- நான் எனது பேக்கை எடுக்கப் போனேன். நான் பேக்கை தட்டில் இருந்து எடுக்கும் போது அது திறக்கப்பட்டிருந்ததோடு சகல புத்தகங்களும் கீழே கொட்டின. அப்போது ஒரு கும்பல் என்னைத் தாக்கத் தொடங்கியது. அவர்கள் என்னைக் குத்தியும், உதைத்தும் அடித்தனர். "நீ தான்டா புகையிரதத்தில் குண்டு வைக்கிறவன்" எனக் கூச்சலிட்டதோடு தொடர்ந்தும் தாக்கினர். "இதன் பின்னர் தான் நான் யாரோ எனது பேக்கை சந்தேகப்பட்டு திறந்திருப்பதையும் தமிழ் புத்தகங்கள் இருந்ததை கண்டுள்ளதையும் புரிந்து கொண்டேன். அவர்கள் எனது மதிய போசன பெட்டியைக் கையாடியுள்ளனர். அதனுள் இடியப்பம் மட்டுமே இருந்தது. இந்த பேக் ஒரு தமிழ் மாணவனுடையது என்பதை தெரிந்து கொண்ட இக்கும்பல், நான் அதை எடுத்துச் செல்ல வரும்வரை காத்திருந்து இத்தாக்குதலில் இறங்கியது. "பேக்கில் இல்ந்து வீசப்பட்ட புத்தகங்களைப் பொறுக்கியெடுத்து தூள் தூளாக கிழித்து எறிந்தனர். இந்த நடவடிக்கைகளின் போது என்னை 'புலி' எனத் திட்டினார்கள். என்னை தாக்கியவர்களிடம் நான் ஒரு பாடசாலை மாணவன் என்பதை கூறினேன். எனது பாடசாலை சீருடையில் இருந்த இலட்சினையை அவர்களுக்கு காட்டினேன். நான் கூறியதை எல்லாம் அவர்கள் கணக்கெடுக்கவில்லை. புகையிரதத்தில் பயணம் செய்த பெண்களும் வேறு சில பிரயாணிகளும் இத்தாக்குதலை எதிர்த்ததோடு ஒரு அப்பாவி மாணவனை தாக்க வேண்டாம் என்றும் வேண்டினர். ஆனால் குண்டர்களின் தாக்குதல் தொடர்ந்தது.

பம்பலப்பிட்டி புகையிரத நிலையம் வந்ததும் நான் புகையிரதத்தில் இருந்து இறங்க முயற்சித்தேன். ஆனால் அவர்கள் என்னை இறங்க விடாது தடுத்தனர். அவர்களின் பிடியிலிருந்து விடுபடப் பெரிதும் போராட வேண்டி ஏற்பட்டது. புகையிரதம் வேகமாகப் புறப்படத் தொடங்கியதும் அவர்கள் என்னைப் பிடித்து வெளியே தள்ளினர். நான் பிளாட் போமில் முகம் அடிபட விழுந்தேன். இந்தத் தாக்குதலினாலும் பிளாட்போமில் விழுந்ததாலும் எனது இடது கன்னம் வீங்கியது. சில காலங்களுக்கு முன்னர் தான் நான் குடலிறக்கத்துக்கான சத்திர சிகிச்சைக்கு உள்ளானேன். இந்தத் தாக்குதல் எனது முழு உடலிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது."

இறுதியில் கோபிகிருஷ்ணா பாடசாலைக்கு சென்றதும் அங்கு செ.ஜோன்ஸ் அம்புலன்ஸ் சேவையினரால் சிகிச்சையளிக்கப்பட்டது. பாடசாலை அதிபர் கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் ஒரு முறைப்பாட்டைச் செய்யும்படி வேண்டினார். பொலிசார் கோபிகிருஷ்ணாவின் முறைப்பாட்டை பதிவு செய்வதில் அக்கறையோ அல்லது அனுதாபமோ காட்டவில்லை. அத்துடன் நின்றுவிடாத பொலிசார் கோபிகிருஷ்ணாவை கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்துக்கு கூட்டிச் சென்ற பாடசாலை ஆசிரியரிடமும் ஒரு தொகை கேள்விகளை எழுப்பினர்: "நீங்கள் யாழ்ப்பாணமா? நீங்கள் இவரை ஆதரிக்கின்றீர்களா? புலிகளினால் ஏற்படும் குண்டு வெடிப்பு ஆபத்தை பற்றி உங்களுக்கு விளங்கவில்லையா? நீங்களும் அவர்களை ஆதரிக்கின்றீர்களா?" ஆகிய கேள்விகளை எழுப்பினர். பெரும் இழுத்தடிப்பின் பின்னரே பொலிசார் முறைப்பாட்டை பதிவு செய்தனர்.

ஆசிரியரை ஆத்திரமூட்டும் விதத்தில் பொலிசாரால் எழுப்பப்பட்ட ஒரு தொகை கேள்விகள் தற்செயலானது அல்ல. கொழும்பில் தமிழீழ விடுதலைப் புலிகளால் நடாத்தப்பட்டதாக நம்பப்படும் ஒரு தொகை குண்டு வெடிப்புகளைத் தொடர்ந்து தமிழர்களுக்கு எதிரான பொலிசாரினதும் இராணுவத்தினரதும் அட்டூழியங்களும் ஆத்திரமூட்டல்களும் உக்கிரம் கண்டுள்ளது. தமிழர் எனச் சந்தேகிக்கப்படும் எவரையும் வீதிவழிகளில் நிறுத்திச் சோதனையிடவும் விசாரணை செய்யவும் பாதுகாப்புப் படைகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆதரவாளர்கள் எனக் குற்றச்சாட்டப்பட்ட நூற்றுக்கணக்கான தமிழர்களைக் காலவரையறையின்றி தடுத்துவைக்கவும், நீதி விசாரணைக்கு இட்டுச் செல்லவும் நாட்டின் பாதுகாப்பு சட்டங்கள் இடமளிக்கின்றது.

உலக சோசலிச வெப் தளத்துடன் கலந்துரையாடுகையில் கோபிகிருஷ்ணாவின் தாயார் பின்வருமாறு குறிப்பிட்டார்: "ஓடும் ரயிலில் இருந்து எனது பிள்ளையை அவர்கள் கீழே தள்ளிய போது அவர் தண்டவாளத்துள் வீழ்ந்து நெரியுண்டு போகாமல் காப்பாற்றியதற்காக நான் ஆண்டவனுக்கு நன்றி கூற வேண்டும். எனது கவலை எல்லாம் பாடசாலை மாணவனின் உரிமை மீறப்படுவது பற்றியதே. அவர் தமிழரானாலும் சரி சிங்களவரானாலும் சரி அந்த உரிமை மதிக்கப்பட வேண்டும். ஆனால் இந்த விடயத்தில் அவர்கள் இதைக் கணக்கில் எடுக்க அடியோடு தவறிவிட்டார்கள். இந்தத் தாக்குதலுக்கும் பயமுறுத்தலுக்கும் பின்னர் எனது மகனை நீர்கொழும்பில் இருந்து பாடசாலைக்கு அனுப்ப நான் அஞ்சுகிறேன். பாடசாலைக்கு சமீபமாக ஒரு இடத்தைத் தேடிக் கொள்ள நான் யோசிக்கின்றேன். ஆனால் அது செலவுக்கிடமானது" என்றார்.

கொழும்பு இந்துக் கல்லூரி மாணவர்கள் இச்சம்பவம் பற்றி கேள்விப்பட்டதுதான் தாமதம் நூற்றுக்கணக்கானவர்கள் வகுப்புகளில் இருந்து வெளியேறி அதிபரின் அலுவலகத்தை சுற்றி வளைத்தனர். மாணவர்கள் ஒரு ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்த வேண்டும் என வேண்றினர்.



எம். கோபிகிருஷ்ணா

ஆனால் அதிபர் தாம் அவசியமான சகல நடவடிக்கைகளும் எடுத்திருப்பதால் அத்தகைய ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட வேண்டாம் என வேண்டிக் கொண்டார். இந்துக் கல்லூரி பாடசாலை அபிவிருத்தி சபை நிறைவேற்றுக் குழுவினால் [மார்ச்26]கூட்டப்பட்ட ஒரு அவசரக் கூட்டத்தில் கணிசமான தொகையினர் கலந்து கொண்டதோடு இந்த இனவாத தாக்குதலையிட்டு அவர்கள் ஆத்திரமும் வெறுப்பும் அடைந்திருந்தனர். இதில் கலந்து கொண்டவர்களில் சிலர் பரந்த அளவிலான எதிர்ப்பு நடவடிக்கையின் அவசியத்தை வலியுறுத்தினர். இந்த ஆண்டின் தொடக்கத்தில் இரண்டு யாழ்ப்பாண பாடசாலை மாணவர்கள் இரகசியப் பொலிஸ் விசாரணைக்கென கைது செய்யப்பட்டு கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டதற்கு எதிராக அங்கு இடம் பெற்ற பரந்தளவிலான பாடசாலை பகிஷ்கரிப்பை நினைவுபடுத்தினர். இக்கட்டத்தில் மீண்டும் தலையிட்ட பாடசாலை அதிபர், அத்தகைய நடவடிக்கை கொழும்பில் சாத்தியமானதோ அல்லது அவசியமானதோ அல்ல எனத் தெரிவித்தார். ஆனால் கோபிகிருஷ்ணாவின் தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து கொழும்பில் மட்டும் தமிழர்களுக்கு எதிரான இத்தகைய பல தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளன.

## ரூபா 200,000 நிதியை வெற்றி கொள்வோம்!

இதுவரை திரண்டுள்ள தொகை ரூபா.105540

உலக ட்ரொட்ஸ்கிசக் கட்சியான நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவும் அதன் இலங்கைப் பகுதியான சோசலிச சமத்துவக் கட்சியும் உலக சோசலிச வெப் தளத்தின் மூலம் தொழிலாளர்கள், இளைஞர்கள், ஒடுக்கப்படும் மக்கள் புத்திஜீவிகளை மார்க்சிச கலாச்சாரத்தினால் ஆயுதபாணிகளாக்கிக் கொண்டுள்ளது. இந்த வரலாற்றுப் பணிக்குத் தோள் கொடுப்பதையிட்டு நாம் பெரிதும் மகிழ்ச்சியடைகிறோம்.

இந்த உலக சோசலிச வெப் தளம் ஏற்கனவே ஆங்கிலம், ஜேர்மன், பிரான்ஸ், குரோஷியன், ரூஷ்ய, இந்தோனேஷிய, சிங்கள மொழிகளில் செயற்பட்டு வருகின்றது. வெகு விரைவில் இது தமிழிலும் இயங்கத் தொடங்கும் என்பதை எமது அங்கத்தவர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் அறிவிக்க விரும்புகின்றோம்.

இந்த வரலாற்றுப் பணியின் அவசியமாகியுள்ள தொழில்நுட்பத் துறையை மேலும் அபிவிருத்தி செய்யும் பொருட்டு எம்மால் ஆரம்பித்து வைக்கப்பட்ட ரூபா.200000 உதவி நிதிக்கு உதவி செய்தவர்களுக்கு நன்றி கூறுகின்றோம். சிறப்பாக மிகவும் இக்கட்டான வாழ்க்கை நிலைமைகளுக்கு மத்தியிலும் யாழ்ப்பாணத்திலும், வன்னியிலும் இருந்து எமக்கு ரூபா.50,000 உதவி நிதி வழங்கியவர்களுக்கு நன்றி கூறியாக வேண்டும்.

சோசலிச சமத்துவக் கட்சி





சந்தா தபால் கட்டணம் உட்பட

| | |
|---|---|
| இதழ் 3 | ரூ.36 |
| இதழ் 6 | ரூ.68 |
| இதழ் 12 | ரூ.128 |
| இதழ் 24 | ரூ.248 |

விபரங்களுக்கு :
தொழிலாளர் பாதை
முகாமையாளர்,
90, 1 வது மாளிகாகந்த
ஒழுங்கை, மருதானை,
கொழும்பு 10 தொ.பே. 682220


## சோசலிச சமத்துவக் கட்சியில் சேருங்கள்

பெயர்: ..............................................................................

முகவரி: ..............................................................................

கையொப்பம்: ..................................................திகதி: ..............................

இக் கூப்பனை அனுப்ப வேண்டிய முகவரி:

பொதுச் செயலாளர்,
சோசலிச சமத்துவக் கட்சி
90, 1 வது மாளிகாகந்த ஒழுங்கை, மருதானை, கொழும்பு 10.
தொ.பே. 682220.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

90,1 வது மாளிகாகந்த ஒழுங்கை, கொழும்பு-10ல் வசிக்கும் தீபால் ஜயசேகர ஆகிய என்னால் இல6, போதிராஜாராம மாவத, கொழும்பு10ல் உள்ள பிரின்ட் அன்ட் பிரின்ட் கிரபிக் லிமிடட்டில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.